அமுதசுரபி

நவம்பர் 94

விலை ரூ. 6



உள்ளே : இரும்பு-எஃகு நகரத்தில் தமிழ் மகளிரின் மகத்தான விழா

அமுதசுரபி

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே. - பாரதியார்.

நவம்பர் '94 பவ - கார்த்திகை
மலர் : 47 இதழ் : 7



இந்த இதழில்...

பதிப்பாளர் ஏ.வி.எஸ். ராஜா. கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியம். ஆசிரியர் - 'கலைமாமணி' விக்கிரமன். இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார். தனி இதழ் விலை : ரூ. 6/- ஆண்டுச் சந்தா - ரூ. 72/-. அட்டையில் : ஜம்ஷட்பூர் நகரத்தில் நடைபெற்ற பொன்விழாவில் கலந்து கொண்ட மங்கையர். வண்ணப்படம் : யோகா

முத்தையா செட்டியார் சிலை திறப்பு

சென்னை மாநகரத்தின் முதலாவது மேயராக இருந்த பத்மபூஷண் டாக்டர் இராஜா சர் எம்.ஏ.முத்தையா செட்டியார் அவர்களின் திருவுருவச் சிலை, மாநகராட்சி கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ராஜா அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிலையின் திறப்பு விழா 21.10.94 அன்று மாலை நடந்தது.

விழாவில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைத்தார்.

மாநகராட்சி கட்டடத்தையொட்டியுள்ள 'சைடன் ஹாம்ஸ் ரோடு' இனிமேல் 'ராஜா முத்தையா சாலை' என்று அழைக்கப்படும் என முதல்வர் அறிவித்தார்.

விழாவுக்கு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தலைமை தாங்கினார். உச்சநீதி மன்ற நீதிபதி ச.மோகன் வாழ்த்துரை வழங்கினார். முத்தையா செட்டியார் சிலை திறப்பு விழாக் குழு தலைவர் டாக்டர் எஸ்.வி.சிட்டிபாபு வரவேற்றுப் பேசினார்.

டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி நன்றி கூறும்போது 'ராஜா முத்தையா சாலை' என்று பெயர் சூட்டியதற்கும் பாடநூலில் பாடமாக எனது தந்தையின் வரலாற்றைச் சேர்க்கப்படும் என்று அறிவித்ததற்கும் முதல் அமைச்சருக்கு என்றென்றும் கடமைப்பட்டு இருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்.

விழாவில், பாடகர் சீர்காழி சிவ.சிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். ஆர்.ஜெயசங்கர் குழுவினரின் நாதஸ்வர கச்சேரி நடந்தது. வலையப்பட்டி ஏ.ஆர். சுப்பிரமணியம் சிறப்பு தவில் வாசித்தார். அமைச்சர்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள், வாரியத் தலைவர்கள், தொழில் அதிபர்கள், அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எங்கள் டாடா நகர்

டாடா நகரில் பல்வேறு தென்னிந்திய சங்கங்கள் உண்டு. இந்த ஊரில் எல்லா மத, மொழிகளையும் கொண்டவர்கள் வாழ்வதால் இதை பீஹார் மாநிலம் என்பதை விட குட்டி இந்தியா என்றே சொல்லலாம். நம் தென்னிந்தியர்கள் எங்கு சென்றாலும் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்குக் கோயில் எழுப்பி விழாக்கள் கொண்டாடுவதைக் காணலாம்.



தென்னிந்தியர்கள் எழுப்பிய கோயில்கள், டெல்கோ புவனகிரியில் அழகான சூழ்நிலையில் அமைந்துள்ள புவனேஸ்வரி அம்மன் கோயில் - இதைத் தனி ஒருவராக இருந்து பணம் திரட்டி இன்று பலரும் வந்து வணங்கும் கோயிலாக அமைத்தவர் திரு.ரங்கராஜன். ரங்கராஜனின் தாத்தா திரு. ராஜகோபாலன், நேரு அவர்கள் பிரதம மந்திரியாக இருந்தபோது அவரிடம் 'ஜோதிஷ ரத்னாகர்' என்று பட்டம் பெற்றவர். அவர் அடிச்சுவட்டைப் பற்றி வருவதால் திரு. ரங்கராஜன் எது சொன்னாலும் அது நடக்கும். இதை ஒரு பொதுச் சேவையாகச் செய்கிறார் திரு. ரங்கராஜன்.

டெல்கோ தமிழர்கள் - மாதர் சங்கம் என்றும், பாரதி சங்கம் என்றும் நடத்துகிறார்கள். பல கர்நாடக இசைக் கலைஞர்கள்ள வரவழைத்துச் சிறந்த நிகழ்ச்சிகளை அளிப்பதுடன், பல தமிழ்ப் பாடல்களையும் கற்றுத் தருகிறார் திருமதி. சீதாலக்ஷ்மி குருநாதன் அவர்கள். பரதநாட்டிய வகுப்புகள் நடத்தும் மாதவி நாட்டியப் பள்ளி'யின் தலைவி திருமதி சுஜாதா கிருஷ்ணனும் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வகுப்புகள் எடுக்கிறார். பல மாணவிகள் அரங்கேற்றம் நடத்தி, பல நிகழ்ச்சிகளையும் அளித்துள்ளனர். இவர் தட்சிணபாரத் மகாசமாஜத்திற்கு வாரம் 2 நாள் வந்து வகுப்பு எடுக்கிறார். அவருக்கு இலவசமாக வகுப்பு நடத்த இடம் அளித்திருக்கிறோம். கலைகளை வளர்க்க எப்போதும் சமாஜம் கை கொடுக்கும் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

இங்கு தமிழர்களின் எண்ணிக்கையும் அதிகம். கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் உள்ளனர்.

(Tinplate) டின்ப்ளேட்இல் உள்ள தமிழ்ச் சங்கம் : இங்குள்ள முருகன் கோயில் சக்தி வாய்ந்தது. வருடாவருடம் இங்கு காவடி எடுப்பவர்களும் உண்டு. இவர்கள் ராமநவமியை முன்னிட்டு 10 நாள்கள் தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். சென்ற 35 வருடங்களாக, தகரக் கொட்டகையாக இருந்த மண்டபம் தற்போது புதிய பொலிவு பெறவிருக்கிறது. அதற்கான கட்டட வேலைகள் தொடங்கிவிட்டன. இங்குள்ள அங்கத்தினர்கள் பலர் மூன்று தலைமுறைகளாக டாடா நகரிலேயே இருந்து வருவதால், ஹிந்தி கலந்த தமிழ் பேசுவார்கள். அதை 'ஹிந் தமிழ்' என்று சொல்லலாம்.

தமிழ்நாட்டை - சென்ட்ரல் ரயில் நிலையமே தெரியாத பல தமிழர் குடும்பங்கள் உள்ளன. பீஹாரில் பல வருடங்களுக்கு முன் 'பெரோ' என்ற இடத்தில் சில தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. (பிறகு இங்கு 'பெரோ' ஐயங்கார் என்று சொல்லிக் கொண்டு வைஷ்ணவர்கள் போல பெண்கள் 9 கஜம் புடைவை கட்டி, கல்யாணம் எல்லாம் செய்வார்கள். ஆனால் தமிழ்மொழியை ஏதோ சொப்பனத்தில் கேட்டது போல நினைப்பார்கள். எல்லாம் ஹிந்தி. வங்க மாநில எல்லை என்பதால் வங்காளிதான் பேசுவார்கள். 'ஆச்சார்யா' என்று பட்டம் கொண்டவர்கள். இவர்களில் பலர் டின்பிளேட்டில் உள்ள தமிழ்க் குடும்பங்களுடன்

திருமண சம்பந்தம் செய்துள்ளார்கள். முகப்பொலிவும், உடற்கட்டும் பார்க்க கம்பீரமாக இருப்பார்கள் 'பெரோ' ஐயங்கார்கள்.)

டின்பிளேட் தமிழ்ச் சங்கம் 150 அங்கத்தினர்களைக் கொண்டது. இந்த மண்டப அரங்கம் கல்யாணங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. மதராஸி சம்மேளனி தன்னுடைய 75ஆம் வருடத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடியதைப் பல்வேறு புத்தகங்கள் வெளியிட்டன.

இன்றைய தமிழ்ச் சங்கங்களில் முதலிடம் வகிப்பது பொன்விழாக் கொண்டாடிய தட்சிண பாரத் மகிளா சமாஜம். சுருக்கமாக - DBMS – என்று ஜெம்ஷெட்பூர் வாசிகளின் மனதில் நிற்கும் சங்கம். இதையும் இதன் பெருமைகளையும் 'அமுதசுரபி' ஆசிரியர் திரு. விக்கிரமனும், திரு. கல்கி ராஜேந்திரனும் வந்தபோது நேரில் கண்டு மகிழ்ந்தனர்.

கேரளவாசிகள் சேர்ந்து (டாடாவில் சாக்சி என்ற இடத்தில்) 'கேரளசமாஜம்' என்று ஒன்றைச் சிறப்பாக நடத்துகிறார்கள். இவர்களும் ஆங்கில மீடியம் பள்ளி ஒன்றை நடத்துகிறார்கள். எல்லாக் கேரளர்களும் சேர்ந்து புவனகிரியில் (புவனேஸ்வரி கோயில் அருகில்) குருவாயூரப்பன் கோயில் ஒன்றைக் கட்டியுள்ளனர்.

தெலுங்கு மொழி பேசும் ஆந்திரர்களும் ஆந்திர கிளப் என்பதன் மூலம் சாய் சத்சங்கம் ஒன்றை நடத்துகிறார்கள். இவர்களும் ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு பள்ளியும், ஆங்கில மீடியம் பள்ளி ஒன்றையும் சிறப்பாக நடத்துகிறார்கள்.

இவை தவிர குஜராத்தி சனாதன் சமாஜ், பார்ஸி அசோசியேஷன், வங்காள கிளப் கன்னட மகிளா சபா, பஞ்சாப் சபா, ராஜஸ்தானி பரிவர்த்தன் சங் என்று இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் தங்கள் இனத்திற்கென்று சங்கம் நடத்தியும் குருத்துவாரா, கோயில்கள், சமணர் கோயில் பார்ஸி கோயில், மசூதிகள் எல்லாவற்றையும் இச்சிறிய ஊரில் பார்க்கலாம். பல தரப்பட்ட மக்களுடன் வாழும் சந்தர்ப்பம் அளித்த டிஸ்கோவை டெல்கோவைஎன்றும் மனநிறைவுடன் வாழ்த்த வேண்டும். அதன் இரண்டின்பொருட்டு வேலை தேடிவந்த இந்தியர்களை அரவணைத்து ஓடும் இரண்டு நதிகள் காரகாய் சுவர்ணரேகாவையும் தெய்வமாக வணங்கவேண்டும். தண்ணீர்ப் பஞ்சம் என்பதையே சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் நான் கண்டதும் இல்லை. அனுபவித்ததும் இல்லை.

எங்கள் டாடாநகர் வாசிகளுக்கு தென்னிந்தியர்களுக்கு என்று ஓடும் (நகரும்) ரயில் "பொகாரோ ஸ்டீல்" முன்பு. இப்போது ஆலப்பி எக்ஸ்பிரஸ் என்ற பெயருடன் கேரளாவில் ஆலப்புழை வரை ஊர்ந்து சென்று சேரும். நிச்சயமாக நத்தையைவிட வேகமாக நகரும். இதில் பயணம் செய்பவர்கள் எவ்வளவு பொறுமைசாலிகள் என்று பிரயாணம் செய்தால் தெரியும்.

— கல்யாணி தேவநாதன்

நான் எதைக் கற்றுக் கொண்டேன்?

இந்தத் தலைப்பைப் படித்தவுடன் வாசகர்கள் நிச்சயமாக இந்தப் பள்ளியில் கல்வி கற்கும் ஒரு மாணவியின் அனுபவத்தையே படிக்கப் போகிறோம் என நினைப்பார்கள். வாழ்க்கையில் வெற்றிப்பாதையில் நடைபோட எதெல்லாம் தேவையோ அத்தனை நற்குணங்களையும் - உதாரணமாக பொறுப்பை ஏற்பது எப்படி? அதை நிறைவேற்றுவது எப்படி? பலரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவது எப்படி? பொறுமையாக, சாந்தமாக கீழ்ப்படிந்து நடப்பது எப்படி, ...இப்படி பல எப்படிகளைப் பற்றி இங்குதான் கற்றுக் கொண்டேன்.

புத்தம் புது மணப்பெண்ணாய் இந்த ஊரில் நுழைந்தவுடன் காணத்தகுந்த, ரசிக்கத்தகுந்த காட்சிகள் எவை, எவை எனக் கேட்டேன், என் கணவரை. முதலில் ஜுப்ளி பார்க்கைக் காட்டினார்; பிறகு சாக்சியில் டிஸ்கோ 'டிரக்குகள்' குப்பைக் கொயிலாவைக் கொட்டும் காட்சியைக் காட்டினார். சும்மா சொல்லக் கூடாது, டிஸ்கோ ஓர்க்ஸின் அனல் எழுப்பிய வண்ண, வண்ண மேகக் குவியல்களின் பின்னணியிலே அந்தக் குப்பைமேடுகூட அற்புதமாகத்தான் காட்சி அளித்தது. ஆனாலும் இன்னும் சிறந்த எதையாவது காட்ட மாட்டாரா என்ற ஏமாற்றம் என்னைச் சூழ்ந்த கணத்தில்தான் - தட்சிணபாரத் மகிள சமாஜத்திற்கு கூட்டிச் சென்றார்.

பெண்கள்தான் எங்கும் காட்சி அளித்தனர். என் உள்ளத்தில் உற்சாக அலைகள் ஆர்ப்பரிக்கத் தொடங்கின. அதன்பின் மகிள சமாஜத்தின் செயலாளராக கங்கா சுந்தரம் என்னை (திருமதி நீலகண்டனின் அறிவுரைப்படி) சேர்த்துக் கொண்டார். இன்றோ விண்ணையே தொட்டிட முயன்றிடும் பள்ளியின் உயர்வுக்கு மேலும் மேலும் பணி செய்திட காத்திருக்கும் அதன் உதவி தலைவி என்ற பதவியை பெருமையுடன் சுமக்கிறேன்.

திருமதி நீலகண்டனின் தன்னலமற்ற சேவை, சோர்வே இல்லாத உற்சாகத் துள்ளல், இதயத்தில் ஆயிரம் பிரச்னை இருந்தாலும் இனிய புன்னகை காட்டும் வதனம் இவை எப்போதுமே என்னை ஆச்சர்யப்பட வைக்கும் விஷயங்கள்.

தட்சிண பாரத் மகிள சமாஜ சபை இப்போது என் வாழ்வில் ஓர் உள் அங்கமாக மாறிவிட்டது. நான், பள்ளியின் பணிகள், அதன் அங்கத்தினர்கள் பற்றியெல்லாம் (முக்கியமாக என்னைக் கவர்ந்தவர்கள் பாமா, கங்கா, சித்ரா முதலியவர்கள்) சொல்லிக்கொண்டே போகலாம்.

—பிரேமா பாலசுப்ரமணியம்

பொன்விழா சிறக்க உதவிய குழுவினர் ↓



எஃகு நகரத் தமிழ்ப் பெண்களின் இணையற்ற சாதனை

நீண்ட நாள்களாக நான் பார்க்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'இரும்பு நகரம் ஜாம்ஷெட்பூர். 'அமுதசுரபி' ஆசிரியர் டாக்டர் விக்கிரமன் அவர்களின் தயவால் அங்கே போகச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஜாம்ஷெட்பூர் DBMS ஆங்கிலப் பள்ளி பொன்விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொள்வதற்காக, திரு. விக்கிரமனை அழைத்திருந்தார்கள். அவர் துணைக்கு என்னையும் அழைத்துக் கொண்டு ஜாம்ஷெட்பூர் புறப்பட்டு விட்டார்.

நான் எதிர்பார்த்தபடி தொழிற்சாலைகளின் புகையால் பாதிக்கப்பட்ட காய்ந்து போன ஒரு நகரமாக ஜாம்ஷெட்பூர் காணப்படவில்லை. மாறாக பசுமை நிறைந்த - திட்டமிட்டு அமைக்கப்பட்ட - ஒரு நகரமாகக் காணப்பட்டது. கடந்த எண்பது வருடங் களுக்கு மேலாக 'டாடா' தொழிற்சாலையில் பணிபுரியவென்று வந்த பல்வேறு தரப்பட்ட மக்கள், படித்த பெரும் விஞ்ஞானிகள், இஞ்ஜினியர்கள், தொழிலாளர்கள் என்று கன்யாகுமரி முதல் காஷ்மீரம் வரையிலான எல்லா மொழிபேசும் மக்களும் இங்கே சங்கமித்து வாழ்ந்து வரலாறு படைத்துவரும் ஒரு நகரம் ஜாம்ஷட்பூர் எஃகு நகரம். இந்த ஊரையே ஒரு குட்டி பாரத தேசம் என்று கூறலாம்.

இங்கே ஜாதிமத பேதமோ, மொழி வித்தி யாசமோ இல்லாமல் ஒருவருக்கொருவர் தொழிற் சாலைக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி ஒற்றுமையாகப் பழகியே ஆக வேண்டும். கணவர் தொழிற்சாலைக்குச் சென்றுவிட்ட பிறகு வீட்டில் வசிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் வாழும் மற்ற மாநிலப் பெண்களிடம் பேசிப்பழகியே தீர வேண்டும். தமிழ்ப் பெண் பெங்காலிப் பெண்ணு டனும், கன்னடப் பெண் பஞ்சாபிப் பெண்ணுடனும் மொழி பேதமில்லாமல் ஹிந்தியைப் பொது மொழி யாக வைத்துப் பேசிப் பழகியே ஆகவேண்டும். அந்த அளவில் இந்தியாவிலேயே இது ஒரு வித்தியாசமான நகரம்தான்.

ஜெம்ஷட்ஜி டாடா எனும் தீர்க்கதரிசியால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நகரத்தில் ஐம்பது வருடங் களுக்கு முன்னால் கணவர்மார்கள் வேலைக்குச் சென்றுவிட்ட நேரத்தில், தமிழ் பேசும் பெண்கள் பத்து பேருக்கு மேல் ஒன்று கூடி 'தட்சிண பாரத மஹிளா சமாஜம்' என்ற அமைப்பொன்றை ஏற்படுத்தி, பொழுதுபோக்காக 'நீடில் ஒர்க்', மாக்கோலம் போடுதல், சமையல் வகுப்பு நடத்துதல், பாட்டு வகுப்பு நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர். பின்பு இந்த சமாஜம் விரிந்து வளர்ந்து ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கிற்று.

இந்த ஐம்பது வருடங்களில் அந்தப் பள்ளி பெரிய ஆலமரமாக விரிவடைந்து, சுமார் 3500 மாணவர்கள் படிக்கும் அளவுக்கு இந்தியாவிலேயே ஒரு சிறந்த பள்ளிக்கூடமாகத் திகழ்கிறது.

1961இல் இந்த (DBMS) பள்ளியின் மகத்தான பொறுப்பைத் தன் தலையில் சுமந்துகொண்ட திருமதி. பானுமதி நீலகண்டன் என்பவரின் அயராத உழைப்பு, தீர்க்கதரிசனம், தன்னம்பிக்கை, மற்ற பெண்களை மதித்து நடத்தும் குணம், நிர்வாகத் திறமை ஆகியவை இந்தப் பள்ளியின் பெரும் வெற்றிக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. எல்லாரும் வியக்கும் அளவில் மிகப்பெரிய கட்டடங்களுடன் இந்தப் பள்ளியை வளர்த்திருக்கும் திருமதி பானுமதி நீலகண்டனின் திறமையை 'பொன்விழா' நிகழ்ச்சியின்போது டாடா தொழிற் சாலை மேனேஜிங் டைரக்டர் இரானி உள்பட பலரும் பாராட்டிப் புகழ்ந்ததில் வியப்பில்லை.

பிரமிக்க வைக்கும் தொழிற்கூடம். இந்தியாவின் பொருளாதாரத்தைத் தொய்யவிடாமல் பாதுகாத்து வரும் இந்தத் தொழிற்சாலைக்குள் காலடி வைத்ததே பெருமையாக இருந்தது.

மேலும் இந்தத் தொழிற்கூடத்தைப் படம் எடுத்துக் கொள்ளவும் 'சிறப்பு அனுமதி' எனக்கு வழங்கினார்கள் என்ற விதத்திலும் எனக்குப் பெருமையாக இருந்தது.

ஒரு தனிமனிதனின் முயற்சியால் எத்தனை லட்சம் குடும்பத்தினர் வீட்டில் கடந்த எண்பது வருடங்களில் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது பிரமிப்பாக இருந்தது. உண்மையிலேயே ஒவ்வோர் இதயமும் வணங்க வேண்டிய மாமனிதர், தீர்க்கதரிசனம் மிக்க ஜெம்ஷட்ஜி டாடா அவர்கள்!

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட இந்தத் தொழிற்சாலை பாரத நாட்டின், பெருமைக்கும், பொருளாதார உயர்வுக்கும் காரண மாகத் திகழ்கிறது.

அந்த அற்புத நகரத்துப் பெருமைகளுள் ஒன்றான தட்சிணபாரத மகிளா சபா நடத்தும் பள்ளியின் பொன் விழாக் கொண்டாட்டத்திற்குச் சென்று, பள்ளி மாணவிகளின் கலைத்திறன், ஆசிரியைகளின் அயராத உழைப்பின் பலன், சங்க அங்கத்தினர்களின் கலைச் சாதனைகளைப் படம் எடுத்து அளிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

கட்டுரை, வண்ணப்படம் : யோகா



தட்சிண பாரதமஹிளா சமாஜம் பொன்விழா

பத்மா கஸ்தூரி, டாக்டர் இராணி

1944ஆம் ஆண்டில் தென்னகத்திலிருந்து வந்த பெண்களால் இந்த இரும்பு நகரத்தில் நல்ல சத்துள்ள விதையாக நடப்பட்ட இந்த சமாஜம் இன்று விரிந்து, பரந்து, வேரூன்றித் தலைநிமிர்ந்து நிற்கிறது. சமாஜப் பள்ளியோ பெண்களால் நடத்தப் படும் பள்ளி என்று இந்தியாவிலேயே பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. 1993ஆம் ஆண்டு நவம்பர் மாத சமாஜக் கமிட்டிக் கூட்டத்தில், "1994 ஆம் ஆண்டு சமாஜப் பொன்விழா ஆண்டானதால் அதை மிகவும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்" என்று தீர்மானம் செய்யப்பட்டது.

அன்றிலிருந்தே சங்கத்தலைவியால் திட்டங்கள் தீட்டப்பட்டன. அங்கத்தினர்கள் முழு முயற்சியுடன் என்று? எப்பொழுது? எப்படிக் கொண்டாடலாம் என்று விதவிதமான ஆலோசனைகளை வழங்கி னார்கள். முடிவில் ஏப்ரல் 15,16,17 தேதிகளில் கொண்டாடுவது என்றும், இந்த விழாவுக்கு சமாஜத்தைத் தொடங்கிய மூத்த சகோதரிகளையும், சமாஜத்தின் வளர்ச்சிக்கு உழைத்த சகோதரிகளை யும், சமாஜத்தின் செலவில் வரவழைப்பது என்றும், அவர்கள் தங்குவதற்கு இங்கு முழு ஏற்பாடுகள் செய்வது என்றும், அவர்கள் வயது முதிர்ந்தவர்கள் ஆதலால் அவர்கள் அதிகச் சிரமமின்றி வநது போவதற்கு எல்லா வித வசதிகளையும் செய்வது என்றும், விழாவில் அவர்களைச் சிறப்பாக கௌர விப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

35 பேர் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப் பட்டது. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியே கமிட்டி அமைக்கப்பட்டு அங்கத்தினர்களுக்கு தனித் தனியாகப் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.



முதலாவதாக சமாஜ அங்கத்தினர்களுக்கு விதவிதமான போட்டிகள் வைப்பது. அதில் பங்கு பெறுவதற்கு அங்கத்தினர்களை அழைப்பது. முதல் தரமான பரிசுகளை வழங்குவது. முடிந்தவரை எல்லாருக்கும் பரிசுகள் கிடைக்க வழி செய்வது என்றும் தீர்மானம் செய்யப்பட்டு, கமிட்டி அங்கத்தினர்கள் அதை நிறைவேற்ற முழு முயற்சியுடன் ஒத்துழைத்தார்கள்.

பிப்ரவரி 19ஆம் தேதி, எல்லாரையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் என்னென்ன போட்டிகள்? எப்பொழுது நடைபெற வேண்டும்? ஏப்ரல் 16,17 தேதிகளில் நடக்கும் விழாவிற்குத் தலைமை தாங்க யாரை அழைப்பது என்பதும் முடிவு செய்யப்பட்டது.

மார்ச் 5ஆம் தேதி விநாடிவினா போட்டியுடன் பொன்விழாப்போட்டி தொடங்கப்பட்டது. வாரம் இரண்டு போட்டிகள் என்று, மாறுவேடப் போட்டி, பேச்சுப்போட்டி, எழுத்துப் போட்டி, பாட்டுப் போட்டி, சமையல் போட்டி, காரம், தித்திப்பு வகைகள், சாலட், அலங்காரப் போட்டி, கோலப் போட்டி என்று போட்டிகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றன. அங்கத்தினர்கள் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் நடுவர்களை அழைத்து, அவர்களும் மிகவும் அழகாகவும், பெருமுயற்சியுடனும் முடிவுகளைத் தெரிவித்தார்கள்.

கோலப்போட்டியில் ஒரு புதிய முயற்சி செய்யத் தீர்மானம் செய்து, இரும்பு நகரில் உள்ள எல்லா மகளிர் சங்கத்திற்கும் கோலப்போட்டியில் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பினர். சுமார் 30 பெண்கள் சங்கங்களிலிருந்து வந்து ஆர்வமுடன் கலந்து கொண்டு போட்டியைச் சிறப்பித்துக் கொடுத்தார்கள். மாக்கோலம், பொடிக்கோலம், பூக்கோலம், தான்யக் கோலம், ரங்கோலி என்று பள்ளியின் எல்லா அறைகளையும் அவர்கள் அலங்கரித்து விட்டார்கள். இந்தப் போட்டி பொன்விழாப் போட்டிகளில் சிகரமாக அமைந்ததில் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி.

ஏப்ரல் 13 : சுட்டெரிக்கும் வெயிலின் நடுவே காலை 11 மணி அளவில் மூன்று பள்ளிகளிலும் படிக்கும் சுமார் 4000 குழந்தைகளுக்கும் பொன் விழாத் தொடக்கமாக ஐஸ்கிரீம் வழங்கப்பட்டது.

வெளியூரிலிருந்து வந்திருந்த மூத்த சகோதரிகள் இதில் வந்து கலந்துகொண்டு குழந்தைகளுக்கு ஐஸ்கிரீம் வழங்கினார்கள். நர்சரியில் படிக்கும் சின்னஞ்சிறு குழந்தைகளின் முகத்தில் தெரிந்த ஆனந்தமே மகத்தான பொன்விழாவின் தொடக்கமாக அமைந்தது. மகிழ்ச்சி மேலிட்ட குழந்தைகளின் ஒருமித்த "தேங்க்யூ ஆன்ட்டி" குரல்களைக் கேட்டதில், வெயில், வியர்வை, சோர்வு எல்லாம் எங்கோ மறைந்து, மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து நின்றது.

ஏப்ரல் 14 : தமிழ்ப் புத்தாண்டு. காலை விடியும் முன்பே எழுந்து வீட்டில் புத்தாண்டைக் கொண்டாடிவிட்டு சமாஜ அங்கத்தினர்கள் பள்ளியின் அலங்காரத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டுவிட்டார்கள். சமாஜஹாலின் மேடையில் இந்த இரும்பு நகரமும், ஜம்ஷெட்ஜி டாடாவும், தொழிற்சாலையும் பின்னணியில் இருக்க பராசக்தியின் கைகளிலிருந்து சமாஜம், ஆங்கில, ஹிந்தி, பெண்கள் தொழிற்கல்விப் பள்ளி என்று மேடையை அழகுற அலங்கரித்தார்கள்.

தவிர ஹால் முழுவதும் சமாஜ வளர்ச்சி, பள்ளியின் வளர்ச்சி, மேலும் வருங்காலத் திட்டங்கள் என்று மிகவும் அழகாக அலங்கரித்து வைத்தார்கள். மேலும் சமாஜத்தின் ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு மைல்கல்லில் வடிக்கப்பட்டு மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பள்ளியின் நடுவில் இருக்கும் "பாஸ்கெட் பால் கோர்டில்" தமிழ் நாட்டையே அலங்கரித்து விட்டார்கள். கோயில், கோபுரம், யானை, தூண்கள், குடிசைகள், மாடுகள், வண்டிகள் என்று தமிழ்நாட்டின் சூழ்நிலையைத் தத்ரூபமாகக் கொண்டுவந்து கண்முன் நிறுத்தியிருந்தார்கள்.

ஏப்ரல் 15 : வெள்ளிக்கிழமை பள்ளியில் இருக்கும் சரஸ்வதி கோயிலில் அபிஷேக ஆராதனைகள் காலை 8.00 மணி அளவில் தொடங்கப்பட்டன. கான்டீனிலிருந்து பிரசாதமாக வடை, கொழுக்கட்டை வரவழைக்கப்பட்டது. ஒரு சகோதரி வீட்டிலிருந்து சுண்டல் செய்து எடுத்து வந்திருந்தாள். நிவேதனம் முடித்து எல்லாருக்கும் காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. சமாஜ அங்கத்தினர்களும், வெளியூரிலிருந்து வந்திருந்த சகோதரிகளும் மறுநாள் செய்ய வேண்டிய பணிகளுக்காகப் பிரிந்து சென்றார்கள். சகோதரிகள் மறுநாள் கலைநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வதிலும், விஞ்ஞான, கணித, ஹோம்சயன்ஸ் கூடங்களின் திறப்பு விழாவிலும் தீவிரமாகப் பணியாற்றினார்கள்.

அன்றே மாலை 6.00 மணிக்கு சமாஜத்தை அடுத்துள்ள விளையாட்டு மைதானத்தில் பள்ளிக் குழந்தைகளின் , பெற்றோர்களால் மிகப் பெரிய அளவில் 'மேளா' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பள்ளிச்சிறுவர்கள், சிறுமியர், பெற்றோர்கள் என்று அந்த மேளாவில் திரளாக வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மேளாவில் விதவிதமான சிற்றுண்டிகள், பலவிதமான விளையாட்டுப் போட்டிகள் என்று இரவு 10.30 மணி வரை நடைபெற்றன.

மேளாவில் சாப்பிடச் செல்ல முடியாத சகோதரிகளுக்கு, கான்டீனில் இரவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பள்ளிக் கட்டடம் முழுதும் இரவில் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

ஏப்ரல் 16 : காலை 8 மணியிலிருந்து 9 மணிவரை, சென்னையிலிருந்து பிரத்யேகமாக வந்திருந்த தயாளன் குழுவினரின் கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை முதலிய தமிழகப் பாரம்பரியத்தை உணர்த்தும் நடனங்கள், ஏற்பாடு செய்யப்படடு நம் பள்ளிக்கூடங்களின் குழந்தைகள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் சமாஜ அங்கத்தினர்கள் யாவரும் பொன்விழாவுக்கு வந்திருந்த விருந்தினர்களுடன் கண்டுகளித்தனர். இந்த

நிகழ்ச்சி நடைபெற்ற இடம் கிராமியச் சூழ்நிலை போல் 'தெர்மோகோல்' கொண்டு அமைக்கப் பட்டது. மாலையிலும் 5 மணியிலிருந்து 6 மணிவரை இந் நிகழ்ச்சி ஜாம்ஷெட்பூரின் நம் பள்ளிக்கூடங் களுடன் தொடர்பு கொண்ட பொதுமக்களுக்காக நடத்திக் காட்டப்பட்டது. இந்தப் பொன்விழாவின் சிறப்பம்சமாக, திறப்புவிழா நடத்தப்பட்டுப் பொதுமக்களுக்குக் காணிக்கையாக்கப்பட்ட பல நிகழ்ச்சிகள் பின்வருமாறு :

காலை 9 மணி : சயன்ஸ் ஆக்டிவிட்டி ரூம் என்ற ஓர் அறை டாக்டர் மொகந்தி அவர்களால் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

காலை 9.30 மணி : மேத்தமேட்டிக்ஸ் லேப் ஒன்றினை ஜாம்ஷெட்பூரில் முதன் முதலில் நம் பள்ளிக்கூடத்தில் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தீவிரமாகச் செயல்பட்டு திரு. கங்கூலி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

காலை 10 மணி : ஜாம்ஷெட்பூரின் முதல் பெண்ணான திருமதி டெய்சி இரானி அவர்களால் ஸமாஜத்தின் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. ஸமாஜத்தின் 50 ஆண்டு வளர்ச்சி, அதன் நோக்கம், செயல்பாடு, சமூகத்திற்குச் செய்துவரும் சேவை களை விளக்கும் கண்காட்சியில் நமது ஸ்தாபக அங்கத்தினர்களின் புகைப்படங்களும் காட்சியாக வைக்கப்பட்டு, நமது தமிழகப் பாரம்பரியத்தை விளக்கும் சில காட்சிகளும் அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன.

நமது ஸமாஜத்தின் மைல்கற்களாக ஸமாஜ் சக்தி ரூபத்தில் டாடா ஸ்டீலின் உதவியுடன் வெற்றிகர மாக நடத்திவரும் பள்ளிக்கூடங்களைப் பற்றிச் சித்திரித்த காட்சிகளும் குறிப்பிடத்தக்கன.

10.30 மணி : 'Womens Career Academy'யில் திருமதி ஜரீன் பஸீன் அவர்களால் பியூட்டி கல்ச்சர் திறப்பு விழா செய்யப்பட்டது.

11 மணி : ஹிந்தி பள்ளிக்கூடத்தின் ஹோம் சயன்ஸ் லேப், திருமதி தர்வின் மெஹ்ரா அவர் களால் திறந்து வைக்கப்பட்டது.

பகல் 1 மணி : பொன்விழாக் கமிட்டி அங்கத் தினர்களுக்கு பட்டுப்புடைவையும் ஸபாரி ஸூட்டும் ஸ்தாபக அங்கத்தினர்களின் கரங்களால் வழங்கப் பட்டு சுவையான விருந்தும் அளிக்கப்பட்டது.

மாலை 5 மணி : கண்காட்சி, பார்வையாளர் களுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

மாலை 6.30 மணி : டாட்டா ஸ்டீலின் நிர்வாக இயக்குர் திரு. டாக்டர் இரானி, திருமதி இரானி இருவரும் இணைந்து இன்றுவரை ஸமாஜத்தை நிர்வகித்த கமிட்டிகளின் தலைவி, உபதலைவி, செயலாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கிரானைட் பதிவுக்கல்லை, பலத்த கரவொலிக் கிடையில் திறந்து வைத்தனர்.

மாலை 6.45 மணி : திருமதி பத்மா கஸ்தகீர், (ஓய்வுபெற்ற பிரதம நீதிபதி, கல்கத்தா) அவர்களால் ஜிம்னேஷியம் திறந்து வைக்கப்பட்டது. இது ஸமாஜத்தின் நெடுநாளையக் கனவு ஆகும்.

மாலை 7 மணி : ஸமாஜத்தின் ஸ்தாபகர்கள் மேடையில் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு சந்தன மாலைகள் அணிவிக்கப்பட்டன. பின்னர் டாக்டர். இரானி அவர்களின் கரங்களால் ஒவ்வொரு வருக்கும் காஞ்சிபுரம் பட்டுப்புடைவையும், பொற் காசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதற்குப்பின் திரு. பத்மநாபன் அவர்கள் மேடைக்கழைக்கப்பட்டு அவர் ஆற்றிய சேவைக்காக, கோபுரவடிவ கடி காரம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். நிகழ்ச் சிக்கு வரமுடியாத ஸ்தாபக அங்கத்தினர்களின் பெயர்களும், அவர்கள் அனுப்பிய விசேஷச் செய்திகளும் வாசிக்கப்பட்டன. மறைந்த திரு. கல்யாணகிருஷ்ணன் அவர்களின் சேவையையும் நினைவு கூர்ந்தனர்.

விழா மேடைக்குக் கீழே, வெளியூரிலிருந்து பொன் விழாவுக்கு வந்திருந்த நம் மூத்த ஸமாஜ் அங்கத்தினர்களும், அவர்களுடன் எப்பொழுதும் நம் ஸமாஜத்துக்கு உதவிக்கரம் நீட்டிய அவர்கள் கணவன்மார்களும் முதல்வரிசையில் அமர்த்தப் பட்டு சந்தனமாலை அணிவிக்கப்பட்டு, பட்டுப் புடைவை அல்லது ஸபாரி ஸூட் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தன்னலமில்லாது சேவை செய்து வரும் திருமதி பானுமதி நீலகண்டன் அவர்கள் ஹிந்தி ஸ்கூல், இங்கிலீஷ் ஸ்கூல் 'Women Career Academy' சார்பாக காசோலை அளித்து கௌரவிக்கப்பட்டார். திரு. நீலகண்டன் மேடைக்கழைக்கப்பட்டு சந்தனமாலை அணிவிக்கப்பட்டு டாக்டர் இரானியால் கௌர விக்கப்பட்டார். திருமதி. லக்ஷ்மி குமாரன் அவர்கள் ஸ்தாபகர்களின் சார்பாகச் சிறப்புரையாற்றினார். ஸ்தாபகர்களின் சார்பாக திருமதி கல்யாணி இராம ஸ்வாமி அவர்கள் திருமதி பானுமதி நீலகண்டன் அவர்களுக்கு ஒரு சந்தனப் பேழையைப் பரிசாக வழங்கினார். திருமதி கல்யாணி இராமஸ்வாமி அவர்கள் தன் கணவரின் நினைவாக ரூ. 10,000க்கான காசோலை ஒன்றையும் 'Originality in field of Science'இல் பரிசுகள் வழங்குவதற்காக அளித்தார்.

இந்தப் பொன்னான தருணத்தில் திருமதி பானுமதி நீலகண்டன் அவர்கள் தன்னுடன் நெருங்கி உழைக்கும் ஸமாஜத்தின் செயற்குழு உறுப்பினர் களுக்கும், மூன்று பிரின்சிபால்கள் மற்றும் கேம்பஸ் கேர் டேக்கர் திரு சந்திரன் முதலியவர்களுக்குத் தங்க மோதிரங்களைப் பரிசாக அளித்தார். டாக்டர் இரானி, திருமதி பத்மா கஸ்தகீர், திருமதி பானுமதி நீலகண்டன் ஆகியோர் ஆற்றிய உரைகள் சிறப்பாக அமைந்தன.

இதைத் தொடர்ந்து மூன்று பள்ளிக்கூடங்களும் அளித்த கலைநிகழ்ச்சிகளுடனும், சிறப்பு விருந் துடனும் விழா நிறைவு பெற்றது.

இந்தப் பொன்விழாவில் பொன்விழா அறக் கட்டளை அறிவிக்கப்பட்டு, அதில் சேரும் நிதியின் வட்டி மூலமாக ஆங்கிலப் பள்ளிக்கூடத்தின் வசதி யில்லாத குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள்

வாங்கி வழங்க முடிவு செய்யப்பட்டது. Golden Jubilee Endowment _ D.B.M.S என்ற பெயருக்கு 'செக்'காக நிதிஉதவிகள் வரவேற்கப்படுகின்றன.

'Bhanumathi Neelakantan Awards and Aids Trust Fund' என்று அக்டோபரில் தொடங்கப்பட்ட திட்டத்திற்கு விளம்பரம் கொடுக்கப்பட்டு பலரும் தங்கள் காணிக்கையாக ரூ.101 அளிக்கின்றனர்.

ஏப்ரல் 17 : ஞாயிறு காலை 8.00 மணி. சுடச்சுட தோசை, சாம்பார், சட்னி என்று சிற்றுண்டியுடன் விழா தொடங்கிற்று. வெளியூரிலிருந்து சிறப்பு விருந்தினராக வந்திருந்த 'கல்கி' ராஜேந்திரன் அவர்கள், சிறப்புப் பேச்சாளராக வந்திருந்த டாக்டர் 'கலைமாமணி' விக்கிரமன் ஆகியோருடன் சேர்ந்து சிற்றுண்டி அருந்தினோம். பிறகு 11.30 மணிக்கு பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டிருந்த போட்டிகளுக்குச் சிறப்பு விருந்தினர்கள் பரிசளித்தார்கள்.

சமாஜக் கட்டடத்தின் ஆர்கிடெக்டாக இருந்த திரு S.N. ஐயர் அவர்களின் மருமகள் திருமதி சுசீலா, சமாஜத்தை வாழ்த்தி மடல் வழங்கினார். பிறகு மதிய உணவு "வாவ்". வத்தக்குழம்பு, சாம்பார் சாதம், அவியல், வடாம், அப்பளம், தயிர்சாதம், ஊறுகாய் என்று திரு 'கல்கி' ராஜேந்திரனையும் திரு. விக்கிரமன் அவர்களையும் தமிழ்நாட்டிற்கே அழைத்துச் சென்று விட்டோம்.

மாலை 5 மணியிலிருந்தே கூட்டம் வரத் தொடங்கிவிட்டது. பந்தல் நிரம்பிவிட்டது. ஸமாஜத்தின் நிகழ்ச்சிகள் தொடங்கும்முன்பு, சமாஜத்தைத் தொடங்கிய சகோதரிகளுக்கு மேடையில் இடம் அளிக்கப்பட்டது. திருமதி மாலதி லக்ஷ்மண் இறைவணக்கம் பாடினார். மேலிருந்து வருணபகவான் மழைபொழியத் தொடங்கிவிட்டார். அவர் வாழ்த்தும் எங்களுக்குக் கிடைத்துவிட்டது. ஸமாஜத் தலைவியின் வரவேற்புரைக்குப்பின்னர், மூத்த சகோதரிகள் கௌரவிக்கப்பட்டார்கள். மூத்த சகோதரிகள் நன்றிகூற எழுந்தபோது தலைவி திருமதி பானுமதி நீலகண்டனுக்கு "சக்திஸ்வரூபிணி" என்ற பட்டம் அளித்து அவர் சாதனைகளைப் பற்றி திருமதி கனகா ராஜகோபால், திருமதி ராஜம் விஸ்வநாதன், டாக்டர் தர்மாம்பாள் முதலியார் பேசினார்கள்.

திரு. ராஜேந்திரன் தான் குறைந்தது இருபது நிமிடமாவது பேசப்போவதாகக் கூறிவிட்டு சமாஜ சகோதரிகளைப் புகழ்ந்தும், அவர்களின் சாதனைகளைச் சிறுசிறு கதைகள் கூறியும் உரையாற்றினார்.

பிறகு ஸமாஜக் கலைநிகழ்ச்சிகள், இயற்கையின் மாறுதல்கள், பெண்களின் தற்கால நிலை, உலக சமாதானத்தைப் பற்றிய நடன, நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பிறகு சிறப்புப் பேச்சாளர் திரு. விக்கிரமன் அழகான உரையாற்றினார். சுமார் 30 நிமிட நேரம் அவர் பேச்சில் கூட்டத்தினரைக் கவர்ந்து இழுத்துவிட்டார். இரவு 10.00 மணிக்குப் பிறகும்கூட கூட்டத்தினர் அசையாமல் அவர் பேச்சில் மூழ்கியிருந்தார்கள். பிறகு நன்றியுரையுடன் சமாஜ நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

அடாது மழை பெய்தாலும், விடாது நிகழ்ச்சி நடத்தப்படும் என்பதற்கு ஏற்ப வருணபகவான் குளிரக் குளிரப் பொழிந்து தள்ளிவிட்டார். சிறிதும் அசங்காமல் இருந்த பந்தல் அமைத்துக் கொடுத்த பந்தல்காரருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இரவு விருந்துடன் ஸமாஜப் பொன்விழா இனிதுடன் முடிவடைந்தது. ஸமாஜ அங்கத்தினர்களுக்கு சிற நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.



பொன்விழா சிறக்க உதவிய குழுவினர்

50 ஆண்டுகளாக சமாஜ செயற்குழுவில் தொண்டாற்றிய செயற்குழு உறுப்பினர்கள் பெயர்கள் பொறித்த கல்வெட்டை, டாக்டர் இராணி திறந்து வைத்தார். →



பெருமைப் படத்தக்க சாதனை

தட்சிண பாரத் மகிள சமாஜம் என்ற ஆலமரத்தின் முக்கிய மூன்று கிளைகளில் ஒன்றாகிய (W.C.A.) மகளிர் வேலைவாய்ப்புச் சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் எங்கள் சங்கத்தின் ஒவ்வொருவரும் பெருமைப்படத் தக்க ஒரு நிகழ்ச்சியைக் கீழே விவரிக்கின்றேன்.

ஹிந்தி, ஆங்கிலப் பள்ளிகளை நடத்தி இரும்பு எஃகு நகரமாகிய ஜாம்ஷெட்பூரில் இணையில்லாமல் தலைநிமிர்ந்து நிற்கும் எங்கள் தட்சிண பாரத மகிள சமாஜத்தின் தலைவி திருமதி பானுமதி நீலகண்டன் ஒரு தீர்க்கதரிசி. பெண்களுக்குக் கல்வி மட்டும் பயிற்றுவித்தால் போதாது. படித்தபின் அவரவர் திறமைக்கேற்ற சுய வேலைவாய்ப்பளிக்கும் தொழிற்கல்வியும் மற்றும் சுலபமாக வேலை வாய்ப்பளிக்கும் பிற கல்வியும் அளிக்க வேண்டும் என விரும்பினார். அப்பொழுது தான் நம் பெண்கள் தம் சொந்தக் கால்களில் நிற்கவும் தகுதி அடைவதோடன்றி – கல்யாணச் சந்தையிலும் சுலபமாக விலைபோக முடியும்!

ஏனெனில் வரதட்சணை வாங்கினால் ஒரு முறை தான் கிடைக்கும். வேலை பார்க்கும் சுயதொழில் செய்யும் பெண்கள் கிடைத்தாலோ மாதா மாதம் வரதட்சணை கொண்டு வருவதால் ஸ்டவ் வெடிப்பு போன்ற கொடுமைகள் குறையும்! என்று அவர் நினைத்தது வீண் போகவில்லை. வங்கியில் (மானேஜர்) பெரிய அதிகாரியாய் இருக்கும் என்னைக் காரியதரிசியாய் நியமித்து பெண்கள் வேலைவாய்ப்பு அகாதமி தொடங்கினார்.

நான் என் கிளையில் வேலை பார்க்கும் அகர்வால் என்பவரின் மூத்த பெண்ணை, காரியதரிசி கோர்சில் (Executive Secretary Course) சேரச் சொல்லி சிபாரிசு செய்தேன்.

மார்வாடி குடும்பத்தில் ஒரு பெண் பிறந்தாலே பல லட்சங்கள் கல்யாணத்திற்காக ஒதுக்க வேண்டும். ஆறு பெண்கள் என்றால்...? நினைத்துப் பார்க்கவே முடியாது. ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆவலில் அந்த மார்வாடிக் குடும்பத்தாருக்கு ஆறு பேரும், பெண்களாகவே பிறந்துவிட்டனர்.

என் ஆலோசனைப்படி முதல் பெண் வேலை வாய்ப்புக் கல்வி அகாதமியில் சேர்க்கப்பட்டாள். அன்றுதான் அந்தப் பெரிய நடுத்தரக் குடும்பத்தின் பிரகாசமான திருப்புமுனையாக அமைந்தது. எங்கள் முதல் வருட மாணவிகளுக்கு படிப்பு முடித்தவுடன் அரசாங்கத்திலும் உடனே பெரிய கம்பெனிகளிலும் வேலை கிடைத்து விட்டது.

அந்த மார்வாடிப் பெண்ணின் திறமையைப் பார்த்த ஒரு பணக்கார மார்வாடிப் பையனின் பெற்றோர் இவள் நமது வியாபாரத்திற்கு மிகவும் உபயோகமாக இருப்பாள் எனச் சிந்தித்து சிறிதும் வரதட்சணை கேட்காமல் தங்கள் மகனுக்கு மருமகளாக அவளை ஆக்கிக் கொண்டு விட்டனர்! ப பணக்கார சிநேகிதர்களுக்கு தட்சிண பாரத மகிள சமாஜத்தி படித்த பெண்ணாகக் கல்யாண செய்து கொண்டால் குடும்பத்தி கும், தங்கள் தொழிலுக்கும் ப வித நன்மை என்பதை எடுத்து கூறி அடுத்த 4 பெண்களுக்கு கொஞ்சம்கூட வரதட்சணை இ லாமல் மாமனாரின் வேலையை சுலபமாக்கி அவர்களே கல்யாண ஏற்பாடுகள் செய்து விட்டனர் இன்னும் 2 மாதத்தில் கடைசி பெண்ணிற்கும் கல்யாணம் ஆக போகிறது!

இப்போது திரு. அகர்வா சொல்கிறார்... "தட்சிண பார மகிள சமாஜம் தான் என் கு தெய்வம். இல்லாவிடில் எ பெண்களுக்கு இவ்வளவு சுல மாக இப்படி ஒரு வாழ் கிடைப்பது அரிது" என்று.

பெண்களின் நலனுக்காக பாடுபடும் பெண்களால் நடத்த படும் ஒரு சங்கத்திற்கு இதை விடப் பெருமைப்படத்தக்க ஒ விஷயம் இருக்குமா? ஓ...! தட்சிண பாரத் மகிள சமாஜமே! உன்னை நினைத்து உன்னில் ஒருத்தியா இருப்பதில் மிகமிகப் பெருமைப் படுகிறேன்.

சரோஜா ரங்கநாதன்

எங்கள் சமாஜத்தின் ஜனனம்

50 வருடங்களுக்கு முன் (1944 ஜில்) 13 அங்கத்தினர்களால் பொழுதைப் போக்கும் சங்கமாகத் தொடங்கப்பட்டதே எங்கள் ங்கம்.

சங்கத்தின் தொடக்க விழா ராம்தாஸ் பட்டா' எனும் இடத்தில் ருமதி சுகந்தா ராமன் வீட் டில் நடந்தபோது அவராலேயே நட்சிண பாரத் மகிள சமாஜம்' DBMS) எனும் அதிர்ஷ்டமான பெயர் சூட்டப்பட்டது!

முதலில் வெறும் வம்புப் பச்சுகளை வளர்க்கவே இந்த ங்கத்தைத் தொடங்கி இருக் றோம் என ஆண்களால் கேலி செய்யப்பட்ட சங்கமே இன்று விண்ணை எட்டிடும் பள்ளிகள் ன்றினைக் கட்டிய பெருமை டன் சமூகத்தை நிமிர்ந்து பெரு தமாகப் பார்க்கிறது.


எங்கள் சங்கம் தட்சிண பாரதப் பெண்கள் அனைவரை மே (ஆந்திர, கன்னட, கேரள, மிழ்) இரு கரங்களையும் நீட்டி ரவேற்கும் சங்கம்! 9 கஜம் டைவை உடுத்தியவர்கள் முத ில் தயங்கினார்கள். இது வநாகரிகப் பெண்மணிகளுக்கு ட்டுமே இடம் தரும் சங்கமோ ன்ற ஐயம் அவர்களைக் கவ் யது உண்மை! ஆனால் சங்க ங்கத்தினர்களின் சரளமான ட்புறவு கலந்த உரையாடல் க்கிரமே அவர்களையும் அங்கத் னர்களாக ஆக்கிவிட்டது.

முதலில் அங்கத்தினர்களின் டும் திறமை, சித்திரம் தீட்டும் ற்றல், நாட்டியத் திறமை வற்றையெல்லாம் வளர்த்திட வண்டும் என்ற ஆவல் எல்லா க்குமே இருந்ததால்... பல தம்ப நிகழ்ச்சிகளை அளித் தாம்! எங்கள் சங்க நிகழ்ச்சிகள் கப் பிரபலமாயின. பல புராண கழ்ச்சிகளை அளித்து நகரம் முழுவதும் பெயர் பெறலானோம். குழந்தைகள் நாங்கள் கற்றுத் தந்ததை எளிதில் பிடித்துக் கொண்டு அருமையாக நடித்தார்கள்.

வெறும் கதம்ப நிகழ்ச்சிகளை மட்டும் காட்டுவதால் எங்கள் உள்ளங்கள் திருப்தி அடைய முடியவில்லை. எதையாவது செய்ய வேண்டும் என்ற லட்சிய வெறி எங்களுள் துளிர்த்து எங் களை ஆட்டி வைக்கத் தொடங்கிய தருணத்தில்தான் சமூக சேவை செய்யும் சங்கங்கள் பள்ளிகளை ஆரம் பித்தால் பணஉதவி புரிவ தாக 'டிஸ்கோ' கூறியது.

இந்த இரும்பு நகர சமூகத் திற்கு மிகவும் தேவையான சேவையை ஆரம்பிக்கும் வரத்தை ஆண்டவன் அருளியது அந்தக் கணத்தில்தான்!

13 அங்கத்தினர்களால் தொடங்கப்பட்ட எங்கள் ராசியான சங்கத்தின் பொன்விழா மிக விமரிசையாக சென்ற 17, ஏப்ரல் 1994 அன்று நடந்து முடிந்தது. ●





● திருமதி பாமா கிருஷ்ணமூர்த்தி

சமூக சேவை

பானுமதி.நீலகண்டன்



ஒரு சமூக சேவகியாக ஆகத் துடித்த எனக்கு அடித்தளமாக த.பா.ம.சமாஜம் (தட்சிண பாரத் மகிள சமாஜம்) அமைந்தது என்றால மிகையல்ல. என் எழுதும் திறமை, நிர்வாகத் திறமை இரண்டும் சங்க முதிய அங்கத் தினர்களைக் கவர்ந்து விட்டதால் நான் வெகு விரைவில் அதன் உதவிச் செயலாளராக மாறி னேன் (1955).

1961 இல் ஹிந்திப் பள்ளிக்கூடம் திரு. கல்யாண கிருஷ்ணனின் தலைமையில் நாங்கள் தொடங்கிய வுடன் பல பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டி வந்தது. மாணவிகள் பிரச்னைகளுடன் பெற்றோர்களின் பிரச்னைகளும் என்னாலும் டாக்டர் தர்மாம்பாள் அவர்களாலும் தீர்த்து வைக்கப் பட்டன. ஏழைமையையும், வியாதியையும், அறியாமையையும் தீர்த்திட வேண்டும் என்ற எண்ணமே எங்களை இரவு, பகலாக உழைத்திடச் செய்தது. ஆம், அப்போதுதான் ஒரு சமூக சேவகி உருவாக்கப்பட்டாள்!

அகில இந்தியப் பெண்கள் சங்கம் என்ற சங்கத்துடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டு, அதன் மூலம் பல பிரமுகர்கள், அவர்களின் மனைவிகளின் நட்பு உண்டாகி அதனால் தட்சிணபாரத மகிள சமாஜத்திற்குப் பல நன்மைகள் ஏற்படலாயின.

ஆங்கில மீடியத்தில் கான்வென்ட், லயோலா பள்ளிகள் மட்டுமே இருந்த காலத்தில் நமது பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் முதலியவற்றையும் புத்தகக் கல்வியுடன் போதிக்கும் பள்ளி ஒன்றினைத் தொடங்கும் கனவு உதித்தது. திருமதி அனந்த், திருமதி ராஜா, டாக்டர் தர்மாம்பாள், எனக்கு... இன்னும் இதுபோல் சிலருக்கு... கனவுகளை நனவாக்கும்போது தானே இடர்களும், இன்னல்களும் எதிர்கொள்ளும்? B.H. ஏரியா மக்களும் எங்களை நெருங்கி ஓர் ஆங்கில மீடியப் பள்ளி தொடங்கிடவேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். எங்கள் பணியைத் தொடங்கி இரண்டு வருடங்களுக்குள்ளேயே ஒரு கட்டடத்தை நாங்கள் கட்டி விட்டோமே... அதுவே அவர்களைக் கவர்ந்து விட்டது போலும்! எங்களால் எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது போலும்!

1965 இல் நடந்த ஒரு (பிக்னிக் அங்கத்தினர் திரண்டு வருவது வழக்கமாதலால்)பிக்னிக்கில் எங்கள் யோசனை அங்கீகரிக்கப் பட்டு சம்மதமும் கிடைத்தது.

ஒரு கீழ் அறையில் (இன்று சமாஜ், ஸ்கூல் அரங்க சாமான் வைத்திருக்கிறோம்) மிகவும் உயரம் குறைவானது.... நானும் திருமதி ராஜாவும் எப்படியோ சமாளித்து விட்டோம்! திருமதி அனந்தும், டாக்டர் தர்மாம்பாளும் குனிந்து குனிந்து பாடம் கற்பிக்கும் தண்டனை அனுபவித்தார்கள்.

இப்படி சமாஜ் அங்கத்தினர் களே ஆசிரியைகளாகவும் பணி யாற்றினோம்!

பணம் பற்றாக்குறை என்ற 'அல்சரால்' எப்போதுமே பாதிக்கப்பட்டாலும் எங்கள் அருமைக் குழந்தையான பள்ளியை, ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பு வீதம் உயர்த்தி 10 ஆவது வரை கொண்டு வந்து விட்டோம். நான் நிஜமாகவே என்னை ஆதரித்தவர்களின் மெத்தையில் பின்னால் சாய்ந்து கொண்டு, முன்னால் என்னைக் குறை கூறியவர்களின் ஊசிகளால் பயமுறுத்தப்பட்டாலும் முகத்தில் எப்போதும் மாறாத புன்னகை யுடன் பணி செய்யும் ஓர் உண்மை சமூக சேவகியாகவே மாறி விட்டேன்!

எங்கள் உண்மையான அக்கறையைக் கண்டு மெச்சிய திரு. மாண்டே (இயக்குநர்) டாடா ஆஸ்பத்திரிக்குத் தேவையான சகல அணிகளையும், துணிகளை யும் தைக்கும் வேலையை அளித்தார்!

நாங்கள் இரண்டு விதமான பள்ளிகள் நடத்தி இன்னும் எத்தனையோ பிற பணிகளைச் செய்து வந்தாலும், கல்லூரிப் படிப்பு என்பதை எங்களால் கொடுக்க முடியாமல் இருப்ப தால் சமாஜத்தின் மூலம் பல கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி, பணம் திரட்டி, பல மாணவ மாணவிகளுக்கு நிதி உதவி அளிக்கிறோம்! இதுபோல கல்யாண உதவி, வைத்திய உதவி, வயதானவர்களுக்கு உதவி என மெல்ல, மெல்ல எங்கள் உதவிக் கரங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

+ 2 படிப்பிற்காக வெளியூர் அனுப்பும் கட்டாயம் பெற்றோர் களுக்கு சிரமம் ஏற்படுத்தியதால் பெற்றோர்களின் வேண்டுகோளின் படி + 2 படிப்பும் தொடங் கினோம். திரைக்குப் பின் இதற்கெல்லாம் நாங்கள் பட்ட சிரமத்தை நிச்சயமாக எழுத்திலே வடிக்க எந்த மொழிக்கும் திறனில்லை.

இது ஒரு சிறிய நகரமாதலால பெண்களுக்கு வேலைகள் கிடைப்பது சிரமமாக உள்ளது. எனவே பெண்கள் பல கலை களைக் கற்கும் கழகத்தையும் தொடங்கியிருக்கிறோம். அத்துடன் வகுப்பிலே முன்னணி யில் நிற்கும் மாணவர்களுக்கே மேற்படிப்பிற்கான வாய்ப்புகள் தேடி வருகின்றன. கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்தாலும், முன்னணிக்கு வர முடியாமல் தத்தளிக்கும் மாணவர்களுக்கென திறந்த வெளிப் பள்ளி என்பதை

சமீபத்தில் தொடங்கியிருக் கிறோம். இதனால் 8 ஆவது வரை படித்து அதற்கு மேல் 'Regular Stream'லிருந்து தள்ளி விடப்பட்டுவிடும் மாணவ, மாணவிகள் பயன்பெறுகிறார்கள்!

பகவத் கீதை இதைத்தான் கூறுகிறது.

"ஒருவர் எப்போதுமே தனக் குள்ள திறமைகளை உபயோகிக்க வேண்டும். அதுவும் மற்றவர்களுக்கு நன்மை செய்திடவே அவற்றை உபயோகிக்க வேண்டும்".

இப்போதெல்லாம் சமூக சேவையை வெறுத்தோ அலட்சியமாய் ஒதுக்கியோ பெண்கள் வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டார்கள். அதனால்தான் சமூக சேவை செய்ய என்றே இந்தச் சங்கத்தை ஆரம்பித்த அங்கத்தினர்களைக் கௌரவித்து இதுபோல் செய்ய நீங்களும் வாருங்கள் என இளைய சகோதரிகளைக்கேட்டுக் கொள்ளவே இந்தப் பொன்விழாக் கொண்டாட்டத்தை நாங்கள் விமரிசையாகக் கொண்டாடுகிறோம்.

– பானுமதி நீலகண்டன்

ஒரு மனைவியின் நிலை



75 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வரும் மதராஸி சம்மேளனக் கட்டடம்

ஒரு மிதியடி கதவருகே!
என்னை உபயோகியுங்கள் என்ற
வார்த்தைகளைத் தாங்கிய
மிதியடி!

ஏன் நீ செய்வதற்கெல்லாம்
பாராட்டை எதிர்பார்க்கிறாய்?
நீ உலாவுகிறாய் ஏனெனில் நீ
பிறந்துவிட்டாய்!

உன் தோல்விகளையே உலகம்
சுட்டிக்காட்டும்
ஆண் அழும்போது சாய்ந்து
கொள்ள இருக்கும் தோள்கள் நீ!
காய்ச்சலில் வாடும் நபருக்கு
ஆறுதல் தரும் கரம் நீ
வீடு எனும் கடிகாரம் சரியாக
ஓட
உபயோகப்படும்சாவி நீ!
ஒரு மெஷினின் ஸ்குரு!
ஆனால் உனக்கென ஆசைகள்,
கனவுகள்,
யோசனைகள், விருப்பங்கள்,
இவை எதுவுமே இருக்கக்
கூடாதா?
உன் துன்பங்களை யாருடன்
பகிர்ந்து கொள்வாய்?

வெறும் 'மனைவி' என்ற பதவிக்கு இன்றைய சமூகத்தில் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இருபது வருடம் ஆசிரியை வேலை பார்த்தபின் இப்போது வீட்டிலே மனைவியாக மட்டுமே உள்ள என் உள்ளம் இதை ஒப்புக்கொள்ள மறுக்கிறது!

வீட்டு நிர்வாகம் என்பது மிக முக்கியமான, அவசியமான, அதிக சாமர்த்தியமும், புத்திசாலித்தனமும், பொறுமையும், உழைப்பும், பல திறமைகளும் தேவையான ஓர் உன்னதப் பணி! ஆனால் இதை யாருமே உணர்வதில்லை! வேலைக்குப் போகும் பெண் என்றால் சமூகத்தில் அவளுக்கு அதிக மதிப்பு கிடைக்கிறது.

வீட்டிலேயே சுற்றிச் சுற்றி வரும் மனைவிகளுக்குக் கணவன்மார்களின் நிழலாக மட்டுமே வாழ்வது மிகப்பெரிய தண்டனை! அவர்களுடைய கனவுகள், ஆசைகள், எண்ணங்கள், விருப்பங்கள், ஆகியவை நிறைவேற நிச்சயமாக சந்தர்ப்பம் கொடுக்கப் பட வேண்டும். அப்போது தானே நமக்குள் இருக்கும் திறமை வெளிப்படும்?

இந்த யோசனைகளுக்கெல்லாம் விடை அளிப்பது போல் தோன்றி உள்ள சங்கம் தட்சிண பாரத் மகிள சமாஜம். நமது சுயசிந்தனைகளுக்கு ஒரு வடிகால்; நமது ஆசைகளை நிறைவேற்றும் ஒரு புனித இடம்; நமது விருப்பங்களினால் எழுந்துள்ள ஆலயம்! சமூகத்திற்குத் தேவையான சமூகநலத் திட்டங்களைச் செயலாக்கத் துடித்திடும் சங்கம்!

"நாம் செய்யும் சேவையே இந்த பூமியில் வாழ நாம் கொடுக்கும் வாடகை..."

– ஹேமா நடராஜன்

அன்னை வாழ்வில் நடந்த சிறு நிகழ்ச்சிகள்

யோகப் பயிற்சியை இரகசியமாக வைப்பது நம் நாட்டுப் பழக்கம். உலகெங்கும் அதுவே மரபு. பகவான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் அம் மரபைக் கடைப்பிடித்தனர். ஆனால் அதற்கு மாறாகவும் நடந்தனர். தினசரி தன் யோகம் வளர்ந்ததை பகவான் குறிப்பாக எழுதியிருக்கிறார். மணிக்கு மணி ஏற்பட்ட மாறுதல்களையும் குறித்துள்ளார். 40 வருடங்களுக்குப் பின் இப்பொழுது அவை வெளியா



கின்றன. அன்னை தன் யோகானுபவங்களை மிக விவரமாகச் சொல்லி, தனக்குப் பின் அவை பிரசுரமாக வேண்டும் என்று பணித்தார். அதுபோன்ற அனுபவங்களை இதுவரை எவரும் உலகில் எழுதியதாகத் தெரியவில்லை. அவற்றை விவரிக்கும்பொழுது, அன்னை நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளையும் கூடவே சொல்லியிருக்கிறார். அவை அன்னையின் பழைய வாழ்வை விளக்குபவை. சூட்சும உலகில் பகவானைச் சந்தித்த நிகழ்ச்சிகள், யோகானுபவங்கள் கலந்தவை, டால்பினைப் பற்றியவை, தன் பூர்வ ஜென்ம அனுபவங்கள், நாய், பூனைகளைப் பற்றிய விவரங்கள், நோய், சாதகர்களைப் பற்றியவை எனப் பல வாறானவை. அவற்றுள் சிலவற்றை இங்கு குறிக்கிறேன்.

1963 ஜூன் மாதத்தில் ஜவஹர்லால் நேரு அன்னையைத் தரிசிக்க வந்தார். அவர் வரும் பொழுது இரண்டு நிமிஷத்தில் போவதாக வந்தார். அன்னை அவரை நாற்காலியில் உட்கார வைத்தார். தன்னுடன் தியானம் செய்யும்படிச் சொன்னார். விரல்களால் நாற்காலியை நேரு தட்டியபடி இருந்ததைக் கண்டு அது படபடப்பின் அறிகுறி என அறிந்து சாந்தியை அதன் மீது பொழியவே, நேரு தட்டுவதை நிறுத்தினார். அன்னை தன் வழக்கம் போல் (bath of the Lord) இறைவனால் நேருவை அபிஷேகம் செய்தார். 15 நிமிஷம் நேரு தன்னை மறந்திருந்து போய் விட்டார். அவருடன் வந்த அரசியல் தலைவர்கள், மந்திரிகள், அதிகாரிகள் என எண்ணற்ற பேரும் அன்னையைத் தரிசிக்க விரும்பினர். அனைவரும் வந்து தரிசனம் செய்தனர். அவர்களெல்லாரையும் வெறும் அர்த்தமற்றவராக அன்னை கண்டார். சென்னை போலீஸ் தலைமை அதிகாரி நேருவுக்குப் பாதுகாப்பாக வந்தவர் அன்னை முன் வந்து நின்றார். அவரைக் கண்டு அன்னை சந்தோஷமடைந்தார். இத்தனை பேரில் அந்தப் போலீஸ் அதிகாரி ஒருவர்தான் மனிதனுக்குரிய பெருமையுடன் காணப்பட்டார் என அன்னை கூறினார்.

எகிப்து இராணியாகவும், எலிசபெத் இராணியாகவும், ரஷியாவின் இராணி காதரீனாகவும், பிரான்சில் லூயி சாம்ராஜ்யத்தில் ஒரு சீமாட்டியாகவும், ஜோன் ஆஃப் ஆர்க்காகவும் தான் முந்தைய பிறவிகளிலிருந்ததாக அன்னை சொல்லியதுண்டு. தானே அப்பிறவி முழுவதும் அவராக இருப்பதில்லை. "ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்க அன்னை சக்தி ஒருத்தரில் புகுந்து அக்காரியத்தை முடித்த

பின் அந்தச் சக்தி அவரிடமிருந்து விலகும். அதுபோல் ஒருவரில் சிறிது நேரமோ, சில நாள்களோ, சில வருஷமோ இருப்பதுண்டு. அதையே முன்பிறவி என்கிறோம்" என்கிறார் அன்னை. எலிஸபெத் மகாராணிக்கு இறுதிக் காலம் வந்தபொழுது, டாக்டர்கள் அவரைப் பார்க்க வருபவர்களைச் சந்திக்க அனுமதியாத நேரத்தில் ஒரு குழு (delegation) இராணியைப் பார்க்க வந்தனர். உடனிருந்தவர்கள் அனுமதியை மறுத்தனர். அவர்களைச் சந்தித்தால் இராணி இறப்பார் என்றார் ஒருவர். இராணி இறக்கும் தருணத்திலிருக்கிறார், இவர்களைச் சந்திக்கு முன் இறப்பார் என்றார் மற்றொருவர். இராணிக்குச் செய்தி போயிற்று. சந்திக்க முடிவு செய்தார். டாக்டர்கள் மரணத்தைச் சுட்டிக்காட்டி மறுக்கும்படி வாதாடினர். "We shall die later, நாம் பிறகு இறப்போம்" என்று எலிஸபெத் சொன்னதாக சரித்திரம். அன்னை அச்சொற்களை நினைவு படுத்தி "இன்று பேசியதுபோல் பசுமையாக இருக்கிறது" என்றார். அன்னைக்கு அப்பிறவியிலும் மரணத்தை ஏற்க முடியவில்லை போலும்! மரணத்தை ஒத்திப் போட நினைக்கிறார்!

எல்லா யோகங்களிலும் உள்ள தேவதைகளை அன்னை அறிவார். அவர்கள் அனைவரும் அன்னைக்குப் பணிவார்கள். ஒரு சாதகி மரணப்படுக்கையிலிருந்தார். நாம் என நாம் நினைப்பது மனத்தின் எண்ணங்கள். ஆன்மா அதிலிருந்து வேறுபட்டது. ஆன்மா அறிவதும், மனம் அறிவதும் வேறாக இருக்கும். ஆவி என்பது உடலிலிருந்து பிரிவது. அது வேறு. உடலிலிருந்து உயிர் பிரிந்து ஒருவர் இறந்தார் என மற்றவர் அறியுமுன் ஆன்மா உடலைவிட்டு வெளியில் போகும் திறனுடையது.

அன்னை தன் அருகே ஒரு சாதகியின் ஆன்மாவைக் கண்டார். நிஜ மனிதர்போல் சாதகி அன்னையுடன் பேசினார். அவர் செல்லுமிடமெல்லாம் சென்றார். அன்னையால் வேறு வேலை செய்ய முடியவில்லை.

சாதகியின் ஆன்மா உடலைவிட்டு வெளியேறி பின்னும், அவர் உயிருடனிருப்பதாக அனைவரும் கருதினர். அன்னை எதிரில் உயரமான தேவதையொன்று அசையாமல் மௌனமாக சாதகியின் ஆன்மாவைக் கண்காணிக்கும் வகையில் நின்றிருந்தது. தேவதை அது என அன்னையறிவார். சாதகி அன்னையை நோக்கி, "நான் உடலைவிட்டுப் போக வேண்டும்" என்றார். மறுநாள் தரிசன நாள். "இன்னும் தரிசன நாள்வர நேரமிருக்கிறது. நீ உடலைவிட வேண்டுமானால் சீக்கிரம் திரும்பிப் போக வேண்டும்" என்றார் அன்னை. சாதகியின் ஆன்மா மறைந்தது. அன்னை அங்கே நின்றிருந்த தேவதையை 'இனி உன் வேலையைச் செய்யலாம்' - என அனுமதியளிக்கும் வகையில் பார்த்தார். அதே நிமிஷம் சாதகியின் உயிர் உடலை விட்டுப் பிரிந்து விட்டது.

"சாதகியின் ஆன்மா அன்னையிடமிருப்பதால், எமதூதன் அன்னை அனுமதியின்றி செயல்பட மறந்து, அவர் உத்தரவுக்காகக் காத்திருந்தான்" என்கிறார் அன்னை.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தில் உடற்பயிற்சிக்கு அளவுகடந்த முக்கியத்துவம் உண்டு. ஒரு கல்லூரியில் ஒரு வருஷ கால உடற்பயிற்சியை இங்கு 4, 5 நாளில் அளிக்கிறார்கள். ஆனால் அன்னையுடன் நெருங்கி இருந்தவர் பலர் உடற்பயிற்சியை மேற்கொள்ளவில்லை. ஸ்ரீ அரவிந்தர் உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என அன்னை விரும்பினார். பகவான் எதிரான அபிப்பிராயம் கொண்டிருந்தார். 1938இல் அவர் கால் எலும்பு முறிந்து விட்டதால், அவர் தினமும் நடக்க வேண்டும் என டாக்டர்கள் சொல்லியதை அவர் ஏற்றார். தன் அறையிலிருந்து சமாதிக்கு எதிரேயுள்ள அறை வரை மாடியில் பகவான் தினமும் 7 மணி நேரம் நடந்தார். அவர் உடல் அதிக அளவு கனத்திருந்தது என்று அவருடனிருந்த சாதகர் எழுதியிருக்கிறார். அவர் மாடியில் நடக்கும் அறைகளுக்குக் கீழே மச்சில் உள்ள சாரங்கள் சுமார் ஓர் அடி அளவில் இடைவெளிவிட்டு வழக்கம் போலிருக்கும். பகவான் நடக்க ஆரம்பிக்குமுன் அன்னை முன் எச்சரிக்கையாய் அந்த மச்சை (ceiling) வலுப்படுத்த இரண்டு சாரங்களிடையே புதிய சாரம் ஒன்று போடச் சொன்னார். பகவான் விஷயத்தில் அன்னை எள்ளளவும் சந்தேகம் எதிலும் அனுமதிப்பதில்லை. பகவான் எதிலும் இழை தவறாமல் செயல்படுபவர். தான் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு நிமிஷம் குறைவாகவோ, சில நிமிஷம் அதிகமாகவோ நடக்க அவர் சம்மதிக்கமாட்டார். அதனால் இரு கோடிகளிலும், நடுவில் இரண்டு இடங்களிலும் கடிகாரங்களை வைத்தார். அவற்றிற்கு அவரே சாவி கொடுப்பார். ஒருநாள் அவர் நடக்கும் பொழுது ஒரு கடிகாரம் நின்றுவிட்டது. பார்த்தால் எல்லாக் கடிகாரங்களும் நின்றுவிட்டன. அன்னை அவ்விடம் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். திடீரென பகவான் குரலில் "இது என்ன தவறான விளையாட்டு?" என்று கேட்டு அன்னை விழித்துக்கொண்டார். என்ன நடந்தது எனக் கேட்டார். எல்லாக் கடிகாரங்களும் நின்றுவிட்டன என்றார் ஸ்ரீ அரவிந்தர். உடனே அவை ஓடத்

தொடங்கின. சூழலில் உள்ள சிறு தேவதைகள் செய்யும் சில்விஷமம் என்கிறார் அதை.

இந்தத் தேவதைகட்கு, பொருளை மறைப்பதும், மீண்டும் சிலநாள் கழித்து, கொண்டு வருவதும் ஒரு விளையாட்டு. அன்னையின் குடை ஒன்று திடீரென மாயமாய் மறைந்து விட்டது. மொட்டைமாடிக்குப் போய் உலாவி விட்டுத் திரும்பி வந்தபின் அது மாயமாய்த் திரும்பி வந்தது என்கிறார்!

அன்னை தனக்கும் சாதகர், அன்பர்களுக்குமுள்ள உறவை நேரடியாக வைத்துக்கொள்ள விரும்பவில்லை. நேராகப் பார்த்துப் பேசி, எழுதியுள்ள தொடர்பைவிட பக்தியால் அன்னையிடமிருந்து நேராகப் பார்க்காமல், பேசாமல், எழுதாமல், அருளைப் பெறுவதையே அன்னை விரும்பினார். அது சாத்தியப்படவில்லை. அன்னை விரும்பும் முறை சிறந்த தொடர்பு என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறார். வயதான பெண் சாதகர். அன்னையை நெகிழ்ந்து விரும்புபவர். அவருக்கு உடல் நலம் சரியில்லை என அவர்களின் அன்னைக்குத் தெரிவித்தார். சாதகர்கள் அன்னை மனதில் இருப்பதால், அவர்கள் பெறும் அளவை அதிகப்படுத்தினார் (increased the dose) அன்னை. எதிர்பார்த்த பலன் இல்லை. மேலும் சாதகி பெறும் அளவை அன்னை அதிகப்படுத்தினார். மறுநாள் கணவனிடமிருந்து கடிதம் வந்தது. மனைவி ஆஸ்த்மாவால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். நிலைமை மோசமாக இருப்பதால் (drugged her) அதிக மருந்துகளைக் கொடுத்திருக்கிறார்கள். வலி அதிகமான நேரம் அப்பெண் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து காலைத் தொங்கப் போட்டார். கால் சில்லிட்டிருந்ததால் செருப்பைத் (slippers) தேடினார். குனிந்தபொழுது செருப்புக்கு பதிலாக மிருதுவான ஒன்று கையில் படுவதை உணர்ந்தார். ஆச்சரியத்தால் அப்பெண் குனிந்து பார்த்தால், அன்னையின் திருவடிகள் தென்பட்டன. அன்னையின் அடி அவர் அணியும் காலணிகளுடன் அங்கிருந்தது. சாதகி அன்னையின் திருவடிகளைத் தொட்டு வணங்கிவிட்டுத் தூங்கிவிட்டார். தூங்கும்முன் "அன்னை இங்கேயிருக்கிறாரே!" என்று சற்று உரத்த குரலில் கூறினார். எழுந்தபொழுது ஆஸ்த்மா குணமாகிவிட்டது.

கல்கத்தா அன்பர்கள் அன்னையைக் கல்கத்தா வரும்படி அழைத்தனர். அன்னை சிரித்துவிட்டார். "பகவான் ஸ்ரீ அரவிந்தர் கல்கத்தாவில் நடந்த - அவர் திருவடிபட்ட இடம் - இடமெல்லாம் ஓர் அங்குலம் பாக்கியில்லாமல் எனக்குக் கொடுப்பதானால் நான் வருகிறேன்" என்றார்.

1950 வரை, அதாவது ஸ்ரீ அரவிந்தர் இருந்தவரை ஆசிரமத்தில் (Epidemics) ஜுரம் வயிற்றுப்போக்கு போன்ற தொத்து வியாதிகள் வரவேயில்லை என அன்னை கூறுகிறார். பகவான் 1950இல் சமாதியடைந்தார். அன்னை 1959 முதல் தினமும் அவரை சூட்சும உலகில் சந்திப்பதுண்டு. 1961இல் ஆசிரமத்தில் பரவலாகப் பல விதமான உடல்நலக் குறைவுகள், நோய்கள் இருந்தன. அவை சூட்சும உலகில் பகவானைப் பார்த்தன என்கிறார் அன்னை.

"ஸ்ரீ அரவிந்தர் என்னுடனேயே இருப்பதை நான் அறிந்ததை இப்பொழுது நினைத்தாலும் சந்தோஷமாக இருக்கிறது. இப்பொழுது அதுபோல் தெரியவில்லை" என அன்னை நினைத்தபொழுது பகவான் தெளிவாக அன்னைக்கு, "நீயே நானாகிவிட்டதால், என்னை உனக்குத் தெரியாது" என்றார்.

அன்னையின் முதல் குரு ஸ்ரீ அரவிந்தர் போலவே இருப்பார். இடியும் மின்னலுமான ஒரு நாள் அவர் மொட்டைமாடிக்குப் போக எழுந்தபொழுது, இந்த நேரம் எப்படி அங்கு போவது என்றார் அன்னை. அவர் சிரித்தார், "என்னுடன் வாருங்கள், பயப்பட வேண்டாம்" என்றார். அன்னையும் உடன் சென்றார். குரு மந்திரங்களைச் சொல்லத் தொடங்கினார். பெருமின்னல் தோன்றி அவர்களை நோக்கி வந்தது, திடீரென, திசைமாறி தூரத்து மரத்தில் மேல் வடிந்தது. இது உங்கள் வேலையா என அன்னை குருவைக் கேட்டபொழுது, அவர் தலையசைத்தார்.

"ஜலதோஷம் பிடிக்கப் போகுமுன் ஒரு முறை புஷ்பங்களால் என்னைக் குணப்படுத்திக் கொண்டேன். இது சக்திவாய்ந்த முறை" என்றார் அன்னை.

புஷ்பங்களின் மணத்தைக் கொண்டு அன்னை அவற்றிற்குப் பெயரிட்டதாகச் சொல்கிறார். அவற்றின் மணம் இயற்கையின் சத்தியத்தைப் பிரதிபலிக்கின்றது.

அன்னைக்குத் துளசியைப் பற்றித் தெரியாது. எதுவும் சொல்லாமல் துளசி இதழ்களைக் கொடுத்தபொழுது அவற்றை முகர்ந்து இது பக்தி என்றார் அன்னை. கிருஷ்ணனுக்குப் பிரியமானது என, பிறகு விளக்கம் கொடுத்தார்கள்.

தாழம்பூவை அன்னையிடம் காண்பித்தபொழுது முகர்ந்தவர் 'தூய்மையான தவம்' என்றார். இந்தியருக்குப் புராதன ஞானமுண்டு. அது அறிவால் எழுந்ததல்ல. வேத காலத்து ஞானம் அது. அடிப்படையான உண்மை, சத்தியத்தைக் கூறும் ஞானம் அது என்பது அன்னையின் விளக்கம். ஃ



பெங்களூர் பேராசிரியர்

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூர் மாநகரில் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழர்களின் நலனுக் காகத் தம் வாழ்நாளின் இறுதி வரை உழைத்தவர், பேராசிரியர் தண்.கி.வேங்கடாசலம் அவர்கள். 13-9-1922 ஆம் நாள் பிறந்து 8-7-1994ஆம் நாள் மறையும் வரை வாழ்வாங்கு வாழ்ந்த பேராசிரியர் அவர்களின் வாழ்க்கைக்குறிப்பை அறிவது தமிழர் அனைவருக்கும் பெருமைதரும்.

பிறப்பும், கல்வியும்:-

பேராசிரியர் தண்.கி.வே. என்று அழைக்கப்படும் பேராசிரியர் தண்.கி.வேங்கடாசலம் அவர்கள் தமிழகத்தின் திருச்சி அருகே உள்ள தண்டலை என்ற சிற்றூரில் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் திரு. கிருட்டிண சாமிக்கும், திருமதி நல்லம்மாள் அவர்களுக்கும் 13.9.1922ஆம் நாளன்று பிறந்தார். தமது ஊருக்கு அருகே உள்ள முசிறியில் உயர் நிலைப்பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் கல்லூரிப் படிப்பைத் தொடங்கி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் வழி, தமிழ் வித்துவான்பட்டமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழி, தமிழில் முதுகலைப்பட்டமும் (M.A) முதல் தகுதியில் (I - Rank) பெற்றார்.

ஆசிரியப் பணியும், இலக்கியப் பணியும்:-

தமிழகத்தில் பிறந்து, தமிழகத்திலேயே படித்துத் தமிழிலேயே பட்டம் பெற்ற பேராசிரியர், தமிழ் இலக்கியத்தின் மீதும் தமிழ்மொழி மீதும் கொண்ட பற்றின் காரணமாக ஆசிரியப்பணியை மேற்கொண்டு, பெங்களூர் தூய சூசையப்பர் கல்லூரியில் 1946 முதல் 1978 வரை பணிபுரிந்தார்.

உயர்குணமும், உறுதியான உள்ளமும் படைத்திருந்த பேராசிரியர் அவர்கள் ஆழ்ந்த தமிழ் அறிவும், தெளிவாக எடுத்துரைக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். அவரிடம் பயின்ற மாணவர்கள், படித்துப் பல காலம் ஆனாலும் கூடப் பேராசிரியர் தண்.கி.வே.யின் மாணவர் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றனர்.

உலகத் தமிழர் மாநாட்டில் பல கருத்தரங்குகளில் சிறப்புடன் பங்கேற்ற பேராசிரியர் திருவள்ளுவரின் திருக்குறள், கம்பரின் இராமாயணம், சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள், நாயன்மார்களின் திருமுறைப் பாடல்கள், ஆழ்வார்களின் நாலாயிரத்திவ்விய பிரபந்தம், ஆகிய நூல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். இப்பேரிலக்கியங்களின் பெருமையை மற்றவர்களுக்கு விளக்க விரும்பிய பேராசிரியர் அவர்கள், கவித்திறம் வல்ல காவலர், பாட்டுக்கொரு புலவன், அப்பர் பெருமான், சுந்தரர், சம்பந்தர், நாச்சியார் திருமொழி, தெய்வ மலர்கள் போன்ற ஆய்வுக் கட்டுரை நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

தமிழ்-கன்னட இணைப்புப் பணி:-

பெங்களூர் நகரில் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்ற பின்னர், தமது மொழியை வளர்த்ததோடு, கன்னடத்தையும் கற்று, அம்மொழியிலும் ஆழ்ந்த புலமை பெற்றார். தமிழின் புகழை வளர்ப்பதோடு, கன்னட இலக்கியத்தின் சிறப்பைத் தமிழர்களும் உணர வேண்டும் என்ற பேருள்ளம் கொண்ட பேராசிரியர் தண்கிவே அவர்கள், ஆர்.எஸ். முகளி அவர்கள் எழுதிய 'கன்னட சாகித்ய இதிகாச' என்ற கன்னட இலக்கிய வரலாற்று நூலைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார்.

மேலும், திரு.சதுரங்கா அவர்கள் எழுதிய 'வைசாகா' என்ற கன்னட நாவலைத் தமது மொழி அறிவால், மூல நூலின் உண்மைத் தன்மை மாறாமல், 'மௌன ஓலம்' என்ற பெயரில் மொழி பெயர்த்தார். அந்நூலின் சிறப்பை அறிந்த இந்திய அரசு அவருக்குச் 'சாகித்ய அகாடமி' விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது. இவ்வருஞ் செயல்களால் தமிழர் நெஞ்சங்களில் நிறைந்திருந்த பேராசிரியரின் புகழ், கர்நாடக மக்களிடையேயும் பரவிவளர்ந்தது.

மறக்க இயலா மாப்புகழ்:-

புகழால் உயர்ந்த பேராசிரியர் பரிசுகள். விருதுகள் பெற்ற பின்னரும், தமது இலக்கியப் பணியை இடைவிடாது செய்து கொண்டே இருந்தார். "கவிராஜ மார்க்கம்" என்ற கன்னட இலக்கண நூலைத் தமிழில் பாடல் வடிவில் மொழி பெயர்த்த பெருமை உடையவர். இந்நூலும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெளியீடாக வரும் நிலையில் உள்ளது.

சென்னை, மதுரைப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களாக விளங்கிய தமிழ் அறிஞர்கள் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு.வரதராசனார் ஆகியவர்களோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்

டாக்டர் எம்.ஜே. மோகன்

டவர் பேராசிரியர் தண்.கி.வே. அவர்கள்.

கர்நாடகம், ஆந்திரா, தமிழ் நாடு, கேரளம்- ஆகிய மாநிலப் பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும் பணிபுரிந்த பேராசிரியர் அவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் தாயகத்திலேயே உழைக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு அவ்வாய்ப்பைத் தட்டிக்கழித்துப் பெருமை பெற்றவர். இவ்வாறான இலக்கியப் பணிகளை இறுதி வரை செய்து வந்த பேராசிரியர், தாம் முயன்று தோற்றுவித்த தமிழ்ச் சங்கத்தின் சிறப்பு உயர தமது இயலாத நிலையிலும், சங்க நிர்வாகிகளை அவ்வப்போது அழைத்துப் பேசித்தம் கருத்துகளையும் கூறுவார்.

மேலும் தம்மோடு பழகியவர்கள் யாராக இருப்பினும், அவர்களின் உயர் குணங்களைப் பாராட்டும் உயர்குணம் கொண்டவர். தமது வாழ்க்கையின் இறுதி நாள்களில் பெங்களூரில் தமது திறமையால் பொறியியல் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சி, செவிலியர் பயிற்சி நிறுவனம் போன்ற பலநிலைக் கல்விச் சாலைகளையும் நிறுவிச் சிறப்புற்றவர். செந்தமிழ்ச் செல்வர்; கல்விக் காவலர். தர்மரக்ஷாமணி போன்ற பல பட்டங்கள் பெற்ற டாக்டர் ம.வே.ஜயராமன் அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருக்கோவலூரில் நடைபெற்ற கபிலர் விழாவில் கலந்துகொள்ள, பேராசிரியரும் டாக்டர் ம.வே.ஜயராமன் அவர்களுடன் சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிந்து பெங்களூர் திரும்பும்போது டாக்டர் ம.வே. ஜயராமன் அவர்கள் திடீர் மாரடைப்பால் காலமானார். அத்துன்பத்தைத் தாங்க முடியாத பேராசிரியர் தண்.கி.வே.அவர்கள், தம் துயரத்தை எல்லாம் கொட்டி, 'யார் இனி எம்மைக் காப்பார்' என்ற இரங்கற்பாவை எழுதினார்.

மேலும், டாக்டர் ம.வே.ஜ. அவர்களின் நினைவு மலரைத் தாமே முழுமைப்படுத்தியதோடு, டாக்டர் ம.வே.ஜ.வின் பெருமைக் குணங்கள் அனைத்தையும் தொகுத்து 'பெருமிதத்தின் திருவுரு' என்ற ஒரு சிறந்த கட்டுரையையும் எழுதி, அம்மலரில் இணைத்துத் தம் நன்றிப் பெருக்கையும் பேராசிரியர் காட்டியுள்ளார். டாக்டர் ம.வே.ஜ. அவர்களோடு இறுதிவரை கொண்ட நட்பின் காணிக்கையாக நினைவு மலர்ப்பணியைச் செய்து டாக்டர் ம.வே.ஜ.குடும்பத்தாரால் புகழப்பட்ட சிறப்பினை உடையவர் பேராசிரியர் தண்.கி.வே.அவர்கள்.

இல்லற மாண்பு:-

இசைத் தமிழில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பேராசிரியர் தண்.கி.வே.அவர்கள் பல அயல்நாட்டாருக்குத் தமிழைப் பயிற்றுவித்த பெருமை கொண்டவர். பலரின் மேற்படிப்புக்கும் ஏணியாக விளங்கியவர் பேராசிரியர்.

தமது தாய் மொழியின் சிறப்புக்காகவும், தாம் வாழ்ந்த நாட்டுக் கன்னட மொழியின் சிறப்புக்காகவும், வாழ்ந்த பேராசிரியர் அவர்கள், அன்பே உருவான திருமதி.ருக்குமணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டவர். டாக்டர் அருள்மொழி, திருமதி மலர் விழி, திருமதி. செந்தாமரை ஆகிய- மும்மணிகள் போன்ற- பெண்மணிகளைப் பெற்ற பெருமைக்குரியவர் பேராசிரியர் அவர்கள்.

இறுதிப் பயணம்:-

பகுத்தறிவுக் கொள்கைகளை மேற்கொண்டு எளிய வாழ்வு நடத்திச் சிறப்புப் பெற்ற பேராசிரியர் தண்.கி.வே.அவர்கள் 8.7.1994 வெள்ளிக்கிழமை காலை இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். அவரது மறைவுச் செய்தி கேட்டுப் பெங்களூர் அரசியல் தலைவர்களும், தமிழ்ச்சங்க அமைப்புகளும், தமிழ் அறிஞர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் பேராசிரியரின் பிரிவுக்குப் பெரிதும் வருந்தி அஞ்சலி செலுத்தினர்.

தனிமரத் தோப்பு

ராஜேந்திரகுமார்

8

காட்டேஜ் பதினாறில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் சஞ்சீவியும், இனியாவும். டி.வி.யில் வண்ணமயமான பெண் ஒருத்தி செய்திகள் ப்டித்துக் கொண்டிருந்தாள்.

"ரொம்பவும் இளமையாத் தெரியறாங்க" என்று இனியா சொன்னதும், ரிமோட்டினால் ஆடியோவைத் தழைத்தார்.

"என்ன சொன்னே?"

"அதாம்பா, அந்த மேடம், ரெண்டு பிள்ளைங்களுக்குத் தாயின்னா நம்பறது கஷ்டம். அதிலேயும் முதல் மகன் குடும்பத்தோட அமெரிக்காவிலே டாக்டராக இருக்கிறாராம். பாவம்ப்பா அவங்க".

ஆடியோவை உயர்த்தினார். சட்டென்று ரிமோட்டைப் பிடுங்கிய இனியா அமுத்தியதும், திரையில் பெண் காணாமல் போனாள்.

"எவ்வளவு முக்கியமான விஷயம் பேசறேன். செய்தி என்ன செய்தி?"

"சாப்பிட்டுகிட்டே கேட்கலாமா? அல்லது, அதையும் நிறுத்தணுமா?"

"சாப்பாட்டை நிறுத்த வேண்டிய அவசியமில்லை. மெல்லறதை முழுங்கிட்டே பதில் சொன்னால் போதும்".

"சரி, கேளு, கேள்வி என்னவோ?"

"பாவம்ப்பா அவங்கன்னு சொன்னேன்".

"சரி, பாவம்! அந்த ஆனியன் சாலடை எடு".

"எத்தனை துன்பத்தையும் ஏமாற்றத்தையும் தாங்கிட்டு இருக்காங்கன்னு தெரியுமா?"

"சொல்லு, தெரிஞ்சுக்கறேன்".

"விளையாடாதீங்கப்பா. அவங்க ஒரு காலத்தில் ஒருத்தரை சின்சியராக் காதலிச்சவங்க".

"இள வயசுக் கோளாறு. எல்லாரும் செய்யற தவறுதான்!"

"ஆனா அந்தக் காதலன் இவங்கப்பா கொடுத்த ப்ளாங்க் செக்கை வாங்கிட்டுக் காதலை விலை பேசி வித்துட்டானாம். ரொம்பவும் கொடுமையில்லையா?"

"கொடுமைன்னு சொல்ல எனக்கும் ஆசைதான். ஆனாலும் ஒரு பக்கத்து வாதத்தை மட்டும் வைச்சுகிட்டுத் தீர்மானிக்கிறது ரொம்பவும் தவறான முன்னுதாரணம்".

"அதுக்காக அந்தக் காதலன் செய்ததை நியாயப்படுத்தறீங்களா?"

"இல்லையேம்மா. முன்பின் தெரியாத ஒருத்தனுக்கு நான் ஏன் நியாயம்னு சொல்லணும்?"

"சரி! அந்த இடத்திலே நீங்க இருந்திருந்தா என்ன செய்திருப்பீங்க?"

"அந்தக் காதலன் செய்ததையேதான் செய்திருப்பேன்". எழ முயலும் அவளை விரல் அசைத்து அமரச் சொன்னார், "இதுக்கேன் பாதி சாப்பாட்டிலே எழுந்திருக்கிறே? உட்கார்ந்து சாப்பாட்டை முடி. அபிப்பிராயக் கேள்வி கேட்டே. யதார்த்தமான பதிலைச் சொன்னேன். இதிலே கோவிச்சுக்க என்ன இருக்கு?"

"என்ன பெரிய யதார்த்தம்? ஒரு பெண்ணைக் காதலிச்சு அவ மனசிலே ஆசையை வளர்த்துட்டு, கேவலம் பணத்துக்காகக் கை விட்டுட்டு ஓடறதா?"

"நீ சொல்ற அந்த இளம் பருவம், வாழ்க்கையிலே காலடி எடுத்து வைக்கிற முதல் கட்டம் - எதிர்காலத்தில பணம் சம்பாதிக்கிறதே ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கிற கால கட்டம். தானாக வருகிற பணத்தை உதற மனசு வராது. காதலி போனால் இன்னொருத்தி கிடைப்பாள். ஆனா பணம்? அதுவும் எவ்வளவு வேணுமோ, அவ்வளவு பணத்தை அவனே நிரப்பிக்கலாம் என்கிற நிலையிலே - எந்த மனிதனும் செய்கிற தவறுதான் அது. அதைச் சொன்னேன்". ஒரு சிறு துண்டு மீனை எடுத்து வாயில் போட்டு

ரசனையுடன் சொன்னார் "ஜஸ்ட் ஃபண்டாஸ்டிக்".

"எதைச் சொல்றீங்கப்பா? சொன்னீங்களே யதார்த்தம், அதையா?"

"இல்லே! இந்த மீன் வறுவலைச் சொன்னேன். நாமே சிரமப்பட்டுப் பிடிச்சிட்டு வந்து வறுத்துச் சாப்பிடற ருசியே அலாதி".

ரிமோட் கண்ட்ரோலை எடுக்க முயலும் அவர் கையைத் தட்டிவிட்டாள்.

"உங்களுக்கு அவங்களைத் தெரியுமா?"

"அவங்கம்மா வசந்தமாளவிகாவையே தெரியும். நல்ல பாடகி. அந்த நாளிலே ஒரு எம்.எஸ்ஸுக்கோ, கே.பி. சுந்தராம்பாளுக்கோ போட்டிப் பாடகின்னு எதிர்பார்க்கிற அளவு திறமையா சரளமா ஸ்வீட்டாப் பாடுவாங்க. குறுக்கே வளர்ந்த கடைவாய்ப் பல் வலியாலே அவஸ்தைப் பட்டு, பாட முடியாம சிரமப்பட்ட நிலையிலே அந்தப் பல்லை ஆபரேஷன் பண்ணி உடைச்சு எடுத்ததினால என்ன ஆச்சோ... என்னமோ? பாவம், அவங்க குரல் கெட்டு கரடு முரடாகி ஒர் ஆண் குரல் மாதிரி ஆயிடுச்சு. தன்னாலே இனி பாட முடியாது; எதிர்காலமே இருண்டு போச்சுங்கிற அதிர்ச்சியிலேயே வாயடைச்சுப் போயிட்டாங்க. கணவன் - மகள் - உற்றார் - உறவினர்னு பெரிய குடும்பத்தோட வாழ்ந்தாலும் அறைக்குள்ளே தனிமைச் சிறையிலே இருந்தாங்க. எல்லாமிருந்தும் தனி மரமாக வாழ்ந்து அந்த அதிர்ச்சி தாங்காமலேயே போய்ச் சேர்ந்துட்டாங்க. நான் படிச்ச கலைாரிக்குப் பின்னாலே நினைவு மண்டபம் கட்டி நிறைய செடி, கொடி, மரங்களை நட்டு அவங்களுக்கப்புறமா தோப்பு ஒண்ணையே இவங்க உருவாக்கி இருந்தாங்க. இப்ப எல்லாமே மரமாகி தோப்பு ஒண்ணு உருவாகி இருக்கும்".

"அவங்களைப் போலவே இவங்களையும் தனி மரமாக்கி விட்டீங்களே ஏன்ப்பா? சொல்லுங்கப்பா, அவங்க செய்த தவறு என்ன? எதனால அப்படியொரு கல் மனசு வந்து காதலைக் காசுக்கு வித்தீங்க?"

எழுந்த அவரை இப்போது இவள் கையால் இழுத்து அமர்த்தினாள்.

"அதுக்கேன் பாதியில சாப்பாட்டை நிறுத்தறீங்க?" ஸ்டீல் கிடுக்கியால் இன்னொரு மீன் துண்டத்தை எடுத்து அவர் தட்டில் தவழ விட்டாள். "சாப்பிடுங்கப்பா".

"அவளோட ரொம்ப நேரம் பேசிட்டிருந்தியா?"

"ஆமாம்!"

"என்ன சொன்னா?"

"எல்லாமே சொல்லிட்டாங்க. காலம் அனுமதிச்சிருந்தா நான், அவங்க மகளா இருந்திருப்பேன்னுகூடச் சொன்னாங்க".

"அது போதும். சாப்பிடு".

"அப்பா!"

"டாமிட். சாப்பிடறச்ச என்ன வளவளன்னு பேச்சு? சாப்பிட்டது செரிக்காது. சாப்பிடு பேசாம" என்று அவர் போட்ட அதட்டலுக்கு அவள் வாய் மூடிப் போக - பிடிவாதமாக ரிமோட்டைப் பிடுங்கி எடுத்து அழுத்த -

குட்டித் திரையில் வந்த பெண் 'இத்துடன் செய்திகள் முடிவடைந்தன. வணக்கம்' என்றாள்.

சேனலை மாற்றியதும் ஹிந்தி நகைச்சுவைத் தொடர் ஒன்று அப்போதுதான் தொடங்கியிருந்தது.

அந்த இனியா தட்டிலேயே கையலம்புவதை ஓரக் கண்ணால் கண்டாலும் காணாத மாதிரி, போலி சுவாரஸ்யத்துடன் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்தார்.

"குட் நைட், டாடி!"

"பேச நினைச்சதும், கேட்க நினைச்சதும் அவ்வளவுதானே? இல்லே மிச்சமிருக்கா?"

"முடிந்ததுன்னு போடலை. 'தொடரும்'னு தான் போட்டிருக்கேன். மறுபடியும் நாளை பேசுவேன்" அழுத்தமாக ஒர விரல்களை நெற்றியில் அழுத்தி சல்யூட் அடித்து விட்டுப் போனாள்.

அவள் உள்ளே போய் மறைந்ததும், சிகரெட் பெட்டியும் லைட்டரும் எடுத்துக் கொண்டார். டி.வி.யை அமர்த்தாமலே கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்து சிட்-அவுட்டுக்கு வந்து தடுப்புச் சுவர் மீது தெற்றினாற்போல் அமர்ந்து அவசரமில்லாமல் சிகரெட் ஒன்றை உருவி, லைட்டரால் தீக்குளிப்பாட்டி அணைத்து விட்டு இருட்டில் ஓயாமல் இறையும் அலை யோசையைக் கேட்டவாறு அமர்ந்திருந்தார். அதை -

பங்களா வராண்டாவில் நடமாடிக் கொண்டிருந்த அந்த அனாமிகாவும் பார்த்துக் கொண்டே நடந்தாள். நடந்து கொண்டே இருந்தாள் நெடுநேரமாக.

நள்ளிரவைத் தொடும் நேரம் வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த மானேஜர் தூக்கம் துலங்கும் கண்களைத் துடைத்துக் கொண்டார். கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தார்.

காவலிலிருந்த ஆளைக் கூப்பிட்டார். "யாராவது வந்தா என் ரூமுக்கு வந்து எழுப்பு.



பயணம் வந்த களைப்பு வேறே. தூக்கமா வருது".

"சரி ஸார்!"

"நான் தூங்கப் போறேன்".

"செய்யுங்க ஸார்!" என்றவன், வாசல் அறைக்குப் போக - கணக்குப் புத்தகங்களையும், ரொக்கப் பணத்தையும் இரும்பு அலமாரியில் வைத்துப் பூட்டி விட்டு உயர நாற்காலியை விட்டிறங்கி, மேஜை டிராயரைப் பூட்டிவிட்டு கொத்துச்சாவியைக் கோட்டுப் பையில் போடும்போது நெருடியது அது.

நீளமான பழுப்புக் கலர்க் கவர். அந்தப் பதினாறாம் நம்பர்காரர் மேடம்கிட்டே கொடுக்கச் சொல்லிக் கொடுத்தது! எப்படி? அதெப்படி மறந்தேன்?

மேலே போய் கொடுக்கலாமா என்று மாடிப் படியை நோக்கி நடந்தவர், "சரி தூங்கறவங்களை இப்ப எழுப்பி ஏன் தொல்லை தரணும்?" என்ற நினைப்பு வரவே - கவரை வரவேற்பு மேஜை மீதே வைத்து ஒரு கண்ணாடி பேப்பர் வெயிட்டை வைத்துப் பார்த்தார்.

'திருமதி அனாமிகாவின் நேரடிப் பார்வைக்கு'

காலையில் தந்து விடவேண்டும் என்ற நினைப்போடு அறைக்குள் போய் உடைமாற்றிக் கொண்டு படுக்கையில் விழுந்தவர் -

சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கிப்போய் ஒரே சீராகக் குறட்டை விடத் தொடங்கினார்.

காரின் பின் ஸீட்டில் இருந்த பாண்டியன் குறட்டைச் சத்தம் வரவர அதிகமாகவே - அந்த வினிதா அழுத்தமாகப் பிரேக்கைக் காலால் அழுத்தவே - பெரிய 'கிறீச்' ஒலியுடன் கார் நின்றதும் -

நிலைகுலைந்து முன் பக்கமாக முட்டி மோதி நிமிர்ந்தான், அந்தப் பாண்டி. கலவரமாகக் கேட்டான், "ஏம்மா? ஏதாச்சும் விபத்துங்களா?"

அவனை முறைத்துப் பார்த்தவாறு - கைப்பையைத் திறந்து இரண்டு ரூபாய்த் தாளை உருவி நீட்டினாள், "போய், டீ சாப்பிட்டுட்டு வா, போ!"

"தூங்கற நேரத்திலே எதுக்கும்மா டீ?"

"நீ தூங்காம இருக்கத்தான். நீ குறட்டையா விடறே? பயங்கர சத்தம். ஆச்சு. இன்னும் ஒரு மணி நேரத்திலே போய்ச் சேர்ந்துடலாம். அதுவரை நீ கண் விழிச்சிருக்க வேண்டியது அவசியம். அதுக்கு நீ தூங்கக் கூடாது. தூங்காம இருக்கத்தான் டீ. போ, போய் சீக்கிரமாக் குடிச்சிட்டு வா".

"உங்களுக்கு?"

"நான் டீ சாப்பிட்டால் எனக்குத் தூக்கம் வரும். நான் தூங்கிப் போனால் அவ்வளவு தான். போய்யா, போய் சீக்கிரமாக் குடிச்சிட்டு வா!"

அவன் போனதும் இறங்கி, காற்றாட பானட்டைத் திறந்து வைத்துவிட்டு, காலார உலாவத் தொடங்கினாள்.

சும்மாயிருக்கும் நேரத்தில் அம்மாவிடம் பேசுவதை ஒத்திகை பார்த்தால் என்ன?

போனதும் - 'மம்மி - மை டியர் மம்மி' என்று பாய்ந்து கட்டிக்கொண்டு பொச் பொச்சென்று முத்தம் தரவேண்டும்.

'மம்மி! நான் உன்னோடதான் கொஞ்ச நாள் தங்கியிருக்கப் போறேன். இந்த பங்களாவி லேயே. இந்த ஆளுக்கு மட்டும் ஒரு காட்டேஜைக் கொடுத்துடுங்க'.

'யார் அவன்?' என்று கேட்டால்...

'என் பிசினஸ் பார்ட்னர்' என்று பொய் சொல்லி விடலாம். மதியம் சாப்பாட்டுக்கு அப்புறமாக மெல்ல பேச்சை எடுக்க வேண்டும்.

'மம்மீ! நான் ஒரு சிக்கல்லே மாட்டிகிட்டிருக் கேன்...' கொஞ்சலாகக் கேட்க வேண்டும். 'நீதான் - நீ மட்டும்தான் என்னைக் காப்பாற்ற முடியும்'.

'சொல்லும்மா. என்னாலானதைச் செய் கிறேன்'.

'பிசினஸை மேற்கொண்டு நடத்தப் பணம் வேணும்'.

'சொல்லுடி செல்லமே! எத்தனை ஆயிரம், எத்தனை லட்சம் ஆனாலும் தரேன்!'

'அதுக்கும் மேலே ஒரு படி மேலே போங்க மம்மி! எத்தனைக் கோடி வேணுமானாலும்னு சொல்லேன்'.

'சொல்லிட்டதாக நினைச்சுக்க. ஆனா அவ் வளவு பெரிய தொகை எங்கிட்டே இருக்கா தேம்மா'.

'தெரிஞ்சுதான் ஐடியாவோட வந்திருக் கேன் மம்மி! இது எத்தனை சதுர கிரவுண்ட் இருக்கும்?'

'கிரவுண்ட் கணக்கெல்லாம் வராத காலத் தில் வாங்கின - ஏக்கரா பூமி. நாற்பது ஏக்கர் இருக்கு. ஏன்?'

'மம்மி! லிசன். நீ தனி ஆள். உனக்கெதுக்கு இவ்வளவு பெரிய இடம்? இரண்டோ அஞ்சோ ஏக்கர்ல இந்த பங்களாவை விட்டுட்டு மிச்சத்தை வித்துடலாமே? நல்ல விலை கிடைக்கும். ஒரு ரியல் எஸ்டேட்காரர் சொன் னார். தவிர, இப்ப இருக்கிற நில உச்ச வரம்புச் சட்டப்படி தனி நபர்கிட்டே இவ் வளவு நிலமிருக்கிறது தெரிஞ்சா - அரசு நிர்ணய விலையிலே வைச்சு அரசாங்கமே கையகப்படுத்திடும். நிறைய நஷ்டம் வரும். அதனால சொல்றேன்'.

'செய்யேன். ஆமாம் எனக்கெதுக்கு இவ் வளவு பெரிய இடம்? உன் ரியல் எஸ்டேட் காரரை வரவழை! உடனே வித்துடலாம். உன் பிரச்னையும் தீரும்'.

'தாங்க்யூ மம்மி! மம்மின்னா மம்மிதான். இப்பவே டிரங்க்கால்லே ஆளை வரச் சொல்லிக் கூப்பிடறேன்'.

'செய்யேன்!'

இது ஒரு வகை! யதார்த்தமான பேச்சு வகை!

அடாவடி வழி?

'சொத்துகளை விற்கிறதாவது? எல்லாம் என் பேரில் இருக்கு. என் கடைசி காலத்தில் யார் பேரிலாவது எழுதி வைச்சுட்டுப் போறேன். இப்ப விற்கிறதாக இல்லை'.

'மம்மி! அதை நீ என்ன எழுதி வைக்கிறது? அப்பாவின் உயிலே உனக்கப்புறம் சொத்து எங்களுக்குன்னு எழுதியிருக்கு. அண்ணன் தனக்கு எதுவும் வேண்டாம்னு சொல்லி இருக்கு. பவர் ஆஃப் அட்டர்னி வந்ததும் வக்கீல் நோட்டீஸ் வரும். நீயாக எல்லாம் எழுதிக் கொடுத்தால் நல்லது'.

'இல்லையானா?'

'உயிலின்படி 'உனக்கப்புறம்' என்கிறதை நிறைவேத்தி வைக்க வேண்டியதுதான்'.

"நீ என்ன சொல்றேம்மா?"

'தேவை தீரணும் என்கிறதுக்காக நான் எந்த எல்லைக்கும் போகத் தயார். உன்னைத் தீர்த்துக் கட்டவும் தயங்க மாட்டேன்'.

அம்மா நடுங்கிப் போனாள்.

'அம்மா! நல்லாக் கேட்டுக்க. என் பேச்சைக் கேட்டு நீயாக விற்றால் உனக்கு அஞ்சு ஏக்கராவாவது மிஞ்சும். இல்லாமே பிடி வாதம் பிடிச்சா, ஆறடி நிலம்தான் சொந்தமா

யிருக்கும். இப்பச் சொல்லு. அஞ்சு ஏக்கராவா? அல்லது. ஆறடி நிலமா?'

'இந்த அளவுக்குப் போகிறவளானா பேச என்ன இருக்கு? உன் இஷ்டப்படியே வித்துட லாம். பணத்தையும் நீயே எடுத்துக்கலாம்'.

'மம்மி! என் மம்மின்னா, மம்மிதான்!

"போகலாம்ங்களா?" என்ற கேள்விக் குரலைக் கேட்டு நினைவுக்குத் திரும்பிய வினிதா, கார் பானட்டைச் சாய்த்து அழுத்தி மூடினாள். கதவைத் திறந்து தன்னைச் செருகிக் கொண்டு, கதவை அறைந்து சாத்திக் கொண்டு எடுத்த எடுப்பில் காரைச் சீற விட்டாள்.

நாகர்கோயில் வந்ததும் இரண்டோர் இடங் களில் நிறுத்தி வழி கேட்டாள்.

"என்னம்மா உங்க வீட்டுக்குப் போக நீங்களே வழி கேட்கறீங்க?"

"அப்பா இருந்தப்ப எப்பவோ வந்தது. யாருக்கு நினைவில் இருக்கு?"

விடிகாலை மூன்றரை மணிக்கு, தங்க சொர்க்கம் பீச் ரிசோர்ட்டில் கார் நுழைந்தது. கூர்க்கா வழி மறித்தா.... 'உன் வருங்கால எஜமானி' என்று பயமுறுத்தி விட்டு, இரும்புக் கதவைத் திறக்க வைத்து - கார் வெண்ணெ யாக வழுக்கிக்கொண்டு உள்ளே போயிற்று. போர்ட்டிகோவில் நிறுத்தியதும் காவல் ஆள் வந்து விசாரித்துப் போய் மானேஜரை எழுப்பிக் கூட்டி வந்தான். "யார் நீங்க? ரிசர்வேஷன் எதுவும் பாக்கி இல்லையே?"

"எனக்கு ரிசர்வேஷன் தேவையில்லை. நான் வினிதா. உங்க எஜமானி அனாமிகாவின் மகள். போய்ச் சொல்லுங்க. ஆரத்தியோட வருவாங்க".

புரியாத நிலையில் உள்ளே வரவேற்பில் நுழைந்து இன்டர்காம் தொலைபேசி மூலம் அனாமிகாவுடன் தொடர்பு கொண்டார்.

"வராங்களா?"

"இல்லே. அப்படியொரு மகளே இல்லைன்னு சொல்லிட்டாங்க. காட்டேஜ் இருந்தால் தரச் சொன்னாங்க. இல்லைன்னா திருப்பி அனுப்பச் சொல்றாங்க".

கொதித்துப் போனாள் வினிதா.

—தொடரும்

அழைப்புகள்

குரு. சீனிவாசன்

அன்று காலை அரைமணி நேரத்துக்கு முன்னதாகவே ஆபீசுக்கு வந்து விட்டாள், டைப்பிஸ்ட் தாராபாய். அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் தனது திருமணத்திற்கான அழைப்பிதழ்களை அலுவலகச் சக ஊழியர்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள்.

"தாரா! ஒங்ககிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும். ஒரு நிமிஷம் வரமுடியுமா?" – ஸ்டாஃப் அசோசியேஷன் செக்ரட்டரி தாணுவின் வினயமான வேண்டுகோளை மறுக்க முடியவில்லை, அவளால். என்னவோ ஏதோவென்ற இனம் புரியாத ஒருவகைப் படபடப்புடன் அவன் பின்னே நடந்தாள். வராந்தாவில் வந்து நின்ற தாணு, "வேற ஒன்னும் இல்லே, தாரா! நம்ம அசோசியேஷன்லே ஒரு முடிவு செய்திருக்கோம்...! என்ற பீடிகையுடன் தனது பேச்சை ஆரம்பித்தான்.

'என்ன?' என்ற கேள்விக் குறியை விழிகளில் ஏற்றியவளாக அவனை ஏறிட்டு நோக்கினாள், அவள்.

"நம்ம அக்கவுண்டென்ட் பட்டாபி சாருக்கு தயவு செய்து அழைப்பிதழ் கொடுக்க வேண்டாம். இது என்னோட சொந்த அபிப்ராயம் இல்லேம்மா! நம்ம சங்கத்தின் ஏகோபித்த தீர்மானம்...!"

குதூகலம் கொப்புளித்துக் கொண்டிருந்த தாராபாயின் மனம் குண்டூசி குத்திய பலூனாகச் சுருங்கிச் சூம்பியது.

அந்த அலுவலகத்திலேயே முதல் பத்திரிகையை யாருக்கு வைத்து, யாருடைய ஆத்ம பூர்வமான அருளாசியைப் பெற வேண்டுமென்று திட்டமிட்டு வைத்திருந்தாளோ, அந்த மனிதருக்கு அழைப்பிதழே தரக் கூடாது என்றால்...?

'ஆரம்பத்திலேயே ஓர் அபசகுனமான தடையா?' ஆத்திரத்தால் துடித்தது, அவள் மனம். அசோசியேஷனில் தான் ஓர் அங்கமென்றாலும், தன் சொந்த விஷயத்தில் தலையிடுவதற்கு இவர்கள் யார்?'

'அந்த அப்பாவி மனிதர் மீது இந்த அரக்கர்களுக்கு அப்படி என்ன பொறாமை? இவர்களைப் போல லஞ்ச லாவண்யங்களில் மூழ்கி ஊரை அடித்து உலையில் போட, அவர் இவர்களுக்கு உடந்தையாக இல்லையென்றா? கண்டால் ஒன்றும் காணாவிட்டால் ஒன்றும் பேசி, நாளுக்கொரு கலகத்திற்கு வித்திடும் இந்த நாரத சிகாமணிகளை விட்டு அவர் விலகி விலகிப் போவது இவர்களுக்குப் பிடிக்கவில்லை போலும்! பொய்யும் புரட்டும் மலிந்து போன இந்தக் கலிகாலத்திற்குப் பொருத்தமே இல்லாத அந்தப் புனிதாத்மாவை இந்தப் பாவிகள் ஏன்தான் இப்படி ஒதுக்கி உதாசீனப்படுத்தப் பார்க்கிறார்களோ, தெரியவில்லையே!'

தாராபாய்க்கு வந்த ஆத்திரத்தில் கத்திக் கூச்சலிட வேண்டும் போலிருந்தது. ஆனாலும் எரிச்சலை எச்சிலாக்கி விழுங்கிக் கொண்டு நிதானமாகவே கேட்டாள்.

"வெரி... வெரி... சாரி, மிஸ்டர் தாணு! நான் அதிகம் பேசுறதுக்கு விரும்பலே. இப்படி என்னோட பிரைவேட் மேட்டர்சுலே நீங்க தலையிடுவதாக இருந்தா, ஒங்க அசோசியேஷன்லே எனக்கு மெம்பர்ஷிப்பே வேணாம்!"

திரும்பி தன் சீட்டுக்குப் போக எத்தனித்த தாராபாய்க்கு முன்னாலே போய் அவளை மறித்துக் கொண்டு நின்றான், தாணு.

"பிளீஸ்! நான் சொல்ல வர்றதை முழுசாக் கேட்டுட்டு, அதுக்கப்புறம் ஒங்க இஷ்டம் போலச் செய்யுங்க. பட்டாபி சாரை நாங்க வெறுத்து ஒதுக்குறதா நீங்க தப்பா நெனச்சிடக் கூடாது. அவர் சாமானிய மனுஷரில்லே. நாமெல்லாம் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாத ஒரு சத்தியப் பிழம்பு அவர். அவரை ஓர் அவதார புருஷர் எடத்திலே வச்சு மானசீகமாக ஆராதிக்கிற பக்தர்களிலே நானும் ஒருத்தம்மா! அவரோட காலடிகள் படக் கூடிய இந்த அலுவலகத்தை நம்ம அசோஷியேஷன் ஒரு கோயிலாகவே மதிக்குது. இதுலே இரண்டாவது அபிப்ராயத்துக்கு எடமே இருக்க முடியாது!"

'அப்புறம் எதுக்கு ஒங்களோட இந்த விபரீத முடிவு?' என்பது போலப் பார்வையால் அவனைக் குடைந்தாள், தாராபாய்.

"இந்த ஆபீஸ்லே பியூன் லேருந்து ஜி.எம். வரைக்கும் முப்பது பேர் இருக்கோம். நம்ப வீடுகளிலே கல்யாணம், காது குத்து, கிருஹப்பிரவேசம் அது இது'ன்னு ஒவ்வொரு மாசமும் சராசரி இரண்டு, மூணு விசேஷங்க நடக்குது. ஒரு விசேஷத்துக்கு தலைக்கு இருபத்தஞ்சு ரூவா அளவிலே கிப்ட் கான்ட்ரிபியூஷன். மெம்பர்ஷிப் சப்ஸ்கிரிப்ஷன் பத்து ரூபா – இப்படி மாசா மாசம் ஒவ்வொருத்தர் கிட்டேயும் நியர்லி நாப்பது அம்பதுன்னு வசூல் பண்ணிட்டு வர்றது ஒங்களுக்குத் தான் தெரியுமே!

ஆனாலும் நம்ம பட்டாபி சார், இங்கே ஜாய்ன் ஆகி அஞ்சு வருஷத்துக்கு மேலாச்சு. அவர் வீட்டிலே ஏதாச்சும் ஒரு விழா விசேஷம்னு இதுவரைக்கும் ஒரு தடவையாவது நம்மை இன்வைட்

பண்ணியிருக்காரா? இது மாதிரி லௌகீகக் காரியங்களிலே, வெற்றுச் சடங்குகளிலே அவருக்குப் பிடிப்பில்லேங்கிறது வேறு விஷயம். நம்ம வீட்டு வைபவங்கள்லே அவர் கலந்துகிட்டு இலை போட்டு விருந்து சாப்பிடக்கூட வேணாம். அப்பப்போ ஆபீசுலே நடக்குற பார்ட்டிகளிலே ஒக்காந்து, ஒரு 'டீ'யாச்சும் சாப்பிட்டாருன்னு பாத்திருக்கியா?

இந்த அஞ்சு வருஷத்துலே அப்பப்ப சக ஊழியரோட வீட்டு விசேஷங்களுக்கு அவர் கிட்டேருந்து நம்ம சங்கம் சுமார் மூவாயிரம் ரூபாயைக் கறந்திருக்கு! ஆனா, ஒரு பைசா வாச்சும் நாம அவருக்குத் திருப்பிக் கொடுக்கலே. அதுக்கான வாய்ப்பை பட்டாபி சார் நமக்கு இது வரைக்கும் தரலே!

அதனால இந்த நெலமையிலே மாசா மாசம் அவர்கிட்டேயிருந்து கிப்ட் கான்ட்ரிபியூஷன் வாங்குறது எங்களுக்கு நியாயமாப் படலே. நம்ம வீட்டுப் ஃபங்ஷன்களுக்கின்னு நாம அவருக்கு இன்விடேஷன் தர்றதால்தானே, உரிமையோட அவர்கிட்டே கான்ட்ரிபியூஷனை ஏத்துக்க வேண்டியிருக்கு? அழைப்பிதழ் தர்றதை நாமே தராமே விட்டுட்டா, அவரோட அன்பளிப்புப் பங்கை நாம நாட வேண்டியதில்லே பாருங்க. அதனாலேதான் நம்ம சங்கம் இந்த முடிவுக்கு வந்திருக்கு...!"

இப்படி நீண்டதொரு சொற்பொழிவையே நிகழ்த்தி முடித்த தாணு, தாராவின் அபிப்பிராயத்தை எதிர்பார்ப்பவனைப் போலத் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு பார்வையால் அவள் உள்ளத்தை ஊடுருவினான்.

அசோசியேஷன் எடுத்துள்ள முடிவுக்கு அவன் அடுக்கிக் கொண்டு போன காரணங்களைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அவள் முகத்தில் விசனப் புன்னகையொன்று விரக்தியோடு படர்ந்து மறைந்தது.

"தாணு சார்! எம் பேச்சுக்காக என்னை மன்னிக்கணும். பட்டாபி சாரோட வீட்டு விழா, விசேஷங்களுக்கு அவர் நமக்கு அழைப்பே தரலேன்னு சொன்னீங்களே, அவர் வீட்டிலே விசேஷம் ஏதாவது நடந்ததா? நம்மாலே ருசுப்படுத்த முடியுமா? அவர் அஞ்சு வருஷமா நம்ம 'கொலிக்'கா இருக்கார்; அவரோட குடும்ப ஸ்திதியை நம்ம ஒருத்தராலே யாச்சும் தெரிஞ்சிக்க முடிஞ்சிருக்கா? அவர் மனைவி மக்களைப் பத்திய விவரமாச்சும் நமக்குத் தெரியுமா? மொதல்ல அவர் வீடு எங்கிருக்குன்னு நம்மாலே அறிஞ்சிக்க முடிஞ்சதா? அதுக்கு முயற்சியாவது செய்திருக்கமா?"

தாணுவிடமிருந்து மௌனத்தைத் தவிர பதிலேதும் இல்லை.

"சாரி, மிஸ்டர் தாணு! நாம பெரிசா நெனக்கிற விழா விசேஷமெல்லாம் அர்த்தமில்லாத சம்பிரதாயச் சடங்குகள்னு மதிக்கிறார், அவர். ஆர்ப்பாட்டமான வாழ்க்கை ஆடம்பரங்களை அவர் வெறுத்து ஒதுக்கறதென்னவோ வாஸ்தவம். ஆனா, நாம பேயாப் பறக்குற இந்தப் பணத்துக்கு அவர் துளியும் மதிப்புத் தர்றதில்லையே!

"ஒங்களுக்கு நெனவிருக்கா? நம்ம ஆபீஸ் நைட் வாட்ச்மேன் நரசிங்கத்தின் மகளுக்கு நிச்சயமான கல்யாணம், ஆயிரம் ரூபாய் வரதட்சணை தர்க்கத்தில் நிக்கப் பாத்தது. அவன் நம்மகிட்டே கடன் கேட்டுக் கண்ணீர் விட்டுக் கையேந்தினப்போ, நாம யாருமே மூச்சுக் காட்டலே. யாரு கிட்டேயும் ஒட்டாம ஒதுக்கிப் போற பட்டாபி சாரு கிட்டே நெருங்குறதுக்கே நறுக்குப்பட்டுக்கிட்டு நின்ன அந்த நரசிங்கத்தை வலுவாகக் கூப்பிட்டு, ஆயிரம் ரூபாயை சொளையாத் தூக்கிக் கொடுத்தாரே; அதுவும் கடனா இல்லீங்க! 'ஒரு தங்கச்சிக்கி அவளோட அண்ணன் தர்ற சீதனமா நெனச்சுக்கோ!'ன்னு சொன்ன அந்தப் பரோபகாரியோட வார்த்தைகளை நீங்களோ, நானோ மறக்க முடியுமா சார்?"

தாராபாய் என்ன சொல்ல வருகிறாள் என்பது தாணுவுக்குத் தெளிவாய்ப் புரிந்தது. அவளது பேச்சுக்குக் குறுக்கே பாயமுடியாமல் வாயை மென்று கொண்டிருந்தான், அவன்.

"நான் சொல்றதைக் கொஞ்சம் தயவு செய்து யோசிச்சுப் பாருங்க, பட்டாபி சார்! நம்ம வீட்டு விசேஷங்களுக்கு வர்றாரோ, வரலையோ? ஆனா, அந்தப் புனிதாத்மா மானசீகமா வாழ்த்தினாருன்னா, அதுக்கே நாமெல்லாம் கொடுத்து வச்சிருக்கணும். அவரோட போக்கையும், பாலிஸியையும் பத்தி விமர்சிக்கிற தகுதி நம்மள்லே யாருக்குமே கெடையாது. நீங்க ஏதோ தப்புக் கணக்குப் போட்டு அந்தப் புருஷ உத்தமரைப் புறக்கணிக்கிற தப்பை மட்டும் பண்ணிடாதீங்க! என் மேரேஜ் இன்விடேஷனை அவருக்கு நான் கொடுக்கத்தான் போறேன்!"

அதற்கு மேல் அவள் அங்கே நிற்கவேயில்லை. எதுவும் பேச வாயற்றவனாக நின்றுவிட்டான் தாணு. அதற்கு மேல் வேறு எதைச் சொல்லி அவளைத் தடுத்து நிறுத்த முடியும்?

ஐந்து வருஷங்களுக்கு முன்னே பட்டாபி அந்த அலுவலகத்தில் வந்து பதவி ஏற்றபோது, அவரைச் சாமானியனிலும் சாமானியனாக மதித்து அனைவருமே அசட்டை செய்தனர். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அவரது நடையுடை பாவனைகளில் நாகரிக யுகத்திற்கு ஒவ்வாத படு எளிமை! நாலுமுழக் கதர் வேஷ்டி, காலர் இல்லாத அரைக் கைக் கதர்ச் சட்டை, அவையும் அயர்ன் பண்ணாமல் கைத்துவையலில் காவிப் பழுப்பேறி நிற்கும். சவரக் கத்தியின் தரிசனம் காணாமல், எப்போதும் குறுந்தாடி கப்பி நிற்கும் முகம்! – இத்தனையும் அவரைக் கஞ்சனாக அறிமுகப்படுத்திக் கொண்டு நின்றன.

இவைதான் போகட்டும்; எல்லாரோடும் 'கலகல'வென்று பேசி, சகஜமாகப் பழகினால் என்ன? கேட்டதற்கு மட்டும் ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லி விட்டுச் சதாவும் தன் பணியில் மூழ்கிவிடும் அவனது அந்த 'ரிசர்வ்ட்' டைப், அவனை ஒரு 'டிபிகல் பர்சன்' என்று மற்றவர்கள் ஒதுக்க வேண்டியதொரு சூழ்நிலையை உருவாக்கி விட்டது.


சக ஊழியர்களின் இந்த உதா சீனம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. அவன் உண்மைச் சொரூபத்தை சன்னஞ் சன்னமாக மற்றவர்கள் உணர்ந்து அங்கீகரிக்க வேண்டிய கட்டாயம் காலப்போக்கில் தாமே நேரலாயின.

தற்போது பட்டாபி அனைவர் நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்து நிற்கிறாரென்றால், அதற்கு அவரது பணித்திறன் ஒரு காரணமே அல்ல. எதிலுமே பற்றில்லாத அவரது அந்த அசாத்தியப் போக்கை எவராலும் எடை போட முடியவில்லை. கரன்ஸியையும் காகிதத்தையும் சமமாகப் பாவிக்கும் ஓர் அதிசயப் பிறவியை இந்தக் கலி காலத் திலும் காண முடிந்ததென்றால் வேறென்ன சொல்ல வேண்டும்?

இவை எல்லாவற்றையும் விட அவரிடம் மேலோங்கி நின்ற ஓர் அமானுஷ்ய சக்தி இருக்கிறதே...! அதுதான் அனைவர் மனதிலும் அவர் மீது ஓர் அதீத பயபக்தியை உருவாக்கி, அயர வைத்துவிட்டது. டீனதில் பட்டதைப் 'பட்'டென்று சொல்லிவிடும் பட்டாபியின் சொற்கள், அப்போதைக்கப் போதே பலிதமான அந்த நிஜங் களை நினைத்து நெஞ்சம் நடுங் காதவர்கள் அங்கே யாரு மில்லையே!

'கருநாக்குப் பேர்வழி' என்று கடும்பட்டம் சூட்டியவர்களுக்கு மத்தியில், 'அவருக்குள் ஏதோ ஒரு மீடியா சக்தி இயங்குகிறது!' என்று உள்ளார்ந்த பக்தியோடு ஒதுங்கிப் போனவர்களே நிறையப் பேர் இருந்தனர்.

ஆரம்பத்தில் அவரை ஒரு சூனியக்காரன் என்று அவசர முடிவு எடுத்தவர்கள்கூட, இன்று அவன் வாயினால் ஒரு நல்ல வாக்கினைச் சம்பாதித்து நலங் காணத் தவம் கிடக்கிறார்களே! அவர்களில் ஒருத்திதான், டைப் பிஸ்ட் தாராபாய்.



அலுவலக நேரம் முடிந்த தால் இருக்கைகள் ஒவ்வொன் றாகக் காலியாகிக் கொண் டிருந்தன. ஆனால் பட்டாபி மட்டும் இன்னும் பைல்களை ஆராய்ந்து கொண்டிருந்தார். காலையில் தானுவால் தடுக்கப் பட்டதால், குழம்பிப்போய் யாருக் குமே இன்விடேஷனை வழங்காமல் பொழுதைப் போக்கிவிட்ட தாரா பாய் தீர்க்கமானதொரு முடிவுடன் பட்டாபியிடம் போனாள். மஞ்சள் தடவிய முதல் முகூர்த்தப் பத் திரிகை அவள் கைகளில் இருந்தது.

பவ்வியமாக வணங்கிய தாராவை எதிர் இருக்கையைக் காட்டி அமரச் செய்த பட்டாபி, 'என்னம்மா விசேஷம்?' என்று விழிகளாலேயே விசாரித்தார். திருமண அழைப்பிதழை மிகவும் பணிவுடன் அவரிடம் சமர்ப்பித்த

தாராபாய், "காமிங் சண்டே, வடபழனி முருகன் கோயிலிலே எனக்கு மேரேஜ், சார்! நீங்க கட்டாயமா நேரிலே வந்து இந்தச் சகோதரிக்கு ஆசி வழங்கி என்னைக் கௌரவப்படுத்தணும்!" என்று மிகவும் பக்தி சிரத்தையோடு விண்ணப்பித்தாள்.

சற்று நேரம் சங்கோஜமான ஒரு சங்கடத்திற்கு ஆளாகிப்போன பட்டாபி, ஒரு வகையில் சமாளித்துக் கொண்டு, "மன்னிக்கணும்மா! விழா, விசேஷங்களுக்குன்னு ஒரு தனி உடை, அலங்காரம், ஆடம்பரம் - இதெல்லாம் எனக்கு ஒத்துக்காத சங்கதி. இந்தப் பித்துக்குளித் தோற்றத்தோடு நான் வரவா? கண்றாவிக் கோலத்திலே வந்து, கலகலப்பான அந்த வைபோக ஸ்தலத்துக்கு ஒரு திருஷ்டியை ஏற்படுத்த விரும்பலேம்மா...!" என்று நெஞ்சில் உள்ளதை வார்த்தைகளில் வடித்தார்.

"சத்தியமாச் சொல்றேன், சார்! உங்களோட தோற்றத்தைப் பத்தியோ, டிரஸ்ஸைப் பத்தியோ துளியும் கவலையில்லே, எனக்கு. உங்க புனிதமான பாதங்க அந்த மண்டபத்திலே பட்டாலே, எனக்குக் கோடிப் புண்ணியம் கெடச்சதா பூரிச்சுப் போவேன்!"

பேச்சின் மூலமாக அவளுக்கொரு பிடியைக் கொடுத்துவிட்ட தனது தவறினை எண்ணித் தவித்துப் போன பட்டாபி, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக, "உம், பாக்கலாம்மா! முடிஞ்சா வாரேன்!" என்று அந்த விவாதத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி காண முயன்றார். ஆனால் தாராபாய் விடுவதாக இல்லையே!

"இப்படிச் சொன்னா, என் மனசு சம்மதப்படாது, சார்! நீங்க மட்டும் என் மேரேஜுக்கு வரலேன்னு வச்சுக்கங்க; அப்புறம் மத்தவங்க மாதிரி நானும் ஒங்களப்பத்தி ஒரு தவறான அபிப்பிராயத்துக்கு வரவேண்டியதிருக்கும்!"

புதிர் கலந்த அவளது பேச்சு அவனை நிமிர்ந்து உட்கார வைத்தது.

"என்னம்மா சொல்றே, நீ? தப்பு அபிப்பிராயமா? மத்தவங்க

பா. குமரன்

விண்மீன்கள்

கொட்டி வைத்த
முல்லைகள்!
கட்டி வைக்க
நாரும் இல்லை
எண்ணி முடிக்க
ஆளும் இல்லை!

என்னைப்பத்தி அப்படி என்னதான் தப்பா நெனக்கிறாங்க?"

"நீங்க எல்லாரையும் உதாசீனப்படுத்தி ஒதுங்கி ஒதுங்கிப் போறீங்களாம். எத்தனை பேர் அழைப்புக் கொடுத்தாலும், யார் வீட்டு விசேஷத்துக்காவது அட்டண் பண்ணியிருக்கீங்களா? இந்த அஞ்சு வருஷத்துலே ஒங்க வீட்டு விழா, விசேஷமுன்னு யாரையாச்சும் இன்வைட் செய்ததுண்டா? அதனாலே இனிமே எந்தக் காரியங்களுக்கும் ஒங்கள இன்வைட் பண்ணவோ, ஒங்க கிட்டேருந்து அன்பளிப்புப் பங்குத் தொகை வாங்கவோ கூடாதுன்னு நம்ம அசோசியேஷன்லே தீர்மானம் பண்ணியிருக்காங்க".

"ப்பூ... இவ்வளவுதானா?" பட்டாபி 'கடகட'வென்று வாய்விட்டுச் சிரிப்பதைத் தாராபாய் அன்றுதான் பார்க்க நேர்ந்தது. அந்தப் புதுமையான அனுபவம் அவளைப் புல்லரிக்க வைத்துவிட்டது.

"என் வீட்டிலே ஒரு விசேஷம் நடக்கணும். நீங்க எல்லாரும் அதிலே கலந்துக்கணும். அவ்வளவுதானே? கட்டாயம் சீக்கிரமே நடக்கும்மா! அப்போவாச்சும் ஒங்க தப்பு அபிப்பிராயம் நீங்கினாச் சரி!"

அதற்குள் மானேஜரிடமிருந்து பட்டாபிக்கு அழைப்பு வந்தது. எழுந்து நின்று கொண்ட அவர், "நீ கவலைப்படாமே போ, தாயி! இந்த அண்ணனோட வாழ்த்துகள் உனக்கு எப்பவும் உண்டு!" என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

நிம்மதி நிறைந்த நெஞ்சோடு திரும்பி நடந்தாள் தாராபாய்.

அன்று வெள்ளிக்கிழமை. கல்யாணத்துக்கு இடையில் இன்னும் ஒரு நாள்தான் இருக்கிறது.

தனது லீவு அப்ளிகேஷனைக் கொடுக்க தாராபாய் காலை பத்தரை மணிக்கு மேல்தான் ஆபீசுக்கு வந்தாள்.

இதென்ன அலுவலகத்தில் இப்படியொரு பரபரப்பு! கலவரம் கப்பிய முகத்தோடு எல்லாரும் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். எதிர்ப்பட்ட நைட் வாட்சுமேன் நரசிங்கத்தை நிறுத்தி விஷயம் என்னவென்று விசாரித்தாள், தாராபாய்.

"பட்டாபி சார்! நம்ம அல்லாத்தையும் அழ வச்சிட்டுப் போயிட்டாரு தாயி!" சொல்லி முடிக்கு முன் 'கோ'வென்று கதறிவிட்டான், அவன்.

திக்பிரமை பிடித்தவளாக நின்றுவிட்ட அவளுக்குத் தனது செவிகளையே நம்ப முடியவில்லை.

'சத்திய யுகத்தில் சஞ்சரிக்க வேண்டிய அந்த சகோரப் பட்சி, கலியுகத்தின் கடுமை தாளாமல் பறந்துவிட்டதா?'

"என் வீட்டிலே ஒரு விசேஷம் நடக்கணும். நீங்க எல்லாரும் அதிலே கலந்துக்கணும். சீக்கிரம் கட்டாயம் நடக்கும்மா...!"

இரண்டு நாள்களுக்கு முன் பட்டாபி சொன்ன அந்த வார்த்தைகள் அவள் காதுகளில் எதிரொலி புரிந்து மறைந்தபோது அவள் பேதலித்துப் போனாள்.

'பட்டாபி சார் கணித்துச் சொன்ன அவர் வீட்டு விசேஷம் இதுதானா? இந்த விசேஷத்துக்கு அவர் வாயாலேயே இப்படியோர் அட்வான்ஸ் அழைப்பா?'

தாராபாய் நினைத்து நினைத்து மருகிக் கொண்டிருக்கும்போது அங்கே வந்த தாணு, புற நகரில் உள்ள ஓர் ஆசிரமத்தின் பேரைச் சொல்லி, "பட்டாபி சார் அங்கேதான் அடங்கிப் போனார்!" என்று கூறிக் கண்ணீர் விட்டான். அந்தத் தனிப் பறவையின் புனிதக் கூடு கூட ஓர் ஆசிரமம்தானா?'

சிலையாக நின்று கொண்டிருந்தாள் தாராபாய்.

குழந்தைகள்

க. பஞ்சாபகேசன்

மதுரை ரயில் நிலையத்தில் சென்னை செல்லும் எக்ஸ்பிரஸ் வண்டிக்குக் கூட்டம் இருக்காதோ? அன்று விசித்திரம்தான். பெட்டிகளெல்லாம் ஏனோ வெறிச்சோடியிருந்தன.

என்னதான் மதுரையிலிருந்து புறப்படும் பகல் நேர எக்ஸ்பிரஸாக இருந்தாலும் –

இப்படியா அங்கொருவர் இங்கொருவராக ஜன்னல்புறம் உட்கார்ந்து உள்ளே முடங்கிக் கிடப்பார்கள்?

என் மனசில் ஏற்கெனவே வேகமும் கொந்தளிப்பும் அதிகமாக இருந்தன. கையில் ஒரே ஒரு சிறிய தோல் பெட்டி. அதற்குள் நான் அவசரம் அவசரமாய்த் திணித்துக் கொண்ட மூன்று புடைவைகள், சோளிகள், சீப்பு, பர்ஸ்... இத்யாதி.

பர்ஸுக்குள் "'அவருடைய' சம்பளத்திலிருந்து கடந்த சில மாதங்களில் சேர்த்ததாக" நினைத்த பணம். அதில் சென்னைக்கு டிக்கெட் வாங்கியது போக மீதம் கணிசமாகவே இருந்தது.

வண்டி புறப்பட இன்னும் பத்து நிமிடம். ஒருமுறை நீள நடந்தேன். ஒரு 'கம்பார்ட்மெண்ட்' அநேகமாகக் காலியாக இருந்தது. உள்ளே போய் உட்கார்ந்ததும் குரல்கள் –

'அம்புலு, தண்ணீர்க் கூஜாவை நினைவா எடுத்து வைச்சியா?"

"நன்னாயிருக்கு. நீங்க ஓர் ஓவர்ஹெட் வாட்டர் டேங்க் ஆச்சே, எடுத்து வைக்க மறப்பேனா?"


"ஆமாண்டி, நான் வாட்டர் டேங்க்தான். என் லைஃப்லே எத்தனையோ கட்டடங்களைக் கட்டியிருக்கேன். காண்ட்ராக்டர் - கம் - இஞ்சினீயர். இப்போ இந்த சந்தோஷமான பிரயாணத்தின் ஆரம்பத்திலேயே நமக்குள் எதுக்குக் கெடுபிடி, அம்புலு? ஒரு டம்ளர் தண்ணீர் கொடு!"

நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருக்கும் தம்பதிதான். அவர்கள் உட்கார்ந்திருந்த பகுதியை அடுத்துப் பெஞ்சில் ஓர் ஓரத்தில் அமர்ந்தேன். கைப் பெட்டியை பெஞ்சுக்கு அடியில் வைத்தேன்.

நான் வந்து உட்கார்ந்த உடனேயே இருவரும் என்னைக் கொஞ்சம் தீர்க்கமாகவே பார்வையால் அளந்து விட்டது புரிந்தது.

எக்ஸ்பிரஸ் புறப்பட முதல் மணி அடித்தாகிவிட்டது.

"ஸ்டேஷன் மாஸ்டருக்கு 'டாட்டா' காட்டுவோமா?" என்றார் அவர்.




அந்த அம்மாள் சிரித்துக் கொண்டே, "கல்யாணம் ஆகி இருபத்தஞ்சு வருஷம் ஆனதுதான் மிச்சம். உங்க குழந்தை புத்தி இன்னும் போகலை" என்றாள்.

"அம்புலு! ரயில் புறப்பட்டாச்சு. நாளைக் காலையிலே நாம நம்ம 'சில்வர் ஜுபிலி' கொண்டாடப் போறோம். இப்படி 'கசமுச' வேண்டாமே" என்று சொல்லி அவரும் ரொம்ப வெகுளியாகச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பில் கலந்து கொண்ட அம்மாளும், "மெதுவாப் பேசுங்கோ. சின்னப் பொண்ணு வந்து உட்கார்ந்திண்டிருக்கு" என்றாள்.

இவர்கள் இருபத்தி ஐந்து ஆண்டுகள் முடிந்து இருபத்தி ஆறாவது ஆண்டை இன்னும் இருபத்தி நாலு மணி நேரத்தில் தொடங்க மீண்டும் ஒரு 'ஹனிமூன்' போகிறார்கள். நானோ? –

இருபத்து ஐந்து மாதங்களுக்கு முன்னால்தான் என் கல்யாணம். மெட்ராசில் இந்த 'யானை விலை குதிரை விலை' நாளில் அமர்க்களமான திருமணம். அப்பா கொஞ்சமாகவா செய்தார்? ஒன்றரை லட்சத்துக்கும் மேல் செலவு. மாப்பிள்ளை மதுரை பாங்க் ஒன்றில் சீஃப் மானேஜர் ஆயிற்றே! அவர் வாங்கியிருந்த படிப்புப் பட்டங்கள் இரண்டு வரி நீளும். சும்மா சொல்லக் கூடாது. நல்ல அழகு, இளமை. என் கண்ணுக்கும் நிச்சயமாய் நிறைந்தவர்தான். ஆனாலும் நான் இப்போது, இப்படி, இந்த ரயிலில் –



"மணி ஒன்பதாகப் போகிற தேடி.. திண்டுக்கல் வரப் போறது. கொஞ்சம் எலுமிச்சம் பழச் சாதம் தர்றியா?"

"பறக்க ஆரம்பிச்சுட்டேளே".

"ஹனிமூன்டி".

"நல்ல ஹனிமூன்! சரி, எடுத்துத் தர்றேன்". கொண்டு வந்திருந்த டிபன் காரியர்களில் ஒன்றைப் பிரித்தாள் அந்த அம்மாள்.

மேல் தட்டில் தும்பைப் பூவைப் போல் வெளுத்திருந்த பொரித்த அப்பளமும் வடகமும். கீழ்த்தட்டில் அருமையான எலுமிச்சம் பழச் சாதம். அவர் சற்றே எழுந்து போயிருந்த அந்த நேரத்தில் அந்த அம்மாள் என்னிடம் மஞ்சள் மினுமினுப்புள்ள முகத்துடன் சிரித்துக் கொண்டே –

"குழந்தைதான் எப்பவும். இவரோடு இருபத்தஞ்சு வருஷமா மல்யுத்தம் போட்டுண்டு நீச்சலடிச்சு வந்துட்டேண்டியம்மா. இந்த மஞ்சள் சாதம்னா இவருக்கு உசிர். எங்க வெள்ளி விழாக் கல்யாண நாளாம். இரண்டாவது தேன்நிலவாம். மெட்ராசில் அறை எடுத்துத் தங்கணுமாம். தங்கை, தம்பி எல்லாரும் அங்கே இருக்கா. ஆனா அவாளையெல்லாம் வெறுமே 'விசிட்'தான் பண்ணணுமாம். மனுஷன் வளையறபடி வளைஞ்சிண்டிருக்கேன். அதுசரி, நீ ஏம்மா இப்ப ஒரே ஒரு பெட்டியோடு, அதுவும் தனியா வந்திருக்கே? வா, எங்களோடேயே சாப்பிடு".

"வேணாம் மாமி! நான் ஹெவியா டிபன் சாப்பிட்டுட்டுப் புறப்பட்டேன்" என்றேன். இதற்குள் அவரும் வந்துவிட்டார். அங்கு உணவுப் பரிமாறல் உளப் பூர்வமாக நிகழ்ந்து கொண்டிருந்த போது –

என் மனம் அலை பாய்ந்தது. நெஞ்சின் ஆழத்துக்குள் புதைந்து விட்ட – நெஞ்சை ஆழ ஆழப் புதைத்த – அந்த முதல் நிகழ்ச்சி நினைவில்...

மீனாட்சி சந்நிதானம். அம்பாள் எத்தனை உயரமோ அத்தனைக்கத்தனை அழகு. தோடுகளும் மூக்குத்தியும் நெற்றிப் பொட்டுமாக ஜொலிக்க, அந்த அபூர்வ தெய்விகச் சிவப்பு நிறப் புடைவையில் அம்பிகையின் கோலத்தைத் தரிசித்துக் கொண்டிருந்த நான் அருகில் குரல்கள் கேட்கவும் திரும்பினேன்.

"சௌம்யா, நீயா?"

"ஹலோ பரத், நீங்களா?"

எனக்குப் பின்னால் சந்நிதியின் இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்த அவருக்குப் பின்னால் அந்த சௌம்யா.

முகத்தை அம்பாளின் பக்கம் திருப்பிக் கொண்டேன். பே[illegible]ல அவர்கள் பேசுகிறார்கள் –

"பரத்! நாம் பார்த்து அஞ்சு வருஷம் ஆகியிருக்குமே? யூ ஆர் மார்வலெஸ். காலேஜில் பார்த்ததைவிட இப்போ உங்களிடம் அழகு கூடியிருக்கு".

"அப்படியா சௌம்யா?"

என்னதான் நெடு நாள்கள் கழித்துச் சந்திக்கட்டுமே, இப்படியா, அதுவும் அம்பிகையின் சந்நிதானத்தில்?

"நான் எப்படி இருக்கேன் பரத்?"

"ஃபூல்! பருத்துவிட்டாய். கழுத்தில் தாலி மின்னல் அடிக்கிறதே?"

"ஆனா பரத்! நீங்கள் எனக்கு எழுதியிருக்கிற கடிதங்களை எல்லாம் பத்திரமாய் வைச்சிருக்கேன். என் கடிதங்களை என்ன செஞ்சீங்க?"

எதிரே தீபாராதனை. பொன்னிறமான பேரொளியில் உலகத் தாயின் முகத்தில் ஒரு சுணக்கம் போல் எனக்குத் தோன்றியது. உள்ளத்தில் ஒரு நெருப்புத் துண்டு புரள்வதுபோல்...

இவர் தீபாராதனையைச் சேவிக்கக்கூட இல்லையே? அவள் கேள்விக்கு இவர் பதில் சொல்லிக் கொண்டல்லவா இருக்கிறார்!

"நோ, சௌம்யா! உன் லெட்டர்ஸை நான் பாதுகாக்கவில்லை. நம் வாழ்க்கைகள் வேறு மாதிரியாகிவிட்ட பிறகு... ஓ! மறந்துவிட்டேனே... இது என் மனைவி சுகுணா. இது சௌம்யா. சும்மா இல்லே சுகுணு! அஞ்சு வருஷம் சேர்ந்தே காலேஜிலே படிச்சோம்".

இப்போது சௌம்யாவின் முறை –

"அதோடு இல்லை மிஸஸ் பரத்! இப்போ இத்தனை காலத்துக்கு அப்புறம், இவரை – உங்க கணவரை – 'மீட்' பண்றதில் எனக்கு ஒரு 'த்ரில்'லே ஏற்படுது. நீங்கள் ரொம்ப அழகாக இருக்கீங்க, சுகுணா! பரத்தின் செலக்ஷன் அருமை".

அம்மன் சந்நிதியை விட்டு வெளியே வந்தோம். எனக்கும் சௌம்யாவுக்கும் நடுவில் இவர் வந்து கொண்டிருந்தார்.

வண்டி திண்டுக்கல்லைத் தாண்டிவிட்டது. காலை வெயிலுக்குச் சூடு பிடித்திருந்தது. 'சில்வர் ஜூபிலி' தம்பதியும் சற்றே ஓய்ந்தாற் போலிருந்தார்கள். என் மனம் மீண்டும் பழைய நிகழ்ச்சியை அசை போடுகிறது.

கோயிலை விட்டு வெளியே வந்தோம்.

"சௌம்யா! நாங்கள் ஸ்கூட்டரில் வந்திருக்கோம். உன் ஜாகை..." என்றார் இவர்.

"நாங்கள் தங்கம் டாக்கீசுக்குப் பக்கத்தில் குடியிருக்கோம்" சௌம்யா.

இவர் தன் கைப் பையிலிருந்து 'விசிட்டிங் கார்'டை' எடுத்து அவளிடம் கொடுத்தார்.

"உன் கணவரோடு கண்டிப்பாய் வா, சௌம்யா!"

சௌம்யா விசிட்டிங் கார்டைப் பார்த்து, "நீங்க நல்ல வேலையில் இருக்கீங்க, பரத்! நான் அமெரிக்கன் காலேஜில் லெக்சரர்... சரி, வரட்டுமா? மிஸஸ் பரத்! கண்டிப்பாய் உங்க வீட்டுக்கு வருவேன். நீங்க ஓர் அதிர்ஷ்டக்காரப் பெண். ஆனா உங்க கணவர் ஓர் அப்பாவி. ரொம்ப நல்லவர். யூ ஆர் வெரி லக்கி... பை... பை" என்று கூறிவிட்டு நடந்து விட்டாள்.


இவர் ஏன் தயக்கமாய்க் கொஞ்ச நேரம் அவள் சென்றதையே பார்த்துக் கொண்டிருந்தார்?

"சரி, சுகுணு! புறப்படலாம்" என்றார். சுகுணா என்ற என் பெயரை, தன் மனசில் குஷி உணர்வு பிறக்கும் போதெல்லாம் 'சுகுணு' என்று மாற்றி அழைக்கும்போது எனக்கும் குஷியாகத் தான் இருக்கும். ஆனால் இப்போது இந்த வார்த்தை, கொஞ்சல் ஓர் எரிச்சலையே தந்தது.

அன்று இரவு.

இயல்பாகப் பேச்சு சௌம்யாவைச் சுற்றி வளைந்தது. நான் கொஞ்சம் துடுக்காகவே பேசினேன்.

"காலேஜில் அஞ்சு வருஷம் படிச்சவள், எம்.ஏ. பட்டதாரி. லெக்சரர். கல்யாணமும் ஆகி விட்டது. இன்னமும் தன் மாஜி



காதலர் எழுதிய கடிதங்களை ரிசர்வ் செய்கிறாளாம். ஒண்டர் ஃபுல்!" - நானும் சௌம்யாவின் அளவுக்குப் படித்தவளானாலும், படிப்பு தர வேண்டிய அடக் கத்தை மறந்து பேசினேன்.

"அர்த்தமில்லாமல் இதென்ன பேச்சு? சாதாரணமாகத் திரு மணத்துக்கு முன்னால் - அதுவும் காலேஜ் வாழ்க்கையில் ஏற்படக் கூடிய ஓர் 'இன்ஃபாடியுவேஷன்' உணர்வுதான் இது. சிலர் விஷயத் தில் இது முற்றிக் கல்யாணத் திலோ அல்லது இன்னல்களிலோ முடியலாம். ஆனால் என் விஷ யமும் அப்படியா? அவளும் எழுதினாள்; நானும் எழுதினேன். அவ்வளவுதான்" - சொல்லிக் கொண்டே வந்து, பெரிதாகச் சிரித்து, தொடர்ந்தவராய் -

"ரொம்பப் பைத்தியக்காரத் தனம்; முட்டாள்தனம். நான் ஓர் இலக்கியப் பித்தன். இப்போதும் அப்படித்தான் என்று உனக்கே தெரியும். அப்போது நான் படித் தவற்றின் ஒரு விமர்சனமாகத் தான் அந்தக் கடித முயற்சிகள் இருந்தன. சீரியஸாகவே நான் அதை நினைக்கவில்லை".

"அதுதான் அந்த இலக்கியப் பொக்கிஷங்களை அவள் பாது காக்கிறாளே".

"எஸ். அவளுக்கு அப்படித் தோன்றியிருக்கிறது. அதனால் பாதுகாக்கிறாள். சுகுனு! அந்தப் பெண் எப்போதும் ஒரு வெளிப் படையானவள். ஒரு குழந்தை. அந்தக் காலத்திலேயே அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'பரத்! உங்கள் கடிதங்களில் காதலைவிட இலக்கியத்தையே நான் அதிகம் பார்க்கிறேன். ஒரு சுத்தமான, புதிய இலக்கியம் அது' என்பாள். அதனால்தான் இப் போதும் பாதுகாப்பதாகச் சொல் கிறாள். அது ஓர் இலக்கியப் பரி வுணர்வுதான். உலகமும் - நீயும் - இப்போது நினைப்பது போல், அது காதல் இல்லை. அதனால் தான் அது கல்லூரி வாழ்க்கை யோடு முடிவு ஆனது. எனக்கு நீ கிடைத்தாய்".

அவர் முடிக்கவில்லை. சீறி னேன் நான்.

"ஆமாம், உங்களுக்கு நான் கிடைத்தேன். அவளுக்கு வேறு யாரோ கிடைத்தார்." கோயிலில் தான் பார்த்தேனே. அதுவும் அம்பிகை சந்நிதானத்துக்கு எதிரில்".

"சுகுணா!".

"ஏன் கத்தறீங்க இப்படி? அட்ரஸ் நீங்களும் கொடுத்து, அவளும் தங்கம் டாக்கீசுக்குப் பக்கத்தில் இருப்பதாக... அவள் நம் வீடு தேடி வருவதற்குள், நீங்களே போய்ப் பாருங்கள்".

"இது ரொம்ப அதிகம், சுகுணா!"

"ஆமாம். உங்கள் அழகைப் புகழ்ந்தாளே, இப்போது நீங்கள் இன்னும் அதிக அழகாக இருப்ப தாக".

"ஒரு படித்த பெண்ணான நீயா இப்படிப் பேசுகிறாய்? மறந்து, மடிந்துபோன நினைவுகள் அவை. இதை முன்பே உன்னிடம் சொல்லியிருந்திருக்க வேண்டும்... சரி, எனக்குத் தூக்கம் வருகிறது" அவர் புரண்டு படுத்துவிட்டார்.

எக்ஸ்பிரஸ் திருச்சி ஜங்ஷனுக் குள் நுழைந்து கொண்டிருந்தது.

வண்டி திருச்சி தாண்டுகிறது. வெளியே பிற்பகல் நேரம் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நேற்று மாலை நடந்த சம்பவம் என் நெஞ்சில் விரிகிறது.

"சுகுணா ! உனக்குப் பிடிச்ச அசல் காஷ்மீர் ஆப்பிள் பழம் வாங்கி வந்திருக்கேன் துண்டு பண்ணிக் கொண்டு வா, சேர்ந்து சாப்பிடுவோம்".

பெரிய, குண்டான, சிவப் பொளி வீசிக் கொண்டிருந்த பழங்கள். இரண்டு பழங்களைக் கையில் வாங்கிக் கொண்ட நான் என்ன செய்தேன் தெரியுமா?

ஹாலில் மூலைக் கொன்றாய்த் தூக்கி எறிந்தேன்.

அவரோ -

"ரொம்பக் கோபமா இருக் கியா?" என்று சாந்தமாகக் கேட் டார். இது புருஷ சாணக்கியமோ?

நான் பேசவில்லை.

"சரி, காபியாவது கொடு".

மௌனமாக உள்ளே சென்று பிளாஸ்கையும் டம்ளரையும் எடுத்து வந்து மேஜை மேல் வைத்தேன்.

அவர் காபியை நிதானமாகக் குடித்துக் கொண்டே, "சௌம்யா டெலிபோன் செய்தாள்" என்றார்.

யார் கேட்டார்கள்?

"காலேஜ் அலுவலாக நாளை மெட்ராஸ் போகிறாளாம். ரெண்டு நாளில் திரும்பி விடுவாளாம். வர்ற ஞாயிற்றுக்கிழமை தன் கணவரோடு நம் வீட்டுக்கு வர் றாளாம். உன்னிடமும் சொல்லச் சொன்னாள்".

காபியைக் குடித்துவிட்டு இரண்டு மூலைகளில் சிதறிக் கிடந்த ஆப்பிள்களை எடுத்து வந்து மேஜை மேல் வைத்தார். நிதான மாகச் சொன்னார் -

"நான் உளறிக் கொட்டியிருந்த இலக்கியப் பிதற்றல்களை அவள் நட்புணர்வாய்ப் பத்திரப்படுத்தி இருக்கிறாள். அவ்வளவுதான். அதை அவள் கணவர் படித் திருக்கலாம்; படித்திராமலும் இருக்கலாம். அவள் ஒரு குடும்பப் பெண். உன்னைப்போல, மகிழ்ச்சி யோடு குடும்பம் நடத்துகிறாள். நாமும் மகிழ்ச்சியோடு இருக் கிறோம். கோப உணர்ச்சி வந் தால், அதை வெறும் காலைப் பனி என்று ஒதுக்கிவிடு, சுகுணா!".

அவர் சொல்லச் சொல்ல என்னுள் மேலும் வெறி ஏறிக் கொண்டிருந்தது.

"நான் தீர்மானித்து விட்டேன், நாளைக் காலை எக்ஸ்பிரஸில் மெட்ராஸ் புறப்படுகிறேன். என் அப்பாவிடம் கேட்கப் போகிறேன்".

"என்ன சொல்றே சுகுணா?"

"பெரிய பாங்க் மானேஜர்... ரொம்பப் பெரிய பட்டமெல்லாம் வாங்கினவர்... தங்கமாய்க் கொடுத்து வைரத்தை வாங்கிய தாக நினைத்தீர்களே அப்பா! அவர் ஒரு கண்ணாடி மணிதான் என்று சொல்லப் போகிறேன்".

"இதுதான் உன் தீர்மானமா?"

"எஸ்".

ரயில் விருத்தாசலத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

சில்வர் ஜுபிலி தம்பதி எனக்கு ரொம்பவும் வலுக் கட்டாயமாகக் கொடுத்திருந்த சித்திரான்னங்களைச் சாப்பிட்டேன். மனச் சூடு குறையக் குறையப் பசியும் எடுத்திருந்தது.

உணர்வலைகள் சாந்தப்பட்டு –

பசி அடங்கி –

கனிவு உணர்வு தோன்றியது. அவர் எங்கே சாப்பிட்டிருப்பார்? மதுரையில் இல்லாத ஒட்டல்களா? வாரத்துக்கு ஒரு நாள் சமைக்கக் கூடாது என்று வலுக்கட்டாயமாக ஒட்டலுக்கு என்னை இழுத்துக் கொண்டு போகிறவராச்சே!

அம்புலு அம்மாள் டிபன் பாத்திரக் காரியர்களைக் கழுவி வர 'பேசின்' பக்கம் சென்றிருந்தபோது அவர் என்னிடம் சொன்னார்.

"அம்புலு ஒரு குழந்தை. என்னோடு அப்பப்ப சண்டை பிடிக்கிறாளேன்னு நினைக்காதே. அவ மனசிலே ஒண்ணுமே கிடையாது. அதே மாதிரி என் மனசும் அவளுக்குத் தெரியும். எங்க ரெண்டு பேர் மனசிலும் இது ஒண்ணுதான் ரகசியம். இப்படியே இருபத்தஞ்சு வருஷத்தை ஒட்டிட்டோம். இவ தம்பியைத்தான் குழந்தையா எடுத்து வளர்த்தோம். இப்பத்தான் அவனுக்குக் கல்யாணமும் செஞ்சு வைச்சோம். அவனும் மதுரையிலேதான் இருக்கா. ரொம்ப ஒட்டுதலா இருக்கா. பாரு எங்களை வழி அனுப்பக் கூட வரலை. அவ்வளவு ஒட்டுதல். அவனுக்கு நேரமில்லை".

"என்ன! இவர்களுக்குக் குழந்தையே இல்லையா?" இப்படி நான் எண்ணிக் கொண்டிருந்தபோது அம்மாள் வந்து கொண்டே "பிரதாபத்தையெல்லாம் கொட்டி அளக்கிறாரோ? குழந்தை இல்லாவிட்டால் என்னடியம்மா? இவரே எனக்குக் குழந்தை. இருபத்தஞ்சு வருஷமா இதைச் சீராட்டறேன்" என்றாள்.

இருவரும் சிரிக்க அதில் நானும் கலந்து –

விழுப்புரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது ரயில்.

என் நெஞ்சில் தாலாட்டு. "அவர் என்ன தப்புச் செய்து விட்டார், நான் இப்படிப் பறந்தடித்துப் பிறந்தகம் புறப்பட்டதற்கு?"

பிற்பகலின் இறுதியில் ரயில் எழும்பூருக்குள் நுழைந்தது.

வெள்ளி விழாத் தம்பதியிடம் நான் விடை பெற்றபோது, "நீயும் எங்களைப் போல் சில்வர் ஜுபிலி கொண்டாட வேண்டும் அம்மா!" என்றார் அந்தக் காண்ட்ராக்டர் – கம் – இஞ்சினியர்.

அம்புலு அம்மாளோ, "வரேண்டியம்மா! இனிமே இப்படித் தனியா வராம, 'துணை'யோடு வர மறக்காதே. இவருக்கு நான் துணை; எனக்கு இவர் துணை. நாள் பூரா பார்த்தியே" என்று 'கலகல'வென்று சிரித்துக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கினாள்.

துணை!

"நான் புறப்படப் போகிறேன்" என்று வைராக்கியத்துடன் புறப்பட்டு விட்டாலும், பகல் பூராவும் ரயிலில் அந்தத் 'துணை'யின் நினைப்பில்தானே வந்தேன்?

கைப் பெட்டியுடன் இறங்கினேன்.

"என் பின்னால் குரல்; "ஹலோ, சுகுணா".

சௌம்யா நின்று கொண்டிருந்தாள். நேற்று, 'சௌம்யா நாளை மெட்ராசுக்குப் போகிறாள்' என்று அவர் சொன்னாரே, அவளும் இந்த வண்டியிலேயே வந்திருக்கிறாளா?

"சுகுணா! இவர் என் கணவர். நான் தனியாகப் பிரயாணம் செய்யக் கூடாது என்று, மதுரை கார்ப்பரேஷனில் ஒரு பொறுப்பான பணியில் இருப்பவராயினும், இரண்டு நாள் லீவு போட்டுவிட்டுப் பிடிவாதமாக எனக்குத் 'துணை'யாக வந்திருக்கார்..." பெருமையாகச் சொல்லிவிட்டுக் கணவரைப் பார்த்தாள் சௌம்யா.

"இது சுகுணா. மிஸஸ் சுகுணா பரத்வாஜன். நேற்று நான் சொன்னேனே".

"வணக்கம் மிசஸ் பரத்! சௌம்யா சொன்னாள். காலேஜ் டேஸில் பரத் எழுதிய கடிதங்கள் பற்றி உங்கள் எதிரிலேயே அவள் சொன்னது தவறு. ஒரு தொடுவானம் மாதிரி அதெல்லாம். நான் இவளைக் கோபித்துக் கொண்டேன். தொடுவானத்தில் ஏதாவது இருக்குமா? அப்படி என்று ஏதாவது உண்டா? நீங்க ஒண்ணும் தவறாக எடுக்க வில்லையே?"

அவர் அப்படிச் சொன்னதும் நிலை குலைந்துவிட்டேன் நான்.

சௌம்யாவுக்கு –

அவள் கணவருக்கு –

என், என்னுடைய பரத்துக்கும் –

புரிந்த விஷயம் எனக்குப் புரியாமல் போய்விட்டது எப்படி?

அவர்களிடமிருந்து அங்கே பிரிய இருக்கும் நேரத்தில் –

"வருகிற ஞாயிற்றுக்கிழமை அவசியம் உங்களை மதுரையில் என் வீட்டில் எதிர்பார்க்கிறேன்... பரத்தும் நானும் எதிர்பார்க்கிறோம். அவர் நேற்றே என்னிடம் சொல்லி விட்டார். இப்போ நான் கொஞ்சம் முன்னே செல்ல வேண்டும்... பை..." என்று புறப்பட்டேன்.

"'சில்வர் ஜுபிலி' தம்பதி ஒரு வகையில் குழந்தைகளாக என் பார்வைக்குத் தெரிந்தார்கள் என்றால், நானும் ஒரு குழந்தையாய்த் தானே நடந்து கொண்டேன்?" என்று என் உள்மனம் குத்திக் காட்ட...

ஸ்டேஷனுக்கு வெளியில் செல்லவில்லை. இதோ திருவல்லிக்கேணியில் இருந்த என் அப்பா – அம்மா வீட்டுக்கு, பிறந்தகத்துக்குப் போகவில்லை.

நேரே டிக்கெட் கௌண்ட்டருக்குப் போய், அன்றிரவே மதுரைக்கு ஓர் எக்ஸ்பிரஸ் ஸ்லீப்பர் பர்த் டிக்கெட் வாங்கிக் கொண்டு அங்கேயே காத்திருந்தேன்.

பிளாட்பாரத்திலேயே நல்ல ஆப்பிள் பழங்களாக அரை டஜன் வாங்கிக்கொண்டேன். ೦೦

அம்மன் திருவீதி புறப்பாடு

பாளை இளமாறன்

அந்தச் சித்திரை நாளில் நல்லவெள்ளிபாளையம் கிராமம் மகிழ்ச்சியில் மூழ்குவது, இயற்கை. மாரியம்மன் திருவீதி புறப்பாடு தொடக்க நாளும் அன்றுதான். சித்திரை பொங்கல் நாளும் அன்றுதான்.

அம்மன் திருவீதி புறப்பாட்டுக்குத் தயார் நிலையில் அலங்கரிக்கப்பட்டு ரதத்தில் இருந்தாள். அய்யர் அம்மன் அருகிலேயே அமர்ந்து ஆராதனை கொடுக்க ஆயத்தமானார்.

கோயில் மேளமும், சேரித் தப்பட்டையும், ரதத்திற்குப் பின்னால் 'ஜெனரேட்டரும்' ரதத்திற்கு முன்னால் இருபுறமும் ஐந்து ஐந்துபேர் ஒவ்வொரு கழியிலும் கட்டப்பட்டு மின் இணைக்கப் பட்ட குழல் விளக்குகளைப் பிடித்துக் கொண்டு தயார் நிலையில் நின்றிருக்க...

அப்பொழுது இரவு நேரம் 9.30 மணி.

அம்மன் புறப்படத் தொடங்கும் நேரத்தில் சலசலப்பு... சத்தமாகி.. பேரிரைச்சல் ஆனது.

"கொண்டாங்கடா, அந்தச் சேரிப்பயல. அவன் நாக்க அறுத்துப்புட்டுத்தான் மாரியம்மன் புறப்பாடு"

"என்னடா சொன்னான், அந்தப் பய? நம்ம மாரியாயி அவனுவ தெருவுல நின்னு தீபாராதனை வாங்கணுமா? அதக்கேட்டுட்டு சும்மாவாடா வந்த? கொலை பண்ணிட்டில்லடா வந்து நிக்கணும்!"

"அவனுவள ஒண்ணுல ரெண்டு பார்த்துட்டுதான் மாரியாயியை வீதிக்குக் கொண்டு போகணும்"

குடியானவத்தெரு வாலிபன் ஒருவன் சேரியில் பேசிக் கொள்வதைக் கேட்டுவிட்டு வந்து சொல்ல, அம்மன் ரதத்தை இழுத்துச் செல்ல இருந்த இளைஞர்களின் ஆர்ப்பாட்டக் குரல்கள் ஊரையே பெரும் பதற்றமடையச் செய்தன.

அந்த இடத்தில் இருந்த ஊர்ப்பெரியவர்கள், அவர்களின் போக்கினையும் சத்தத்தையும் அடக்கி அமைதிப்படுத்தினார்கள்.

அய்யர் அவசர அவசரமாக என்ன செய்வதென்று புரியாமல் ரதத்தில் இருந்து இறங்கி, ஊர்ப் பெரியவர்களோடு சேர்ந்து கொண்டார்.

"எதுவாக இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொள்வோம்" பக்குவமாக அய்யர் எடுத்துச் சொன்னார்.

"அய்யர் சொல்வதிலேயும் நியாயம் இருக்கு. அவர்களையும் அழைத்துப் பேசினால்தானே விவரம் புரியும்" அவ்வூர் நாட்டாண்மை சொன்னார்.

"இன்னைக்கு நம்ம சாமியை அவனுவ தெருவுல நிறுத்தச் சொன்னவனுவ, நாளைக்கு நம்ம தெருவுலேயே வீடு கட்டுவேன்பான். அப்புறம் நம்ம கிணத்துல தண்ணி எடுப்பேன்பான். அப்புறம் நம்ம கோயிலுக்குள் நுழைவேன்பான். ஏன் நம்ம சுடுகாட்டிலேயே அவனுவ பொணத்தையும் பொதைப்பேன்பான். இது பேசித் தீர்க்கிற விஷயமில்லை" இளைஞர்களின் தலைவன் வேலுவின் ஆவேசக்குரல் இது.

"இந்தக் கிராமத்தில் எது நடந்தாலும் போலீசுக்குப் போக விடாமல் ஊர்ப் பஞ்சாயத்திலேயே தீர்த்து வைக்கும் இந்த நாட்டாமையைப் பார்த்தா இந்தக் கேள்வி கேட்கிறேள்?" அய்யர் வேலுவைக் கேட்டார்.

"அய்யரே! இந்தக் கும்பலுக்கு பட்டாதான் யோசிக்கும். இவங்களுக்கு இளைச்சவனா அந்த சேரியாளுங்க? இவனுவ எந்தக் காலத்தையோ நினைச்சுக்கிட்டு இந்தக் காலத்துல பேசுறானுவ. போங்கடா...! போய் இப்ப சொன்னீங்களே வெட்டு, குத்து, நெருப்புன்னு அதை அவங்களும் திருப்பிச் செய்வாங்க. அம்மன் இங்கேயே நிக்கும். போலீஸ் வரும் ஆர்.டி.ஓ, கலெக்டரெல்லாரும் வருவாங்க. அப்புறம் என்ன? சமாதானக் குழு அமைப்பாங்க. அப்பப் பேசித் தீர்த்துக்கலாம். அதுக்குள்ளே அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் எவ்வளவு பொருள் சேதமோ, உயிர் சேதமோ? போங்கப்பா... போங்க"

எழுபது வயது அனுபவத்தையும் காலத்தின் மாற்றத்தையும் உணர்ந்த அந்த நாட்டாமை அமைதி கலந்த கோபத்தோடு எச்சரிக்கை விடுவதுபோல் பக்குவமாக எடுத்துச் சொன்ன அந்த விதத்தை நினைத்து மகிழ்ந்து கொண்டு, மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இளைஞர் கூட்டத்தைச் சுற்றியே அய்யரின் கண்கள் வட்டமடித்தன.

"சரி... நீங்களே சொல்லுங்கள்." என்று வேலு, அய்யருக்கு சைகை காட்டினான்.

"அனுப்பட்டுங்களா?" பெரியவரைப் புரிந்து கொண்டு அய்யர் கேட்டார்.

"சீக்கிரமே வரச் சொல்லுங்க" அய்யரைப் புரிந்து கொண்டு பெரியவர் சொன்னார்.

"அய்யாசாமி! சேரி மூப்பன் இருசனையும் அவனோடு கருப்பனையும், முனியனையும் அழைத்துக் கொண்டு வாடா". நடுத்தரமும் இல்லாமல் முதுமைக்கும் போகாத அவனைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார், அய்யர்.

அம்மன் அருகிலே கட்டப்பட்ட குழல் விளக்கு மட்டும் எரிய மற்ற விளக்குகள் அணைக்கப்பட்டன.

"ஏல, பசங்களா! என்னடா நினைச்சிக்கிட்டு இருக்கீங்க? ஒத்துமையா இருந்த ஊரைக் கெடுக்கப் பாக்கிறீங்களாடா? மாரியாயியை நம்ம தெருவுல நிறுத்தப் போறீங்களாமே! வேண் டாம்டா! தப்பு வந்துடும்."


"ஆமாம், தாத்தா! மாரியம்மனை நம்ம தெருவுல நிறுத்தி தீபாராதனைதானே கொடுக்கப் போறோம்?"

"ஒதைச்சி ஊரைவிட்டே தொறத்திடுவோம். தலைமுறை தலைமுறையா குடியானவத்தெரு முடியிற இடத்துலதான் சாமி நிக்கும். அங்க போயிதான் நம்ம சனங்க எல்லாரும் தீபாராதனை கொடுப்பது வழக்கம். இத மாத்தினா என்ன நடக்குமுன்னு உங்களுக்குத் தெரியாது. ஏழை சனங்களை எரிய வுட்டுடாதீங்கடா!" இருசன் மூப்பன் சொல்லிக் கொண்டு இருந்தார்.

"காலகாலமாய் அடிமை ரத்தம் ஊறிப்போன இந்தக் கிழடுகளுக்கு எங்கடா நம்ம விடுதலை உணர்ச்சி புரியப் போவுது? வாங்கடா!" என்ற முணுமுணுப்போடு சைகை மூலம் இளைஞர்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டு சென்றான், கோலப்பன். இவன்தான் சேரி இளைஞர்களின் தலைவன்.

"கும்பிட்டுக்கிறோமுங்க."

தோள் துண்டு இடப்பக்க அக்குளில் சுருண்டு அடங்கிக் கிடப்பதை எடுத்து, முழங்காலுக்கு மேலுள்ள வேஷ்டி அவிழ்ந்தும் அவிழாமலும் இருக்கும் இடுப்பில் கட்டிக் கொண்டு நடுங்கிய குரலோடு இருசன், கருப்பன், முனியன் மூவரும் சேர்ந்து ஒரே குரலில் சொல்லி நெடுமரமாய் வீழ்ந்து... வணங்கி... எழுந்து இடுப்புத் துண்டை மீண்டும் அவிழ்த்து அக்குளில் இடுக்கிக்



கொண்டு வேஷ்டியைச் சரிசெய்து நின்றார்கள் சாவடி முன்னால்.

"மாரியம்மனைச் சேரியிலே நிறுத்தப் போறானுங்களாமே, உங்க பசங்க... உண்மையா?" நேரடியாக விஷயத்துக்கு வந்தார், நாட்டாண்மை.

"அவனுவ கெடக்குறானுவ! நாங்க வுட்டுடுவோமா? சின்னப் பசங்க. உலகம் தெரியாம பேசுறானுவ" அடுத்து என்ன கேட்கப் போகிறார்களோ என்ற பயத்தில் தடுமாறியது வார்த்தைகள் இருசன் மூப்பனுக்கு.

"இருசா...! நான் உங்க மூணு பேரை மட்டும் ஏன் கூப்பிட்டேன்னா, நீங்கதான் இந்தக் குடியானவத் தெருவைப் பத்தி நல்லாத் தெரிஞ்சவனுவ. கோலப்பன் சின்ன வயசுலேர்ந்து பட்டணத்துல படிச்சவன். நம்ம கிராமத்து வழக்கமெல்லாம் அவனுக்குப் புரியாது. அப்புறம் நீங்கதான் படனும் பாடு. அவனுக்கு எடுத்துச் சொல்லித் திருத்த வேண்டியது உங்க பொறுப்பு. அதுக்கப்புறம் என்னைக் குத்தம் சொல்லி ப் புண்ணியமில்ல!"

"இப்பவே, அவன ஊரை விட்டே அனுப்பிடுறேனுங்க". தன் பேரன் கோலப்பன் மீது குறி வைத்து விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டதும் வயிற்றைக் கலக்கியது, இருசன் மூப்பனுக்கு.

"கோலப்பன் ஊரை விட்டுப் போறதால பிரச்னை தீர்ந்திடாது. பிரச்னைக்குக் காரணமே அவன் தான். அவனையே கூப்பிட்டு விசாரிச்சாதான் என்னைச் சுற்றி இருக்கிற என் நண்பர்களுக்கு அவன்மேல் உள்ள பகை நீங்கும்!" வேலுவின் பேச்சு அய்யருக்கு எப்



போதும் பிடிக்கும், தலைமைப் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சில நேரங்களில் இப்படிப் பேசி பயங்கர விளைவுகளைச் செய்வதைத் தவிர.

நாட்டாண்மை நிமிர்ந்து பார்த்தபோது வேலு கம்பீரமாக நின்றுகொண்டு இருந்தான். கோலப்பனோ அல்லது அவனைச் சேர்ந்த இளைஞர்களோ இங்கு வந்தால் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டு விடுமோ என்ற காரணத்தால்தான் நாட்டாண்மை அவர்களைத் தவிர்த்தார். இப்போது கிராமமே அவனை விசாரிக்கச் சொல்லும்போது மிகவும் யோசிக்கலானார்.

"சரி...! கோலப்பனை வரச் சொல்வதற்கு முன்னால சேரியில ஏன் அம்மன் நிற்க வேண்டும் என்று அவன் சொல்லும் காரணத்தையும், சேரியில் ஏன் நிற்கக் கூடாது என்று நாம் சொல்லும் காரணத்தையும், நிதானமா சீர்தூக்கி ஒரு முடிவுக்கு வருவதற்குள், நம்ம குடியானவத் தெரு எல்லைக்குள் அவனையோ, அவனைச் சேர்ந்தவர்களையோ தாக்க மாட்டோம் என்று இங்கே கூடி இருக்கும் அனைவரும் அம்மன் மீது கற்பூரம் அணைத்து சத்தியம் செய்ய வேண்டும்" என்று நிதானமாகவே கேட்டார் நாட்டாண்மை.

இப்படிச் சொல்வார் என்று எதிர்பார்க்காத வேலுவும், அவனைச் சேர்ந்த இளைஞர்களும் பெரியவர்களும் அதிர்ந்தாலும் சம்மதித்தார்கள்.

"இருசா...! நீ மட்டும் போய் இங்கே நடந்ததைச் சொல்லி கோலப்பனையும் அவனுக்கு வேண்டிய ரெண்டு பேரையும் சேர்த்து அழைச்சிக்கிட்டு. வா! எதுவும் பயப்பட வேண்டாமென்று சொல்லு".

"கோலப்பா! அம்மனை ஏன் சேரியில் நிறுத்த வேணுமுன்னு சொன்னே?" நாட்டாண்மை சாதாரணமாகவே கேட்டார். வேலு முறைத்துப் பார்த்ததோடு கோலப்பன் என்னதான் சொல்லப் போகிறான் என்ற எதிர்பார்ப்பில் ஆழ்ந்தான்.

"தீபாராதனை கொடுக்கங்க!" நிதானமாகவே சொன்னான், கோலப்பன்.

"ஏன்? எப்பொழுதும் கொடுக்குற எங்கதெரு எல்லை முடியிற எடத்துல கொடுத்தா என்ன?"

"எப்பொழுதுமே நாங்கதாங்க அதே எடத்துலேயே தீபாராதனை கொடுக்குறோம்? ஆனால் எப்பொழுதுமே அம்மன் எங்க தெருவுலே போனதில்லீங்களே!"

சுருக்கென்று தைத்தது நாட்டாண்மைக்கு. இளம் வட்டங்களுக்குப் புரியவில்லை. அய்யருக்கும் சிலபேருக்கும் மட்டுமே புரிந்தது. வேலு மட்டும் இவன் எங்கே போய்க் கொண்டிருக்கிறான் என்று யூகித்தும், யூகிக்க முடியாமலும் தடுமாறிக் கொண்டிருந்தான்.

"அம்மன் உங்க தெருவுமேல போறதால சொல்லுறியா?" வேலு கேட்டதை ஆதரிப்பதுபோல் பார்த்துவிட்டு கோலப்பனைப் பார்த்தார், நாட்டாண்மை.

"தப்பு, வேலு! எங்கத் தெருவு மேல போறதாச் சொல்லல. எங்கத் தெருவு சனங்க தீபாராதனை கொடுத்தா அதற்குப் பின்னால உங்க சனங்க யாருமே தீபாராதனை கொடுக்கக் கூடாது. ஏன்னா சேரி தீபாராதனைக்குப் பிறகு ஊர்த் தீபாராதனை இருக்கக் கூடாதாம். தீட்டுப்பட்ட தீபாராதனையால் அம்மன் அருள் கிடைக்காதாம். அதனால நேரே கோயிலுக்குத்தான் அம்மன் திரும்பணுமாம். இப்படி ஓர் ஐதீகம் நம்ம ஊர்ல இருந்தது".

"சில வருஷங்களுக்கு முன்னால நாட்டாண்மை எங்க தெருவுக்குக் கிழக்கே... கொஞ்சம் தூரத்துல கல்வீடு கட்டினாரு. அன்னைக்கே இந்த ஐதீகம் தளர்த்தப்பட்டு, எப்பொழுதும் போல எங்க தெரு சனங்க தீபாராதனை கொடுத்த பின்னால எங்க தெருவு வழியா நாட்டாண்மை வீட்டுக்கு அம்மன் சென்று தீபாராதனைப் பெற்றுக் கொள்ளும்".

"அதையெல்லாம் கேக்கலை, கோலப்பா...! போன வருஷம் வரைக்கும் எங்க தெருவுலதானே அம்மன் நிக்கும்? உங்க தெருவுல நின்னதில்லையே?" மனதுக்குள் கோலப்பனின் படிப்பறிவையும், துணிவையும், உரிமை உணர்வையும் புரிந்துகொண்டு அவனை மேலும் பேசவிட வேண்டும் என்றே இடைமறித்தார் நாட்டாண்மை.

"நாட்டாண்மைக்காக உங்க தெருவைத் தாண்டி, கிழக்கே போனதாலதானே இப்ப நீ... உங்க தெருவுல நிக்கச் சொல்லுற?" மேற்குத் தெருகுடியானவ இளைஞர்களில் ஒருவன் கேட்க, நாட்டாண்மையைச் சுட்டிக் காட்டிப் பேசியதால் மேற்குத்தெரு இளைஞன்மேல் கிழக்குத்தெரு குடியானவ இளைஞர்களுக்குக் கோபமானது. இளைஞர்களுக்குள் சலசலப்பு. அவர்களுக்குள் இரு பிரிவு தோன்றியது. கிழக்கு மேற்கு என்ற பிரிவினைகள், நாட்டாண்மை அமைதிப்படுத்தினார்.

"இல்லை...! நாட்டாண்மைக்குப் பிறகு இப்ப கிழக்கே பல வீடுகள் வந்தாச்சு. எல்லாருமே உங்க சொந்தக்காரங்கதான். நாங்க கும்பிட்ட பிறகு எங்களுக்குப் பின்னால உங்க சனங்க பலபேர் கும்பிட்ட பிறகு கடைசியாகத்தான் நாட்டாண்மைக்காரர் தீபாராதனை!" என்றான், கோலப்பன்.

"இவன் நாட்டாண்மைக்குப் பரிந்து பேசி சேரியில அம்மனை நிறுத்தப் பாக்குறான். முடியாது. எங்க அம்மன் உங்க தெருவுல நிக்காது!" வேலு சொல்ல மேலத் தெரு இளைஞர்கள் அவனை ஆமோதித்தனர்.

"அப்படின்னா, எங்க தீபாராதனையை வாங்கிட்டு இப்படியே திரும்பி அம்மன் கோயிலுக்கே போயிடட்டும். நாங்க எப்பவும் போலவே குடியானவத் தெரு முடியற இடத்திலேயே கும்பிட்டுக்கிறோம்."

"முடியாது. எங்க தெருவுக்கும் வந்துதான் ஆகணும்" கிழக்குத் தெரு குடியானவ இளைஞர்களில் ஒருவன்.

"அப்படின்னா, நீங்க கோலப்பன் சனங்களுக்கு முன்னால வந்து நம்ம தெருவுலேயே தீபாராதனை கொடுத்திடுங்க,

அதற்குப் பின்னால சேரி சனங்களுக்கு தீபாராதனை கொடுப்போம்!" மேற்குத் தெரு இளைஞர்களில் மற்றொருவன்.

"எங்களையும் ஒதுக்கி வைக்கிறீங்களாடா?" கிழக்குத் தெரு இளைஞர்களில் ஒருவன்.

"நாட்டாண்மை ஐயா...! முதல்ல கிழக்குத் தெரு, மேற்குத் தெரு பிரச்னையை முடிங்க. அப்புறமா எங்க தெரு பிரச்னையப் பேசிக்கலாம்" கோலப்பன் சாதுர்யமாகப் பேசியதை அய்யர் மனதுக்குள்ளே பாராட்டிக் கொண்டார். குடியானவத் தெரு இளைஞர்களுக்கு இப்பொழுது கோலப்பன் முக்கியமாகப் படவில்லை.

"டேய்... பயல்களா! எல்லாரும் உங்க பேச்சை நிறுத்துங்கடா!" நாட்டாண்மை சொல்லுக்கு அனைவரும் கட்டுப்பட்டனர்.

"இப்ப... சொல்லு, கோலப்பா!"– நாட்டாண்மை.

"ஐயா! இப்ப பாத்தீங்களா... ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் கௌரவத்தைக் காப்பாத்திக்கப் போராடுறாங்க. ஆனா... நாங்க எங்க உரிமையைப் பறிக்காதிங்கங்கிறதற்காகப் போராடுறோம். இந்தக் கோயில்ல... விழாவில.. ஏன் அம்மன் சிலையில எல்லாம் உங்களைப் போலவே எங்களுக்கும் உரிமை இருக்கிறப்போ... அது மட்டும் இல்லாம, மாரியம்மன் திருவிழா காலத்துல எங்க தப்பட்டை இல்லாம அம்மன் புறப்படக் கூடாதுன்னு தலைமுறை தலைமுறையாய்ச் சொல்லியே தப்பட்டை கத்துக்கற குடும்பமெல்லாம் கத்துக்கிட்டு அடிக்கிறாங்க. அதை உங்க கௌரவமா நினைக்கிறப்ப... எங்க தெருவுக்கும் உங்க தெருவுக்கும் இடையே முப்பதடி தூரந்தாங்க. இங்கே நிறுத்தறதை அங்கே நிறுத்தினா அம்மன் கோவிச்சுக்குவாளா? எங்களைத் தாழ்த்தப்பட்டவனாப் பாக்காம மனுசனாப் பார்த்திருந்தால் எங்களுக்கு எப்பவோ சமூக உரிமை கொடுத்திருக்கலாம்.

அப்ப இருந்த எங்க ஆளுங்க உரிமையைக் கேட்கல. நீங்களும் அப்படியே விட்டிருக்கலாம். இப்ப நாடே மாறிகிட்டு வருது. ஏன் நம்ம ஊர்ப் பழக்க வழக்கம் எல்லாமே மாறிப்போச்சு. இப்ப ஒண்ணு சொல்றேன், கொஞ்சம் சிந்தனை செய்யுங்க! அப்ப எங்க சேரிப்பக்கம் யாராவது வருவீங்களா? இப்ப எங்க வீட்டுப் பொணத்துக்கு அண்ட வீட்டுக் காரங்க அவுங்க பங்காளிகளை அழைச்சிக்கிட்டு, வாய்க்கு அரிசி எடுத்துக்கிட்டு வந்து எங்க பொம்பளைங்களோட உங்க பொம்பளைங்க கட்டிப்புடிச்சு உரிமையோடவும் போலித்தனம் இல்லாமலும் மாரடிச்சி அழுவுறாங்களே...! அந்தத் தாய்மார்களை உங்க பொம்பளையா நினைக்கல. இந்த அம்மனின் உருவமாத்தான் நாங்க பாக்குறோம்".

"அம்மனே எங்க தெருவைத் தாண்டிப் போகும்போது தீட்டுப் பட்டதா நெனைச்சு நம்ம ஊருக்கு எதாச்சும் கெடுதல் செய்தாளா? இல்லையே! எல்லா உயிர்களையும் காப்பாத்துறவ அம்மன். அவ தண்டிக்க மாட்டா. நம்ம மனசு தானய்யா பழைமையிலே கிடந்து தவிச்சுக்கிட்டு இருக்கு"

கோலப்பன் தன் பக்கம் உள்ள நியாயத்தை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். கூட்டத்தில் அமைதி நிலவியது. எல்லாரும் தம்மை மறந்த நிலையில் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

"அதுக்கப்பறந்தான் குளிச்சு முழுகிப்புட்டு எங்க பொம்பளைங்க ஈரத் துணியோடதானே எங்க வீட்டுல நுழையறாங்க. குளிச்சாதான் தீட்டுப் போயிடுமே! தெரியாதா, உனக்கு" அமைதியாக இருந்த மௌனத்தைக் கலைத்தான், ஒரு வாலிபன்.

"குளிச்சாத் தீட்டுப் போயிடுமே!" அங்கிருந்த அனைத்து வாலிபர்களும் ஒரே கூச்சலிட்டனர். "பயலே சீவிடுவோம்" என்றும் கத்தினர்.

ஜாடையாக அய்யரைப் பார்த்தார், நாட்டாண்மை.

அய்யர் எழுந்தார். இளைஞர்களின் ஒவ்வொரு கண்ணையும் நேருக்கு நேர் பார்த்தார். அவர் முகத்திலும் கோபம் படிந்திருந்தது. எழுந்து நின்று கூச்சல் போட்ட இளைஞர்களைக் கேட்டார்.

"இப்ப கோலப்பன் என்ன சொல்லி இருக்கான். நடந்ததைச் சொன்னான். அதுக்கு "சீவிடுவோம்" என்று ஓங்காரமாக் கத்தறேளே? அம்மன் முன்னால சத்தியம் செய்ததை மறந்துட்டேளா? உட்காருங்கோ. எல்லாம் நாட்டாண்மை பார்த்துப்பா".

அய்யர் பேசி முடிப்பதற்குள் ஒவ்வொருவராக உட்கார்ந்து அமைதியானார்கள். அய்யரும் அமர்ந்து கொண்டார். கோலப்பன் தீப்பிழம்பானான்.

"இப்ப கத்துனிங்களே! உங்கள்ல எத்தனை பேர் சொந்தத் தாய்ப்பாலைக் குடிச்சிருப்பீங்க? பாலில்லாம குழந்தை கத்தறதப் பாத்து பதைச்சுப்போய் ஆண்டச்சி கிட்டே இருந்து குழந்தையை வாங்கி யாருக்கும் தெரியாம பால் கொடுத்துக் காப்பாத்தினாளே அந்தச் சேரித்தாய். இப்ப அவ பால் உங்கள்ள சிலபேர் உடம்புல ரத்தமா ஓடுதே! தீட்டுப்பால் உடம்பிலே ஓடுதேண்ணு எத்தனை தடவை குளிக்கப் போறீங்க? 'வேற்றுமைகள் எல்லாம் சண்டை போடுவதற்கும் ஏற்றத்தாழ்வு பார்ப்பதற்கும் ஏற்பட்டதல்ல. ஒற்றுமையைக் காணத்தான். அன்பைக் காணத்தான். சகோதர சமத்துவத்தைக் காணத்தான்' என்று ஜகத்குரு ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சொல்லி இருக்கிறார்.

வேண்டாம் நமக்குள்ளே வெட்டு குத்து. நாமாவது உலகத்தைப் பார்த்துப் புரிஞ்சு நடப்போம். ஒற்றுமையாய் இருப்போம். அதுக்கப்புறம் உங்க இஷ்டம்"

கோலப்பன் வீரியத்தோடும் விவேகத்தோடும் பேசி நிறுத்தினான்.

"சேரியில் அம்மனை நிறுத்துங்கடா" ஒருவித உணர்ச்சி பீறிட்டெழ, அமைதியை உடைத்துக் கொண்டு எழுந்து நின்று கத்தினான் வேலு.

கூட்டத்தில் உள்ள இளைஞர்கள் வேலுவைத் தூக்கிக் கொண்டு அம்மனை நோக்கி நடந்தார்கள்.

மந்தகாசப் புன்னகையோடு விடியற்காலை நான்கு மணிக்கு அம்மன் திருவீதி புறப்பட்டாள்.

நெஞ்சில் தூங்கிக் கிடப்பது நீதி!

ச. கல்யாணராமன்

"கூப்பிடுறாங்கடா சிவா, உன்னை!" என்றாள், அம்மா.

இரண்டு மூன்று தலையணைகளைப் பரப்பிப் போட்டு அதன் மீது துள்ளி விழுந்து புரண்ட சிவா அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை, விளையாட்டு மெத்தைச் சுகத்தில் தன் மறதி, பூனைக்குட்டியை அணைத்துக் கொள்வது போல், நாய்க்குட்டி தன் மீது ஏறி விளையாடுவது போல!

"கூப்பிடக் கூப்பிட என்ன பண்றான், அவன்?"

அடுத்த வீட்டு அம்மா மாலதியே வந்துவிட்டாள் அங்கே.

அவனுடைய மும்முரமான விளையாட்டினைப் பார்த்து நின்றாள். கை தாடையில் முட்டுக் கொடுத்து வியப்பைக் காட்டிற்று. இது ஒரு விளையாட்டா?

ஆற்று மணலில் புரண்டு விழுவது; மழை நீரில் நனைந்து தேங்கிய நீரில் அலைந்து இறைப்பது; மெத்தையில் தலையணைகளில் கரணம் அடிப்பது; முதுகில் ஏறிக் குதிரைச் சவாரி - குழந்தை இன்பம்; கோடிபெறும்.

"டே, சிவா!"

மாலதியை அப்பொழுதுதான் திரும்பிப் பார்த்தான்.

"வாடா, எவ்வளவு நேரமா கூப்பிடுறேன்?"

"படுத்துக்கவா?"

மாலதி சிரித்தாள். திரும்பிச் சிவாவின் அம்மாவையும் பார்த்துச் சிரித்தாள்.

"நான் எங்க அம்மாகூடதான் படுத்துக்குவேன்!"

தலையணையில் குதித்தவாறே கூவினான்.

"படுத்துக்கோ! நீ எங்க வீட்டுக்கு வா கதை சொல்றேன். தூக்கம் வந்த உடனே உங்க அம்மாகிட்டே வந்துடு!"

மாலதியின் கணவன் பூபதிக்கு ஊர்சுற்றும் வேலை. மருந்துகளை அறிமுகம் செய்து விற்பனையை ஊக்கப்படுத்தும் 'மெடிகல் ரெப்ரசென்டேடிவ்' வேலை. வெளியில் புறப்பட்டால் வீடு திரும்ப நான்கைந்து நாள்கள் ஆகும். ஒவ்வொரு தடவை பத்து நாள்களுக்கு மேலும் ஓடிவிடும். அதுவரையில் மாலதி, வீட்டில் தனி. மணமாகி எட்டு ஆண்டுகள் சென்ற பிறகும் தனி. முதலில் சில ஆண்டுகள் கட்டுப்பாட்டினை மேற்கொண்டதில் உடல் கோளாறு புலப்படவில்லை. பிறகு கட்டுப்பாட்டினைத் தளர்த்திக் கொண்டதில் புதுமை ஒன்றும் தோன்றவில்லை. இழுத்துக் கொண்டு அலைந்தான் மருத்துவ நிபுணர்களிடம். ஏதோ கோளாறு. என்ன என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

குழந்தை இல்லாத ஏக்கம் அதற்குப் பிறகே முளைக்கத் தொடங்கிற்று. ஏக்கத்தோடு அடுத்த வீட்டு எதிர் வீட்டுக் குழந்தைகளிடம் அன்பைப் பொழிந்தாள். அளவுக்கு அதிகமாகிக் குடியிருந்த பகுதிகளில் வம்பாகவும் போய், வீடும் மாற வேண்டியிருந்தது. மாறி மாறிச் சென்றார்கள்.

இங்கே குடிபெயர்ந்து வந்த ஆறு மாதங்களில் சிவாவின் குடும்பம் நெருக்கமாகிவிட்டது. சிவாவின் அம்மா லட்சுமியும் சிவாவின் அப்பா வைத்தியநாதனும் தொந்தரவு கொடுக்காதவர்கள்.

வீட்டில் பூபதி இல்லாத இரவுகளில் துணைக்கு சிவாவைத் தன்னோடு படுக்கையில் போட்டுக் கொண்டு அவனுக்குக் கதைகள் பாட்டுகள் சொல்லிச் சிரிக்க வைப்பாள் மாலதி. அவன் இல்லாவிட்டால் தூக்கமும் வராது அவளுக்கு. அவன் உறங்கியதும் அவனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு தன் குழந்தை போலவே எண்ணிக் கற்பனையில் கண்ணை மூடி அவன் முதுகில் தட்டியவாறே அவள் தூங்காமல் கிடப்பதும் உண்டு.

"சிவா! நீ என்னை, 'ஆண்டி பூண்டி'ன்னெல்லாம கூப்பிடக் கூடாது. 'மம்மி'யும் வேணாம், அம்பியும் வேணாம்! 'அம்மா'ன்னு கூப்பிடணும். அதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்குது. வேறே எப்படிக் கூப்பிட்டாலும் என்னை வேற்றுமைப் படுத்தறது மாதிரி இருக்கு. அம்மான்னு கூப்பிடுடா, செல்லம்!"

"எங்க அம்மா, இருக்காங்களே?"

"நானும் அம்மாதாண்டா!"

"நீங்க, பக்கத்து வூட்டு அம்மா!"

"உங்க அம்மாவுக்குத் தாண்டா பக்கத்து வீட்டு அம்மா, அடுத்த வீட்டு அம்மா. நான் உனக்கு அம்மாதான். அம்மான்னுதான் கூப்பிடணும், என்னை!"

பேசாமல் அவனுடைய முன்றானை முனையைத் தன் பிஞ்சு வெண்டைக்காய் போன்ற விரலில் சுற்றியவாறே மேலே மின் விளக்கையும் மின் விசிறியில் ஆடிய பெரிய படத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான், சிவா.

"உங்க அம்மாவுக்கு இன்னொரு தங்கச்சிப் பாப்பா பொறக்கப் போகுது. உங்க அம்மாவுக்கு அந்தப் பாப்பா இருக்கட்டும். நீ எனக்கு இருந்துடு!"

"எப்போ பொறக்கும்?"

"இன்னும் அஞ்சு மாசத்திலே"

"பாப்பா பொறந்ததும், நான் அதைத் தூக்கி வைச்சுகிட்டு வெளையாடுவேன்".

"பாப்பான்னா உனக்கு ஆசையா?"

"ஆமாம்! பார்த்தி வூட்டிலே ரமேசு வூட்டிலே எல்லாரு வூட்டிலேயும் பாப்பா இருக்கு, எனக்குத்தான் இல்லே".

"சரி. எனக்கு யாரு இருக்கா?"

"மாமா இருக்கார்".

அவள் சிரித்தாள். அதில் சோகமும் சிரித்தது.

"உங்க அம்மாவுக்கு உங்க அப்பா இருக்கறாரு இல்லே. அதே மாதிரி எனக்கு உங்க மாமாவும். ஆனா, எனக்குப் பாப்பாவும் இல்லே; உன்னை மாதிரி தம்பியும் இல்லே!"

"ஏன் இல்லே?"

"நான் ரொம்ப ஆசைப்படு றேன், அதனாலே இல்லே!" அவள் அழுகை நிலையை அடைந்து விட்டாள். அதை அடக்கியவாறு சிரித்தாள்.

"எங்க அம்மாவுக்குப் பாப்பா பொறக்கும் இல்லே? அதை நீங்க எடுத்துக்குங்க!"

"அப்புறம் உனக்கு?"

"எனக்கு வேணாம். நீங்கதான் ஒண்ணுமே இல்லாமே இருக்கீங் களே? நீங்க எடுத்துக்குங்க!"

"அந்தப் பாப்பா எனக்கு வேணாம், செல்லம்! நீதான் எனக்கு வேணும். நீதான் நல்ல பிள்ளை. கதை கேட்பே, பாட்டு பாடுவே".

"பாப்பா?"

"பாப்பாவுக்கு ஒண்ணுமே தெரி யாது. அழுதுகிட்டே கிடக்கும்"

"பாப்பா அழுதா பால் குடுப் பாங்க. குடிச்சுட்டுத் தூங்கிடும்".

"நீ எங்கே பார்த்தே?"

"பார்த்தி வூட்டிலே!"

"சிவா! எனக்குச் செல்லக் குழந்தை நீதான். வேறே எனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ? எனக்கு ஒரே ஆசையா இருக்கு. என் குழந்தைக்கு நான் பால் கொடுக்கணும் போல வெறியா யிருக்கு. என்கிட்டே பால் குடிடா, கண்ணு... சிவா...!"

அவனுடைய முகத்தை வாட்ட மாகத் திருப்பித் தன்னோடு சேர்த்தாள்.

"பால் வரலே...!"

"பால் இல்லையா? பால் கொடுக்கவும் கொடுத்து வைக்காத பாவியாடா நான்!"

அவளுடைய கண்ணீர் அவ னுடைய அடர்ந்த தலைமுடியை யும் கடந்து தலையில் ஊறியது.

குழந்தை பிறந்த பிறகுதான் பாலே சுரக்குமாம், தாய்க்கு! யாரோ சொன்னது அவளுடைய நினைவில் முற்றுகையிட்டது. அதி லும் ஏமாற்றம்தானா? இதுகூட தெரியாமல்...

"போம்மா, பாலே வரலே!"

அவன் விலகிக் கொண்டான்.

ஏமாற்றம், ஆனால் அனுபவப் புதுமை. அவளுக்குக் குழந்தை பிறந்தாலும் இப்படித்தானே பால் குடிக்கும்? இப்பொழுது கானல் நீர்; அப்பொழுது ஊற்று நீர். குழந்தை பிறந்ததும் தானே ஊறிச் சுரக்கும். அதுவரையில் வறண்ட கிணறு; காய்க்காத மரம்.

"சிவா, வாடா போகலாம்!" மாலதி தன் உணர்வில் நின்றாள்.

அவன் இன்னமும் தலையணை விளையாட்டினை விடவில்லை.

"உன்னை ...?" அவள் உதட்டைக் கடித்தாள். ஓடிப்போய்க் குண்டுக் கட்டாகத் தூக்கினாள், அவனை.

முதலில் அவன் உதறினான், கை கால்களை உதைத்துக் கொண் டான்.

"முதலை இப்படித்தான் உதைச்சுக்குமாம். மீன் இப்படித் தான் துள்ளுமாம். வா, உனக்கு முதலைக் கதை சொல்றேன்!"

சிவாவை அழுத்திப் பிடித் தாள், மாலதி. அவன் அவ ளுடைய நெஞ்சில் அழுந்தியதும் துள்ளுவதை நிறுத்திக் கட்டுண் டான்.

"என் கண்ணு, என் செல்லம்!"

பார்த்துப் பாசத்தின் துடிப் பினைச் சுவை கமழ ரசித்து நின்றாள் பெற்றவள், லட்சுமி.

"சிவா எங்கே, லட்சுமி?" என் றான் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து நுழைந்த வைத்தியநாதன்.

"இப்போதான் மாலதி வந்து தூக்கிகிட்டுப் போச்சு!"

"எப்போ பார்த்தாலும் அங்கே தானா?"

"போயிட்டுப் போகுது போங்க. பாவம், குழந்தை இல்லாத ஏக்கம். அந்த வீட்டுக்காரரும் தான் காடாறு மாசம்னு வேலையா போயிடுறாரு. துணைக்குச் சிவா வைத் தூக்கிகிட்டுப் போயிடுது. அவன் இங்கே இருந்தா, என்ன அடம் பண்றான் தெரியுமா, உங்க ளுக்கு? அவன் பரப்பிப் போடுற பொருளை ஒதுங்க வைக்கறதே வேலையாப் போயிடுது, எனக்கு!"

"அதுக்காக அவனைத் துரத்தி விட்டுடுறே போலே இருக்கு. தொல்லை இல்லாமே?"

"இப்போதாங்க போனான். அதிலேயும் போக முடியாதுன்னு கத்தினான். மாலதிதான் தூக்கி கிட்டுப் போச்சு முதலைக் கதை சொல்லி!"

"அது கதையே பெரிய கதையா யிருக்கு. முதலைக் கதை சொல் லுதா அது? அதுவே ஒரு முதலை!"

"சத்தம் போட்டுப் பேசாதிங்க. காதிலே விழுந்தா வம்பா போயிடப் போகுது!"

"மெல்லத்தான் பேசுறேன். ஆமாம் வீட்டுக்காரன் வெளி யூருக்குப் போயிடுறான். அவன் போனதுக்குப் பிறகு எவனெ வனோ வரான்; போறான். பெட் டியை வைக்கிறான். எடுக்கிறான். வரவனுக்கெல்லாம் சாப்பாடு. ஒவ்வொரு ராத்திரி வெளியிலே படுக்கைகூட போட்டாகுது!"

அதே ஐயம் லட்சுமிக்கும் உண்டு. எதிர் வீட்டு அம்மாசுட் குத்திக் காட்டினாள். என்னதான் கணவனின் நண்பர்கள் என்றாலும் இப்படியா?


மாலதியின் கணவன் ஊரி லிருந்து திரும்பும் போதெல்லாம் யாராவது நண்பன் அவனுடைய தோளில் தொங்கிக் கொண்டு வருவான். வீட்டில் குளிப்பான். உணவு உண்பான்; சிரிப்பான்; அரட்டை அடிப்பான். போய்விடு வான். பிறகு தனியாகவும் வரு வான். கணவன் இல்லாத நேரம் என்று அவனும் எண்ணமாட்டான்; அவளும் கவலைப்பட மாட்டாள்.

"திடீர்னு எங்க வீட்டுக்கார ரோடே நண்பர் வந்துட்டார். நான் எனக்கு மட்டும் தானேன்னு வெறும் ரசம், மோரோடே வைச்சுட்டேன். அவர் சாப்பிடு றேன்னு சொல்லிட்டார். அப்பளம் இருந்தா கொடுங்க. வாங்கிக் கொடுத்துடுறேன்!" என்று லட்சுமி வீட்டில் வந்து நிற்பாள், மாலதி.

முகத்தில் ஒரு சோர்வு இருக் காது. பெருமையும் புன்சிரிப்பும் முன்னால் நிற்கும்.

"இவ்வளவு பேரு வராங்க போறாங்களே? எப்படி மாலதி நீங்க சமாளிக்கிறீங்க?" என்று வேறு வகையில் கேட்டு வைத்தாள் லட்சுமி, ஒரு தடவை.

"என்னங்க பண்றது? அவருடைய வேலை அப்படிப்பட்டது. சிநேகிதர்கள் எல்லாரும் ஒரு கூட்டுக் குடும்பம் போல. ஒருத்தரை ஒருத்தர் நம்பி ஆகணும்.



சேர்ந்து சேர்ந்து திரிவாங்க. சேர்ந்து விடுதிகளிலே தங்குவாங்க. அதே பழக்கத்திலே வீடும் ஒரு விடுதி போலத்தான்!" சிரிப்பாள், மாலதி.

வைத்தியநாதனிடம் எல்லாமே சொல்லியிருந்தாள், லட்சுமி.

"எத்தனையோ பேர் வரான்; போறான். அதிலே நம்ம சிவா, என்ன அங்கே துணை? எல்லாம் சும்மா நடிப்புக்கு! பாரு, நான் பெரிய பத்தினின்னு காட்டுறதுக்கு! குழந்தை துணை ஒரு துணையா? அவன் தூங்கினதுக்குப் பிறகு என்ன நடக்குதோ? வெளியிலே படுத்துக் கிடக்கிற சிநேகிதன் வீட்டுக்குள்ளே போக எவ்வளவு நேரம் ஆகும்? என்ன கண்றாவியோ, போ! அதான் வீடு வீடா மாறி வராங்க. எவன்தான் அக்கம் பக்கத்திலே பொறுத்துக்குவான்?"

அண்டை அயலார் பொறுத்துக் கொள்ளாமல் ஒரு நாள் வெடித்தது.

மூன்றாவது வீட்டுக்காரர் துணிச்சலில் புகழ் பெற்றவர்.

பூபதி தன் சுற்றுப் பயணத்திலிருந்து நண்பர்கள் இருவருடன் ஒரு மாலை நேரத்தில் திரும்பியிருந்தான்.

"பூபதி! கொஞ்சம் வெளியிலே வாங்க!" என்று அவனை வைத்தியநாதனின் வீட்டுக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தார், மூன்றாவது வீட்டு துணிச்சல்காரர்.

அங்கே அதற்கு முன்பே நால்வர் காத்திருந்தனர்.

சிவாவும் தன் வீட்டில் ஏதோ சிறப்பாக நடக்கிறது என்பதை உணர்ந்து விளையாட்டை நிறுத்தி விட்டு மரச்சாய்வு நாற்காலியில் சறுக்கி விளையாடியவாறே இருந்தான்.

"இங்கே, நல்ல குடும்பங்களா ரொம்ப காலமா குடியிருக்கோம். கல்லூரிக்குப் போற பெண்கள், திருமணத்துக்குக் காத்திருக்கிற பெண்கள் வீட்டுக்கு வீடு இருக்காங்க. உங்க வீட்டுக்கு இரவுன்னும் பகலுன்னும் இல்லாமே கண்ட நேரம் கண்டபடி உங்க வயசு ஆளுங்க வரதும் போறதும் தங்கறதும் சாப்பிடுறதும் வெளியிலே நிற்கதும் படுத்துக்கறதும் நல்லதுக்கு இல்லே, அதனாலே நீங்க வேறே வீடு பார்த்துக் கொள்ளுங்க. நீங்களோ பாதி நாளு ஊரிலே இருக்கிறதில்லே...!"

பொழிந்தார், துணிச்சல்காரர்.

"அவங்க எல்லாரும் என்னோட வேலை பார்க்கிறவங்க! என்னுடைய நண்பர்கள், குறுகலான வட்டத்திலே அடைபடுறவங்க இல்லே! அண்ணன் தம்பி மாதிரி..."

"அந்தப் பேச்செல்லாம் எங்களுக்கும் தெரியும். உங்க மனைவி வீட்டுக்குள்ளேயே இருக்கிறவங்க, நீங்க இல்லாத நேரத்திலே என்ன நடக்குதுன்னு உங்களுக்கு என்ன தெரியும்?"

பூபதி சிரித்தான். ஏளனச் சிரிப்பு...

"சிரிக்காதீங்க! சிவா, இங்கே வாப்பா!"

சிவா நாற்காலியிலிருந்து இறங்கி வந்தான்.

"என்ன, மாமா?"

"மாலதி அம்மா உனக்கு என்ன பண்ணுவாங்க? சொல்லு! உங்க அம்மாகிட்டே சொன்னதைச் சொல்லு!"

சிவா பளீரெனப் பதில் உரைத்தான்.

"மாலதி அம்மா அவங்ககிட்டே என்னைப் பால் குடிக்கச் சொன்னாங்க! நான் குடிச்சேன். பாலே வரலே! மாலதி அம்மா என்னைக் கட்டிப் பிடிச்சு கிட்டு அழுவாங்க. பாவமா இருக்கும்!"

இருந்தவர்களுக்கு அதிர்ச்சி.

பூபதி தலைதாழ எழுந்து சென்றான்.

"உங்க வீட்டுக்காரங்களை அடிச்சு உதைச்சு ரகளை பண்ணிடாதீங்க!" என்றான், வைத்தியநாதன்.

வெ. இறையன்பு

உள்ளங்கை நெல்லிக்கனிகள்



சிறுவயதில் காலையிலே
மகிழ்ச்சியுடன்
துவைத்த உடையுடுத்தி
பொதி சுமந்து போவதே,
பள்ளி முடிவடைந்ததும்
மாலை மணியடித்த ஒலி கேட்டு
அணை திறந்த வெள்ளம் போல்
ஓடி வீட்டடையும் சுகத்துக்காக.

விடுமுறை நாளெல்லாம்
சோகம் இழையோடும்
அன்று
பள்ளி முடிகையில்
மணியடிக்கும் போது
வரும் சுகம்
கிடைக்காதே என்று



"அதெல்லாம் எங்களுக்குப் பிடிக்காது!"

சிரித்தான், அவர்களைத் திரும்பிப் பார்த்த பூபதி.

"மனிதர்களின் வெளிப்புற வாழ்க்கையைவிட உள்ளுணர்வுகள் அளவிட முடியாதவை, பெருமைக்குரியவை!" என்றான், அவன். போய்விட்டான்.

ஒன்றும் விளங்கவில்லை எவருக்கும்.

பத்தே நாளில் வீடு மாறிப் போய் விட்டார்கள், பூபதியும் மாலதியும். சில நாளில் வேறு எங்கோ வெளியூர்க்குப் போய் விட்டார்கள்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு –

சிவா தன் மனைவியின் எதிரே உட்கார்ந்து கண் கலங்கியவாறே கூறினான் :

"அறியாப் பருவத்திலே ஆயிரம் தப்புகள் செய்யறோம். எத்தனையோ மறந்து போயிடும். சிலது மட்டும் நினைவுலே தைச்சுகிட்டு நின்னுடுது. எப்போதாவது நினைவு வந்தா இப்படிச் செஞ்சோமே'ன்னு மனசு கலங்கிடுது. நான் மாலதி அம்மாவுக்குச் செய்த கொடுமை! அதுக்கு மன்னிப்பே கிடையாது. அந்தத் தாய் மனம்... தாய்மைக்காக ஏங்கிய அந்த மென்மையான உணர்ச்சி மயமான மனம் என்னைப் பற்றி நினைச்சு என்ன பாடு பட்டிருக்கும்? எங்க அம்மாவைவிட மாலதியம்மாவை நினைக்கும்போதுதான்..."

அவன் தன் கண்களை ஒரு விரலால் விளிம்போரம் துடைத்துக் கொண்டான்.

- தாய்மை உணர்வைத் தவிர வேறொரு பாவமும் அறியாத மாலதியம்மாவை அக்கம் பக்கத்தினர் எப்படியெல்லாம் சந்தேகக் கணைகளால் துளைத்தெடுத்தார்கள் என்பதையெல்லாம் இப்போது எண்ணிப் பார்த்தபொழுது அவனுக்கு மெய்சிலிர்த்தது.

	கேது		
சனி	இம்மாத கிரக நிலை		செவ்
	சூரி. குரு	புத,சுக் ராகு	

உங்கள் ராசிபலன்

16-11-1994 முதல் 15-12-1994 வரை

வித்வான் வே. லட்சுமணன்

16-11-1994 அன்று கிரக பாதசாரம்:

சூரியன் - விசாகம் 4, சந்திரன் - அசுவினி 2, செவ்வாய் - ஆயில்யம் 4, புதன் - சுவாதி 3 குரு - விசாகம் 4, சுக்கிரன் - சுவாதி 1 (வக்ரி), சனி - சதயம் 2, ராகு - விசாகம் 1, கேது - பரணி 3.

கிரக மாறுதல்

22.11.1994 முதல் சிம்ம - செவ்வாய்
23.11.1994 முதல் சுக்கிரன் - வக்கிரநிவர்த்தி
26.11.1994 முதல் விருச்சிக - புதன்.
15.12.1994 முதல் தனுசு - புதன்.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி சனி ஒருவரே அனுகூலமான நிலையில் உலவுகிறார். ஏனைய கிரகங்கள் திருப்திகரமாகச் சஞ்சரிக்கவில்லை. இதனால் நீங்கள் கடுமையாகப் பாடுபட்டே பயன்பெறவேண்டிவரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளை எண்ணி ஏமாற வேண்டாம். அலைச்சல் சற்று அதிகரிக்கும். உடல் நலனில் கவனம் தேவைப்படும். மனத்தில் சிறுசிறு கவலைகள் சூழும். பயணத்தின்போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. மக்களால் சிறுசிறு தொல்லைகள் உண்டாகும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகவேண்டாம். அரசு விவகாரங்களால் அனுகூலமிராது. உஷ்ணாதிக்கத்தால் பாதிப்பு ஏற்படக்கூடும். ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் அதிகம் ஆதாயத்தை எதிர்பார்க்க இயலாது.

பிறமொழி, மதக்காரர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. வியாபாரிகள் அகலக்கால் வைக்கவேண்டாம். தொழில் அதிபர்கள், உத்தியோகஸ்தர்கள், நிர்வாகிகள், மருத்துவர்கள், ஆன்மிகவாதிகள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றம் பாதிக்கப்படும். குடும்பநலனில் கவனம் செலுத்தினால் அமைதி காணலாம். நெருங்கிய நண்பர்கள் ஓரிருவர் தக்க தருணத்தில் உதவுவார்கள். கறுப்பு நிறப்பொருள்கள் லாபம் தரும். எண்ணெய் வகையறாக்கள், தாதுப்பொருள்கள் ஆகியவற்றால் ஆதாயம் கிடைத்துவரும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொதுநலப்பணியாளர்களுக்கும் விழிப்புண்டாகும். 26ஆம் தேதி முதல் வியாபாரிகள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். நூதன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான பாதை தெரியவரும். மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். குரு வழிபாடு நலம் தரும். நவம்பர் 17,18,19,20,21,23, 24,28,29,30 டிசம்பர் 1,4,7,8,9,12,13,14 தேதிகள் சிறப்பானவை. மேற்குத்திசை நலம் தரும். கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 8ஆம் எண் ராசியானது.

பொதுவில் சாதாரணமான மாதமிது.

ரிஷபம் : (கிருத்திகை 2ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவுவதால் உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும் எடுத்த காரியங்களைத் திறம்பட ஆற்றி, மற்றையோரின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீர்கள் பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறமொழி, மதக்காரர்களால் அனுகூலம் உண்டாகும், நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் முன்னணிக்கு உயருவார்கள். நிர்வாகத்துறையினருக்குச் செழிப்பான சூழ்நிலை உதயமாகும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பயணத்தின் மூலம் ஓர் எண்ணம் நிறைவேறப் பெறுவீர்கள்.

உழைப்பு வீண்போகாது. எதிர்ப்புகள் அகலும் போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமானப் போக்கு தென்படும். கணவன், மனைவி உறவுநிலை சீராகவே இருந்து வரும். கூட்டுத் தொழில் அளவோடு லாபம் தரும். அரசுப்பணியாளர்களும், அரசியல்வாதிகளும் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். பொதுநலப் பணியாளர்களுக்குச் செல்வாக்கு கூடும். தொழிலாளர்களும், விவசாயிகளும் உற்சாகமாக நடைபோடுவார்கள். மாதர்கள் ஓரிரு உபத்திரவங்களுக்கு ஆட்பட வேண்டிவரும். சினிமா, சங்கீதம், நாடக, நாட்டியம் போன்ற கலைத்துறைகளைச்

சேர்ந்தவர்கள் பொறுப்புடன் காரியமாற்றுவது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது முக்கியம். நவம்பர் 18,20,21,23,24,28,29,30 டிசம்பர் 1,7,8,9,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கடகம், விருச்சிகம், கும்பம் ஆகிய ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4,5,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சிறப்பான மாதமிது.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

குரு, செவ்வாய், சனி ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் உங்கள் தேக ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். மனத்தில் சிறுசிறு கவலைகள் சூழும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உணவு விஷயத்தில் பக்குவம் தேவை. மக்களாலும், வாழ்க்கைத் துணைவராலும் ஓரிரு தொல்லைகள் சூழும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. வியாபாரிகள் கணிதத் துறையாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் தங்கள் பொறுப்புகளைக் கண்ணும் கருத்துமாக ஆற்றிவருவது அவசியமாகும். வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடவேண்டாம். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது. பணநடமாட்டம் குறைந்து செலவுகள் கூடும். தேவைகளைச் சமாளிக்கக் கடன்படவும் நேரலாம். அநாவசிய செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

6இல் சூரியனும், 11இல் கேதுவும் உலவுவதால் பிரச்னைகளைச் சமாளிக்கக்கூடிய சக்தி பிறக்கும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். மேலதிகாரிகளின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகள் ஆக்கம் தரும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். 22ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் சங்கடங்கள் அகலும். பொறியியல் துறை ஆக்கம் தரும். மனத்தில் துணிவு கூடும். சுக்கிர பலம் காரணமாக கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி வாகை சூடுவார்கள். மாதர்களது திறமை பளிச்சிடும். பொதுநலப்பணியாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். நிலபுலங்கள் லாபம் தரும். 26ஆம் தேதி முதல் வியாபாரிகள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். நவம்பர் 20,21,23,24,28,30, டிசம்பர் 1,4,8,9,12 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, விருச்சிக, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான மாதமிது.

கடகம் : (புனர்பூசம் 4ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

குருபலம் கூடியிருப்பதால் உங்கள் எண்ணங்களில் ஒன்றிரண்டு இப்போது நிறைவேறும். பணநடமாட்டம் கூடும். பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோரால் நலம் பெறுவீர்கள். மக்கள் நலம் சிறக்கும். புத்திர, புத்திரிகளால் ஓரிரு எண்ணங்களும் ஈடேறும். கேளிக்கை, உல்லாசங்களிலும், விருந்து உபசாரங்களிலும் பங்கேற்பீர்கள். நண்பர்கள், உற்றார், உறவினர் தொடர்பு நலம் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நன்மைகள் உண்டாகும். எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள், கணிதத் துறையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். கடல் வாணிபம் லாபம் தரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள்.

கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். சமுதாய நலப்பணியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மதிப்பு உயரும். மருத்துவம், இரசாயனம், ஆன்மிகம், சட்டம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். கடுமையாக உழைத்துப் பாடுபடுபவர்களுக்கு இரட்டிப்புப் பயன் கிட்டும். சோர்வுக்கு இடம் தரலாகாது. பேச்சில் இனிமையைக் கூட்டிக் கொள்வது நல்லது. வீண் அலைச்சல் தவிர்க்கப்படவேண்டும். நவம்பர் 18,20,21,23,24,28,30 டிசம்பர் 1,4,7,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, விருச்சிக, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சிறப்பான மாதமிது.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடுபட வேண்டிவரும். அலைச்சலும் உழைப்பும் கூடும். மனத்தில் நிம்மதி குறையும். மக்கள் நலனில் கவனம் தேவைப்படும். நண்பர்கள், உற்றார், உறவினரால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. வீண்சண்டை, சச்சரவுகளில் ஈடுபடவேண்டாம். கூட்டுத் தொழிலில் கவனம் தேவைப்படும். நிலம், மனை, வீடு, வாகனம் சம்பந்தப்பட்ட இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். பெற்றோரால் அதிகம் நலமிராது. உடன்பிறந்தவர்களால் மனஸ்தாபம் ஏற்படும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவருவது அவசியமாகும். இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போது பாதுகாப்புத் தேவை.

பயணத்தால் பயன் உண்டாகும் என்றாலும் விழிப்புடன் இருப்பது நல்லது. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அனுகூலமான நேரமிது.

மாதர்களது குறிக்கோள் நிறைவேறும். பொதுநலப் பணியாளர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். பிற மொழி, மதக்காரர்களால் அனுகூலம் உண் டாகும். 26ஆம் தேதி முதல் நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண் பார்கள். வியாபாரிகளுக்கு மந்தநிலை விலகும். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற இனங்கள் ஆக்கம் தரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறை களைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். மாணவர்களது திறமை பளிச்சிடும். நிலபுலங் களால் ஆதாயம் பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். நண்பர்கள், உற்றார் உறவினர் சேர்க்கை நலம் தரும். நவம்பர் 20,21,23,24,28,30 டிசம்பர் 1,4,7,8,9,13 தேதிகள் அனுகூலமானவை. தென்கிழக்கு, தென் மேற்குத் திசைகள் நலம் தரும். துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சாதாரணமான மாதமிது.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் புதன் 2இல் உலவுவதாலும், சுக்கிரன், சனி, செவ்வாய், சூரியன் ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதாலும் செல்வ நிலை சீராகவே இருந்துவரும். பேச்சில் திறமை கூடும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். செய்து வரும் தொழிலில் வளர்ச்சி காணமுடியும். முகவசீகரம் கூடும். மாதர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். வியாபாரம், கணிதம், விஞ் ஞானம், எழுத்து போன்ற இனங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். நிர்வாகத் திறமை பளிச்சிடும். மருத்துவர்கள் நற்பெயர் பெறுவார்கள். எதிர்ப்புகள் குறையும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தைக் காணலாம். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் செழிப் பான பாதை புலப்படும். கலைஞர்கள் புகழ் கூடப் பெறுவார்கள்.

பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் 21ஆம் தேதி வரையிலும் உற்சாகமான சூழ்நிலையைக் காண் பார்கள். அதற்குப்பிறகு ஓரிரு இடையூறுகள் ஏற் படும். 22ஆம் தேதி முதல் எதிலும் நிதானமாக ஈடுபடுவது நல்லது. வீண் சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்க வேண்டாம். வழக்கு, விவகாரங்களிலும் ஈடுபடலாகாது. உடன்பிறந்தவர்களால் ஓரிரு தொல்லைகள் சூழும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. 26ஆம் தேதி முதல் வியாபாரிகள் விழிப் புடன் செயல்படுவது அவசியம். நூதனமான முயற்சிகளில் பிரவேசிக்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்துவது அவசியமாகும். நூதன நட்பு வேண்டாம். பயணத் தின் போது பாதுகாப்புத் தேவை. நவம்பர் 20,21,23,24,28,30 டிசம்பர் 1,4,7,8,9,12 தேதிகள் நலம் தரும். தென்கிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூல மானவை. துலா, கும்ப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

குரு, செவ்வாய், சுக்கிரன் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் சுயபலம் ஓங்கும். புத்திசாலித் தனம் பிரகாசிக்கும். எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் வெற்றி காணச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். மற்றையோர் புகழத்தக்க வகையில் ஓரிரு சாதனைகளையும் ஆற்றுவீர்கள். குடும்பத்தில் நற்காரியம் நிகழும். மனத்தில் உற்சாகம் கூடும். முக்கியமான ஓரிரு காரியங்கள் இனிது நிறைவேறும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக் கும், மேடைப் பிரசங்கிகளுக்கும், மதபோதகர் களுக்கும் செல்வாக்கு கூடும். தோற்றப்பொலிவு பிரகாசிக்கும். நல்லவர்களது நட்புறவால் நலம் பல பெறுவீர்கள்.

செல்வச் சேர்க்கை அதிகரிக்கும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். உடன் பிறந்தவர்கள் பக்க பலமாக விளங்குவார்கள். மாதர்களது எண்ணம் நிறைவேறும். தெய்வ காரி யங்கள் இனிது ஈடேறும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். திருமணம் ஆனவர்கள் இல்லறத்தில் நல்லறம் காண்பார்கள். 22ஆம் தேதி முதல் வெற்றி வாய்ப்புகள் மேலும் கூடும். சங்கடங்கள் என்பவை விலகும். உல்லாச மாக நடைபோடுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் கிடைத்துவரும். செந்நிறப் பொருட்கள் லாபம் தரும். குடும்பத்தில குதூகலம் கூடும். இயந்திரப் பணியாளர்கள் சுபிட்சம் காண் பார்கள். நிலபுலங்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக்கும். நவம்பர் 17,21,23,24,28,30 டிசம்பர் 1,4,7,8,9,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, கடக ராசிக்காரர்கள் உதவு வார்கள். 3,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் விசேடமான மாதமிது.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

மாத ஆரம்பம் சாதாரணமாகவே இருந்துவரும். அலைச்சலும் உழைப்பும் மனக்கிலேசமும் கூடும். எண்ணங்கள் ஈடேறத் தடையிருந்து வரும். வரவைக் காட்டிலும் செலவுகள் கூடும். சிறுசிறு பிரச்னைகளுக்கு ஆட்படவும் நேரும். 22ஆம் தேதி முதல் உங்கள் ராசிநாதன் வலுப்பெறுவதால் உங்கள் சுயபலம் மேலோங்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். பொறியியல், சட்டம், இராணுவம், காவல் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான பாதையைக் காண் பார்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அனுகூலம் உண் டாகும். உடன்பிறந்தவர்களால் ஒரு காரியம் நிறை வேறும். செந்நிறப்பொருட்கள் லாபம் தரும். வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் போட்டிப் பந்தயங் களிலும் வெற்றி காணச் சந்தர்ப்பம் கூடிவரும்.

துணிச்சலான செயல்களில் ஈடுபாடு உண்டாகும். மற்றையோர் பாராட்டும்படி ஓரிரு சாதனைகளை ஆற்றுவீர்கள். வாழ்க்கைத்துணை நலம் சீராகவே இருந்துவரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு முன்னேறுவார்கள். வாழ்க்கை வசதிகளுக்கான பொருட்களின் சேர்க்கை நிகழும். மக்கள்நலன் சீர்பெறும். பெற்றோரால் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். 26ஆம் தேதி முதல் வியாபாரிகள் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் நலம் கூடப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். செய்துவரும் தொழிலில் சீரான வளர்ச்சியைக் காண்பீர்கள். திறமைக்குரிய பொருளும், புகழும் வந்துசேரும். நவம்பர் 17,18,20,24,28,30 டிசம்பர் 1,4,7,8,9,12 தேதிகள் சிறப்பானவை. வடமேற்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,7,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான மாதமிது.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)

3,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார்கள். சங்கடங்களைச் சமாளிக்கக்கூடிய சக்தி உண்டாகும். பொருள்வரவு சீராகவே இருந்துவரும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் செழிப்பான பாதை புலப்படும். வியாபாரம், கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். கலைத்துறை ஆக்கம் தரும். மாதர்களது எண்ணம் ஈடேறும். புதிய ஆடை, அணி, மணிகள், அலங்காரப்பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். நல்லவர்களின் நட்புறவால் நலம் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் லாபம் தரும். எதிர்ப்புகள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். அயல் நாட்டுத் தொடர்பு அளவோடு நலம் தரும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவுவார்கள்.

கணவன், மனைவி உறவுநிலை திருப்தி தரும். செய்து வரும் தொழிலில் சீரான வளர்ச்சி காண்பீர்கள். 8இல் செவ்வாயும், விரயத்தில் சூரியன், குருவும், 5இல் கேதுவும் உலவுவது சிலாக்கியமானதாகாது. இதனால் மனத்தில் சிறுசிறு குழப்பங்கள் குடிகொள்ளும். அரசாங்கத்தாரால் அனுகூலத்திற்கு இடமிராது. நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு ஓரிரு இடர்ப்பாடுகள் உண்டாகும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. வீண்விவகாரங்களில் பிரவேசிக்க வேண்டாம். கைப்பொருளைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது அவசியம். பெற்றோர் நலனிலும் உடன்பிறந்தவர்கள் நலனிலும் அக்கறை தேவை. நவம்பர் 17,18,20,21,28,30 டிசம்பர் 1,4,7,8,9, 12 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, தென்மேற்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. சுமாரான மாதமிது.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

குருபலம் கூடியிருப்பதால் முக்கியமான ஓரிரு எண்ணங்கள் இப்போது நிறைவேறும். மனத்தில் உற்சாகம் கூடும். செயலில் திறமை வெளிப்படும். அறிவாற்றல் காரணமாகவும், பேச்சு வன்மை காரணமாகவும் மற்றையோரால் மதிக்கப்படுவீர்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகளும், ஆன்மிகவாதிகளும், மருத்துவர்களும், இரசாயனத்துறைகளைச் சேர்ந்தவர்களும், விஞ்ஞானிகளும் வெற்றி நடைபோடுவார்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இப்போது கூடிவரும். வேலையில்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுகளுக்கு உரியவராகவும் முடியும்.

பொருளாதார நிலையில் வளர்ச்சி காணலாம். ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபாடு உள்ளவர்கள் ஆதாயம் பெறுவார்கள். மக்கள் நலம் சீர்பெறும். பெற்றோரால் நலம் விளையும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்பு இப்போது கூடிவரும். திருமணம் ஆனவர்கள் மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை புலப்படும். உழைப்பு வீண்போகாது. அலைச்சல் சற்று அதிகரிக்கும். சனி, கேது, செவ்வாய் ஆகியோர் அனுகூலமாக உலவாததால் சிறுசிறு பிரச்னைகளைச் சந்திக்க வேண்டிவரும் என்றாலும் குருபலத்தால் அவற்றைச் சமாளிக்கவும் செய்வீர்கள். நவம்பர் 17,18,20,21,23,24,29,30 டிசம்பர் 1,4,7,8,9,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சிறப்பான மாதமிது.

கும்பம் : (அவிட்டம் 3ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

3இல் உள்ள கேது, 6இல் உள்ள செவ்வாய், 9இல் உள்ள சுக்கிரன் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும். நற்பணிகளில் ஈடுபாடு கூடும். ஞானமார்க்கத்தில் தெளிவு பிறக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் மேலோங்கும். கவர்ச்சி அம்சம் வெளிப்படும். மற்றையோருக்கு உதவக்கூடிய மனோபாவம் கூடும். கடல் வாணிபம் லாபம் தரும். நூதனமானவர்களது தொடர்பு ஆக்கம் தரும். தொலைதூரத் தொடர்பால் பயன் உண்டாகும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். மாதர்களது இலட்சியம் நிறைவேறும். கேளிக்கை, உல்லாசங்களிலும், விருந்து உபசாரங்களிலும் ஈடு

பாடு கூடும். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். பெற்றோரால் நலமேற்படும்.

அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் பொருளும், புகழும் குவியும். 22ஆம் தேதி முதல் செவ்வாய் 7ஆமிடம் மாறுவதால் பயணத்தின் போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும் போதும் பாதுகாப்புத் தேவை. யாரிடத்திலும் நிதானமாகப் பேசிப் பழகுவது நல்லது. 26ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வெளிச்சமான பாதை புலப்படும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் அனுகூலமான போக்கு தென்படும். கடுமையாக உழைத்துப் பாடுபடுபவர்களுக்குப் பயன் அதிகமாகும். சோர்வுக்கு இடம் தரலாகாது. நவம்பர் 17,18,20,21,23,24,27,30 டிசம்பர் 1,4,7,8,9,12 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6,7 எண்கள் நலம் தரும்.

பொதுவில் சுமாரான மாதமிது.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

ராசிநாதன் குரு 9ஆமிடத்தில் உலவுவதால் உங்கள் அந்தஸ்தும், மதிப்பும் உயரும். சங்கடங்கள் என்பவை குறைந்து வாழ்வில் நலம் பெற மார்க்கம் புலப்படும். பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோரது சகாயம் கிடைத்துவரும். முக்கியமான ஓரிரு குறிக்கோள்கள் நிறைவேறும். மக்கள்நலம் சீர்பெறும். மக்களால் பயன் பெறவும் முடியும். புனிதமான காரியங்களில் ஈடுபாடு கூடும். சாதுக்கள், மகான்கள் தொடர்பு கிட்டும். அதனால் மனத்தில் தெளிவும் பிறக்கும். பொருளாதார நிலை உயரும். புதியத் துறைகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். தெய்வ காரியங்கள் நிறைவேறும். தருமப்பணிகளில் பங்கேற்க வாய்ப்புகள் கூடி வரும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள், பேச்சாளர்கள், சட்ட வல்லுநர்கள், அமைச்சர்கள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள்.

அலுவலகப் பணியாளர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி முன்னணிக்கு உயருவார்கள். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை பெறுவதற்கும் சந்தர்ப்பம் கூடிவரும். பெற்றோர் நலம் சீர்பெறும். கலைத்துறை ஆக்கம் தரும். மாதர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். மாணவர்களது திறமை பளிச்சிடும். 22ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். எதிர்ப்புகள் அகலும். துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு கூடும். இயந்திரப்பணிகள் லாபம் தரும். 26ஆம் தேதி முதல் வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. நிலம், மனை, வீடு, வாகனங்கள் சம்பந்தப்பட்ட இனங்களால் அளவோடு நலம் பெறலாம். நூதனமானவர்களது தொடர்பு கூடாது. தொழிலாளர்களும், விவசாயிகளும் அதிகம் பாடுபட வேண்டிவரும். நவம்பர் 17,18,20,21,23,24,28 டிசம்பர் 4,7,8,9,12 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, கடக, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் அனுகூலமான மாதமிது.

மனம் விட்டுப் பேசுவோம்

○ அக்டோபர் 2ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை சங்கடஹர சதுர்த்தி நன்னாள். விநாயகரை வழிபட நினைத்திருந்த எனக்கு 'அமுதசுரபி - அக்டோபர் 94' மாத இதழின் அட்டையில் பவனி வந்த விநாயகர்களைக் கண்டதும் பக்தியும் மகிழ்ச்சியும் பெருக்கெடுத்தோடியது. படம் பிடித்த 'யோகா'வுக்குப் பாராட்டுகள்!

— *திருமதி மஞ்சளாபாய், வியாசர்காலனி.*

○ 'நாணயம்' பகுதியில் வளம் பெற வழிகள் பற்றி பெஞ்சமின் பிராங்க்ளினின் சிக்கனம், சோம்பேறித்தனம் பற்றி அருமையாக விளக்கியிருப்பது ஒவ்வொருவரும் படித்து புரிந்துகொண்டு கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த அறிவுரையாகும்.

— *அன்பின் செபா, களியல்.*

○ காதல், கல்யாணம், மரணம், குற்றம் என நான்கு கோணங்களில் முத்தான சிறுகதைகள் தந்த நான்கு ஆசிரியர்களுக்கும், 'அமுதசுரபி'க்கும் பாராட்டுகள்.

— *அ. செபாஸ்டின், கடையல்.*

○ 'காலை டென்சனைக் குறைப்போம்! கவலையின்றி இருப்போம்!' - முன்னெச்சரிக்கையுடன் இருக்க 'எண்ணிப் பார்க்கலாம் பெண்ணே!', சமையல் குறிப்புகள், சின்னச் சின்ன பல டிப்ஸ்கள், ஒல்ட் இஸ் கோல்ட், 'உடல் ஆரோக்கியமா சிக்கனமா?', உங்களுக்குத் தெரியுமா?, மருத்துவக் குறிப்புகள் என வீட்டுக்குத் தேவையான பல சேதிகளைத் தந்து அசத்திவிட்டது 'அமுதசுரபி'யின் 'பாவையர் பக்கங்கள்'!

— *அ.செ. குமரி மாவட்டம் 629 101.*

○ உண்மையான பரிபூரண நம்பிக்கையுடன் கூடிய பிரார்த்தனைக்கு அன்னையின் கடாக்ஷம் நிச்சயம் உண்டு என்பதை நிறைய உதாரணங்கள் மூலம் காட்டியிருக்கிறார் தவத்திரு. கர்மயோகி அவர்கள். மனிதர்கள் பலவகை என்பதிலும் கடைசி பத்தியில் பிரசுரமாகியுள்ள எல்லா வரிகளும் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவை. சிறுகதைகள் எல்லாமே சிறந்ததாக இருந்தன!

— *இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம்.*

வெற்றிப் பாதையில் கொனார்க்

ஒரிஸாவில் கொனார்க் டி.வி. தொழிற்சாலை 1973 இல் ஒரிஸா சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் தொடங்கப்பட்டது. இது தொடங்கப்பட்டபோது ஆண்டிற்கு சுமார் 5,000 கறுப்பு, வெள்ளை டி.வி. செட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

தற்போது கொனார்க் டி.வி. கம்பெனி, இரண்டு தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. ஸ்டேட் பாங்க் மற்றும் யுனைடெட் பாங்க் உதவியுடன் ரூ. 1.5 கோடி முதலீட்டுடன் 1985 இல் மன்சேஸ்வரில் இரண்டாவது கொனார்க் டி.வி. தொழிற்சாலை தொடங்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த புவனேஸ்வர் தொழிற்சாலையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

1993 ஆம் ஆண்டு மே மாதம் கொனார்க் கம்பெனிக்கு நிர்வாக



இயக்குநராக அமர்த்தப்பட்டார் சி.டி.எம். சுகுணா, ஐ.ஏ.எஸ். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதும், நமது ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் முன்னாள் மாணவி என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம்.

இக்கட்டான கட்டத்தில் கொனார்க் டி.வி.யின் நிர்வாக இயக்குநர் பதவியை ஏற்றபோது சிறிதும் மனம் தளரவில்லை சுகுணா.

இப்போது கொனார்க் டி.வி. கலர் டி.விகளை உற்பத்தி செய்வதிலும் ஈடுபட்டுள்ளது. வருடத்திற்கு சுமார் 12,000 கலர் டி.வி. செட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1992-93 ஆம் ஆண்டில் கொனார்க் கம்பெனியின் ஆண்டு வருவாய் ரூ. 9.83 கோடியாகும். சி.டி.எம். சுகுணா மேற்பார்வையில் 1993-94 ஆம் ஆண்டு வருவாய் ரூ. 15.29 கோடிக்கு உயர்த்தப்பட்டது.

இவர் சாதனையை கௌரவிக்கும் வகையில் டில்லியிலுள்ள இண்டஸ்ட்ரியல் எகனாமிக் ஃபோரம் என்ற நிறுவனத்திலிருந்து 1993-94 ஆம் ஆண்டுக்கான "உத்யோக் எக்ஸலன்ஸ் அவார்ட்" என்கிற சிறப்பு விருது இவருக்குக் கிடைத்திருக்கிறது. இது தமிழருக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை தரக்கூடிய விஷயமாகும்.

—டி.ஆர்.ஜி

கையாளுவதற்கேற்ப வடிவமைக்கப்பட்ட உறுதியான பேக்லைட் கைப்பிடிகள்.

காளி பிராண்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஃபாக்டரியின் பார்ட்னர், திரு.கே.எம். பிந்து சாதகன் மேலும் கூறியதாவது: காளி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே பலதரப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பொருட்களை வழங்கிய, இந்தியாவின் முதன்மையான நிறுவனமாக விளங்கியது. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிற்துறையில் இயந்திரங்கள் வருமுன்னரே காளி, கையினால் தயாரிக்கப்பட்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை விற்பனைக்குக் கொணர்ந்து தன் பெயரை நிலைநாட்டியது. அன்றிலிருந்து இன்று வரை பல வெற்றிகள் காளியின் சரித்திரத்தில் அடங்கும் - அவற்றில் முக்கியமாக தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் தயாரிப்பிற்காக நாட்டின் தலைசிறந்த விருதையும், அதிக ஏற்றுமதிக்கான விருதையும் பெற்றதை, காளியின் திறனுக்குக் கிடைத்த சான்றாகக் கூறலாம். ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காப்பர் பாட்டம் பாத்திரங்கள் தயாரிப்பதற்கான முறைகளை முதன் முறையாக உருவாக்கிய பெருமை காளியையே சாரும்.

இப்போது இதன் வழிவந்த இப்புதிய பிரஷர் குக்கரின் வடிவமைப்பு அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் ஜப்பானில் தனிப்புகழ் பெற்றது. இது தரத்தையே முக்கியமாகக் கருதும் இன்றைய வாடிக்கையாளர்களுக்கு நடுவே பிரபலமாகி தனிப்புகழ் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இப்புதிய பிரஷர் குக்கரில் ஓர் ஆச்சரியம் என்னவென்றால் - அனைத்து சிறப்பம்சங்களையும், உலகத்தரத்தையும் கொண்டிருந்தாலும்கூட இதன் விலை நியாயமானதே. 1994 அக்டோபர் 14, விஜயதசமியிலிருந்து இப்புதிய பிரஷர் குக்கரின் விற்பனை தொடங்குகிறது. இதன் தற்போதைய அளவுகள்: 5,6,5 மற்றும் 8 லிட்டர்கள்.

பல நாடுகளிலிருந்து இப்புதிய காளி ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காப்பர் பாட்டம் பிரஷர் குக்கருக்கான ஏற்றுமதி ஒப்பந்தங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

எப்போதும் தன் பெருமையில் ஆழ்ந்துவிடாமல் காளி பிராண்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஃபாக்ட்ரியானது அதன் மேனேஜிங் பார்ட்னராகிய திரு. கே.ஜி. மோகன்தாஸ் அவர்களின் சீரிய மேற்பார்வையில் மேலும் பல புதிய, வீட்டிற்குத் தேவையான பொருட்களின் உற்பத்தியில் என்றும்போல் முனைந்துள்ளது.

ஆழ்வார்பேட்டை பெனிபிட் பண்ட் லிட் 1990 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு குறுகிய காலத்திற்குள்ளாகவே நிதி நிறுவனம் என்ற சிறப்புத் தகுதியை மத்திய அரசால் அங்கிகரிக்கப்பட்டு, ஒரு சிறந்த 'மகாநிதி' நிறுவனமாக வளர்ந்து வருகிறது. 20,000க்கும் மேல் பங்குதாரர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனத்தின் மூலதனமும், வைப்பும் 280%க்கு உயர்ந்துள்ளது. பங்குதாரர்களின் நலனைக் கருதி பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய வீடு அல்லது 'பிளாட்' (Flat) சென்னை நகர எல்லைக்குள் வாங்குவதற்கான கடனுதவி அளிக்கப்படுகிறது. குறைந்த தஸ்தாவேஜு வேலைகளிலேயே இந்தக் கடனுதவி அளிக்கப்படுவதால் டாக்டர், பொறியியல் வல்லுநர்கள் போன்ற (Professionals)வர்களிடம் நிறுவன அதிகாரிகளாலும் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. பெண்களுக்காக ஒரு சிறப்புக் கடனுதவியும் அறிமுகப்படுத்த உள்ளது. இன்றைய தேதியின் விலைக்கு, தங்களுக்குத் தேவையான தங்க நகைகளைப் பிரபல நகைக்கடைகளிலிருந்து வாங்கி அதற்கான முழுப்பணத்தையும் ஆழ்வார்பேட்டை நிறுநிறுவனத்திடமிருந்து பெற்று இத்தொகையை மாதத் தவணையில் செலுத்தி நகைகளைச் சேமிக்கலாம். வட்டி செலுத்தி வாங்கினாலும் தங்கத்தின் விலை நாளுக்கு நாள் ஏறும் இக்காலத்தில் நடுத்தர வர்க்கத்தினர் நகைகளை, திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிக்காக முன்னமேயே திட்டமிட்டு வாங்கி உபயோகிக்க இது ஓர் அருமையான திட்டம்.

குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்காக பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிட். ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ரூபாய் 5,100/- செலுத்தி மூன்றாம் ஆண்டிலிருந்து பன்னிரண்டாம் ஆண்டு வரை ஆண்டுக்கு ரூ. 500/- வீதமும் 13,14 ஆவது வருடங்கள் ஆண்டுக்கு ரூபாய் 1,000/- வீதமும், 15 ஆம் ஆண்டு ரூ. 75,000/- திரும்பப் பெறலாம். தொடர்ச்சியாக பள்ளியில் வெற்றி பெற்று, கல்லூரிக்குச் செல்லும் 5% மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 25,000/- வழங்குவதாகவும் திரு. பி. பாலசுப்பிரமணியம் அறிவித்தார்.

சாரதா சேலைகள்

பட்டுச் சேலைகளுக்கு இணையாகத் தயாராகி 'பெல்காம் சேலைகள்' என்று மக்களால் விரும்பப்பட்ட சேலை, தற்போது, 'சாரதா சேலைகள்' என்ற பெயரில் தீபாவளி விற்பனையில் தனியிடத்தைப் பெற்றுள்ளன.

ரூபாய் 160 முதல் 560 வரை விலைகொண்ட சாரதா சேலைகள் பெண்களைப் பெரிதும் கவர்கின்றன.

"நூறு சதவீத உத்தரவாதத்துடன், சுருக்கமில்லாத சாரதா சேலைகள் காஞ்சிபுரம், ஆரணி பட்டுச் சேலைகளுக்கு இணையானவை. தென்னிந்திய விற்பனையில் தனிக் கவனம் செலுத்துகிறோம்; குறிப்பாக தமிழ்நாட்டில்! வீட்டு உபயோகத்திற்கும் ஏற்றது. சொப்பன சுந்தரி, ஐஸ்வர்யா, தங்கம், ஹாலு என்ற பெயர்களுடன் ரகம் பிரிக்கப்பட்டுள்ள 'சாரதா' சேலைகளின் எதிர்காலம் மக்களின் ஆதரவால் பிரகாசமாக உள்ளது" என்றும் கூறினார் திரு. போர்வெல்.

'சாரதா' சேலைகளின் உற்பத்தியாளர்கள் சுடிதார் தயாரிப்பிலும் தனி கவனத்தைச் செலுத்துகிறார்கள்.

கங்காபுரிக் காவலன்

17. வீரமாதேவியின் சிந்தனை அலைகள்

பழையாறை மாளிகைக்குத் திடீரென வீரமாதேவி, பணிப்பெண்களும், காவலர்களும் சூழ வருகை புரிந்தாள். அரிந்தவன் மாதேவியின் உடல்நலம் மேலும் குன்றியிருப்பதாக வந்த செய்தி அறிந்தவுடன் அவளால் சிற்பப் பணிகளையும், கோயில் பணிகளையும் மேற்பார்வையிட்டவாறு புதிய நகரத்தில் கணம்கூடத் தங்கியிருக்க முடியவில்லை.

பொழுது புலர்வதற்கு முன்பே பரிவாரங்களுடன் புறப்பட்டு விட்டாள். அரசர் உடன் வராமல் அவள் பழையாறைக்குச் செல்வது அதுவே முதல் தடவை.

புதிய நகரம் பாதிக்கு மேல் உருவாகி விட்டது. புதிய புதிய வீடுகள், புத்தம் புதிய ஓடுகள் வேயப்பட்டு வீதிகளின் இருபுறமும் வீதிக்கு அழகு செய்தன.

பெரிய கோயில் பணிகள் முக்கால் பாகம் முடிவடைந்துவிட்டன. விமானம் கம்பீரமாக எழுந்து கொண்டிருந்தது. விமானத்தின் நான்கு பக்கங்களும் ஓலைகளால் மறைக்கப்பட்டிருந்தன. சிற்பிகள் கோபுரத்தில் அழகிய சிற்பங்களை அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு நாள்கள் முன்பு வீரமாதேவி கோயில் பணிகள் எவ்வளவு தூரம் நிறைவேறியிருக்கின்றன என்று சுற்றிப் பார்த்தாள். கோயிலைச் சுற்றி மதிற் சுவர்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நீண்ட பெரிய பாறைகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கிப் பொருத்தப்பட்டன.

'அப்பப்பா, தேவலோகத்திலிருந்து தேவர்கள் வந்து பணியாற்றுகிறார்களா? அவர்களுக்கு 'அசுரபலம்' அமைந்து விட்டதா?

சோழ நாட்டுப் பணியாட்களைத் தவிர நானா தேசங்களிலிருந்தும் திறமை மிக்கவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து இரவு பகல் பாராமல் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சிற்பி மாணிக்க சேகரனின் மாணாக்கர்களின் இரு கரங்களும் சோர்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தன. இடக்கரம் உளியைப் பிடிக்க வலக்கரம் சுத்தியல் பிடிக்க 'கிணிங் கிணிங்' என்ற நாதம் எழ, பாறைத் துகள் சிதறி ஓட, சாதாரணக் கற்கள் உயிர் வடிவம் பெற்றுக் கொண்டிருந்தன.

சிற்பிகள் களைப்படையாதிருக்க அவர்களது இனிய துணைவியர் கஞ்சிக் கலயத்துடன் அங்கு வந்து வற்புறுத்தி ஒரு வாயாவது கஞ்சியைப் பருகச் செய்தனர். பிறகு அங்கிருந்து செல்லாமல் மலர்ந்த விழிகளால் தங்கள் அருமை அத்தானையும், இயங்கிக் கொண்டிருக்கும் கரங்களையும், உருவாகும் சிற்பத்தையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

குடமுழுக்குக்கு நாள் குறித்தாகிவிட்டதாகப் பேசிக்கொண்டார்கள். அதற்குள் தங்களுக்கிட்ட பணியை முடித்துவிட வேண்டும் என்னும் ஆர்வத்தில் சிற்பிகள் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

வெயிலுக்காக வேயப்பட்ட கீற்றுப் பந்தலில் தலைமைச் சிற்பி மாணிக்க சேகரன் சிற்பங்களுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்தான்.

காலைக் கதிரவன் எழும் முன்பே தன் பணியைத் தொடங்கி, பசி தாகம் பாராமல் அவன் பணி செய்து கொண்டிருப்பதை வியப்புடன் குமுதவல்லி பார்த்துக் கொண்டிருப்பாள். கோயில் திருப்பணிகள் மிக விரைவில் நிறைவேற வேண்டும் என்பதில் மற்றவர்களைவிட அவளுக்கு அக்கறை அதிகம்.

விக்கிரமன்...

வீரமாதேவி ஒருநாள் வேடிக்கையாக மாணிக்க சேகரனிடம் சொன்னாள்: "பெரிய கோயில் குடமுழுக்கு நடைபெற்ற மறுநாளே உங்கள் திருமணத்தை நடத்த வேண்டும் என்று நான் முடிவெடுத்து அதை முன்பே அரசரிடம் தெரிவித்து விட்டேன்.

'அதென்ன, குடமுழுக்கு முடிந்த பிறகே மாணிக்க சேகரன் திருமணம் நடைபெற வேண்டும் என்று கட்டளை விதித்திருக்கிறாய்?' என்றுகூட வேடிக்கையாகக் கேட்டார் அரசர்.

"அப்போதுதான் திருப்பணி மிக வேகமாக நடைபெறும். தூண்டுதல் குமுதவல்லியிடமிருந்தும் வரும்" என்று சொல்லியிருக்கிறாள், வீரமாதேவி சிரித்தவாறு. வீரமாதேவி சொல்வதைக் கேட்ட குமுதவல்லியின் முகம் நாணத்தால் சிவந்ததை மாணிக்க சேகரன் காணத் தவறவில்லை. இளவரசி கூறியதைக் கேட்டு மாணிக்க சேகரன் என்ன நினைக்கிறான் என்று, குனிந்த தலை நிமிராமல் நோக்கினாள் குமுதவல்லி.

'அதோ, அவரும் தலைகுனிந்து விட்டாரே!' ஓர் ஆண் வெட்கப்படுவதை அவள் இப்போதுதான் பார்க்கிறாள்.

பொதுவாகவே, சிற்பப்பணி நடைபெறும்போது அவளுடன் நெருங்கிப் பேச விரும்பாத மாணிக்க சேகரன் இப்போது குடிலுக்குக் கூட வருவதில்லை. சிற்பப் பணி நடக்கும் இடத்திலேயே இரவு பகல் தங்கத் தொடங்கினான். அவளும் உறுதியுடன் இருக்க முடிவு செய்தாள். சிறிது நேரம் ஓய்வு எடுக்க முயன்று அமைதியாக அமர்ந்திருக்கும் மாணிக்க சேகரன் செவிகளில் மட்டும் கேட்குமாறு, "இளவரசி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?" என்று கேட்பாள்!

மாணிக்க சேகரன் திரும்பிப் பார்ப்பான் - அவள் சொற்கள் புரியாமல் திகைப்பான்.

"குடமுழுக்கு ஆன மறுநாளே நம் திருமணம்!" என்று அவள் நினைவுபடுத்தும் வார்த்தைகளைக் கேட்டவுடன், அவன் சிற்றுளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொள்வான்.

அன்று, வீரமாதேவி சிற்பப் பணிகளைச் சுற்றிப் பார்க்க வரும்போது மாணிக்க சேகரன், சிற்பம் ஒன்றில் மிக நுணுக்கமான வேலைப்பாட்டைக் கவனமாகச் செய்து கொண்டிருந்தான். அவன் களைப்பாக இருந்தான். அவன் எதிரே குமுதவல்லி கவலையுடன் மாணிக்க சேகரன் முடிக்கவிருக்கும் அழகிய தேவமகளின் சிற்பத்தை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வீரமாதேவி வந்ததைச் சிற்பி கவனிக்கவில்லை. குமுதவல்லி பார்த்துவிட்டாள். சைகையால் குமுதவல்லியை அழைத்துச் சற்றுத் தொலைவில் சென்று, 'குமுதவல்லி! திருமண நாளை நிச்சயித்து விடலாமா?' என்று கேட்டாள்.

வீரமாதேவி கேட்பதன் பொருள் புரியாமல் திகைத்த குமுதவல்லியை நோக்கி, "அதோ பார்! விமானத்தில் கலசம் வைக்க வேண்டியதுதான் பாக்கி. சிற்பி இரவு பகலென்று பாராமல் பணி செய்கிறார். இந்தச் சிற்பத்துடன் எல்லாம் முடிவடைந்து விடும். பிறகு என்ன? சக்கரவர்த்திகள் குடமுழுக்குக்கு நாள் பார்த்து விடுவார். அதற்குப் பிறகு உங்கள் திருமண நாள் தானே?" என்றாள் வீரமாதேவி.


இளவரசி மிகப் பொல்லாதவள் - இல்லாவிட்டால் நாணத்தால் தலைகுனிய வைத்துவிடும் கலையைக் கற்றிருப்பார்களா? என்று குமுதவல்லி எண்ணி, மறுமொழி கூறாமல் அங்கிருந்து சிற்பியை நோக்கிச் சென்றாள். வீரமாதேவியும் அவளைப் பின் தொடர்ந்தாள். இளவரசி வந்திருப்பதைக் குமுதவல்லி தெரிவித்தாள். சிற்பியின் சிந்தை கலையவில்லை. சிற்பி கருமமே கண்ணாக இருந்தான்.

திருமகள் - செந்திருவின் சிற்பத்தின் வில் போன்ற புருவத்தைச் செதுக்கி, கருணை விழிகளை அமைத்த பிறகே அவனுக்கு இந்த உலகத்தின் நினைவே வந்தது.

அருகே குமுதவல்லியும், வீரமாதேவியும் நிற்பதைக் கண்டவுடன் திடுக்கிட்டு எழ முயன்ற மாணிக்க சேகரனைப் பார்த்து, கையமர்த்தி, "சக்கரவர்த்திகள் இங்கிருந்திருந்தால் தங்கள் கரங்களுக்கு பொற் கங்கணமிட்டிருப்பார்கள். உம்; அதனால் என்ன - இன்னும் சில நாள்களில் உங்கள் திருமண நாள் அன்று சக்கரவர்த்தி

கனகாபிஷேகம் செய்து விடுவார் பாருங்களேன்!" என்று கூறி, கலகலவென நகைத்தாள்.

சிற்பியின் விழிகள் கலங்கின. பூரணமாக உருவான திருமகள் சிற்பத்தை வெற்றிகரமாகப் பணி முடிந்துவிட்ட உள்ளத் திருப்தியில் அவனுக்குப் பேச நா எழ வில்லை.



"ஆடவல்லான் அருளால் எல்லாம் நல்லபடியாக முடிவடைந்தன. கருவூர்ச் சித்தரின் ஆசி, அரசர் கொடுத்த நல்வாய்ப்பு, தாங்கள் அவ்வப்போது அளித்து வரும் ஊக்கம்..." என்று வார்த்தைகளை முழுமையாக்க முடியாமல் தவித்தான்.

"கருவூர்ச் சித்தர் நேற்று இங்கு வந்திருந்தார். இன்னும் இரண்டு நாள்களுக்குள் கோயில் பணி அனைத்தும் முடிந்துவிட வேண்டும் என்று அன்புடன் வற்புறுத்தினார். பொதிகை மலைக்குப் புறப்பட்டுச் செல்ல நாள் குறித்துவிட்டாராம்" எனறான் மாணிக்க சேகரன்.

வீரமாதேவி திடுக்கிட்டாள். "சித்தர் இங்கு வந்தாரா? எனக்குத் தெரியாதே. பொதிகை மலைக்குச் சென்றால் மீண்டும் சோழ நாட்டிற்குத் திரும்பமாட்டாரே? அவர் இருக்கும்போதே குடமுழுக்கு நடத்த வேண்டுமே - ஐயோ, வடக்கே இருந்து எந்த விதச் செய்தியும் வரவில்லையே. சக்கரவர்த்திகள் கங்கைக் கரைக்குச் சென்றாரா? விமானத்திற்கும், பெருவுடையாருக்கும் கங்கை நீரால் அபிடேகம் செய்ய வேண்டும் என்ற சக்கரவர்த்திகளின் எண்ணம் நிறைவேற வேண்டுமே" என்று பதைபதைப்புடன் கூறிய வீரமாதேவி, சிற்பியை நோக்கி, "சித்தர் வேறு என்ன தெரிவித்தார்? இங்கே வந்தாரா? எவ்வளவு நேரம் இருந்தார்? ஐயோ, எனக்குத் தெரியாமல் போய்விட்டதே?" என்று கவலையுடன் பேசினாள்.

வீரமாதேவி அங்கிருந்து சென்றவுடன் மாணிக்க சேகரன் அருகிலுள்ள பாறையில் அமர்ந்தான். பணிகளை முழுமையாக முடித்துவிட்டதில் அவனுக்கு முழு நிறைவு இருந்தாலும், இதுவரை இல்லாத களைப்பும் சோர்வும் அவனிடம் சேர்ந்தன. அதையறிந்த குமுதவல்லி அவன் கரத்தை எடுத்து முத்தமிட்டு அவனைத் தன் மடியில் கிடத்தி அவன் தோள்களைப் பிடித்துவிட்டு "இந்தக் கரங்களுக்கு உரிமை உடையவள் என்பதில் பெருமைப்படுகிறேன்" என்று அவன் கரங்களை எடுத்துத் தன் விழிகளில் புதைத்துக் கொண்டாள்.

மாணிக்க சேகரனுக்கு அப்போது ஏற்பட்டது மயக்கமா, சோர்வினால் ஏற்பட்ட களைப்பா? மாணாக்கன் ஒருவன் வந்து அழைத்தபோதுதான் அவன் கண் விழித்தான்.

"இளவரசியார் பழையாறை புறப்படப் போகிறார். தங்களையும் உடன் அழைத்துச் செல்ல விரும்புகிறார். பழையாறை சோதிடரிடம் குடமுழுக்குக்கு நாள் பார்க்க வேண்டுமாம்" என்று தெரிவித்தான்.

பழையாற்றைக்குச் சென்ற வீரமாதேவி சோதிடரிடம் செல்லாமல், அரிந்தவன் மாதேவியின் மாளிகைக்குச் சென்றாள். கடந்த சில நாள்களாக அவள் பேச்சும், சுய நினைவுமில்லாமல் படுத்துக் கிடப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

'அரிந்தவன்மாதேவியின் இறுதி நாள்கள் நெருங்குகின்றன. சுயநினைவு வரும்போது, சக்கரவர்த்திகளை உடனே காண வேண்டும் என்று தன் இறுதி விருப்பத்தைத் தெரிவிக்கிறார்கள்' என்று மருத்துவர் கூறியது கேட்டு, வீரமாதேவி என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தாள்.

வடக்கே சென்றிருக்கும் சக்கரவர்த்திகளுக்கு, அரிந்தவன்மாதேவியின் உடல் நிலை குறித்துத் தெரிவிக்கக் கூடாது என்று சித்தர் ஏன் சொன்னார்? தெரிந்தால், கங்கைப் பயணத்தை இடையிலே நிறுத்தித் திரும்பி விடுவார் என்பதால் இருக்கலாம். கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்குச் செய்யும் எண்ணம் நிறைவேறாமல் போய்விடும். அபசகுனம் போல் அந்தச் செய்தி அமைந்து விடலாம். ஒரு வேளை அரிந்தவன்மாதேவி நிரந்தர நித்திரை கொண்டுவிட்டால் அப்போதும் அரசர் பயணத்தை முடிக்காமல் திரும்பி விடலாம் அல்லவா? என்ன செய்வது என்று தெரியாமல் வீரமாதேவி கவலையுடன் நின்று கொண்டிருக்கும்போது அதோ... கருவூர்த் தேவர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

மேகம் மூடிய இருண்ட வானத்தில் 'பளிச்'சென்று வெண்மதி தோன்றியது போல் அந்த வெண்தாடித் தேவர் வந்து கொண்டிருந்ததை விழி மூடாது நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் வீரமாதேவி.

(தொடரும்)

பீஹார் நாடோடிக் கதை

இளைய அமுதம்

ாரிப்பு : குண்டு மணி

இரு நண்பர்கள்

ஓர் ஒட்டகமும் ஒநாயும் நெருங்கிய சிநேகிதர்களாக இருந்தன. காட்டில் அவை இரண்டும் சேர்ந்து வாழ்ந்தன. ஒட்டகம் புத்திசாலி; ஆனால் ஒநாயோ தந்திரசாலி! ஒநாய் தன் தந்திர முறைகளில் ஒட்டகத்திடமிருந்து நன்றாக வேலை வாங்கியது. ஒட்டகத்தின் முதுகில் ஒநாய் சவாரி செய்தபடியே பல சௌகரியங்களை அடைந்தது. ஒட்டகம் நல்ல குணம் படைத்திருந்ததால் ஒநாயின் சில விஷமங்களைப் பொறுத்துக்கொண்டது.

ஒருநாள் ஒநாய் ஒட்டகத்துடன் ஒரு கரும்புத் தோட்டத்துக்குச் சென்றது. கரும்புத் தோட்டம் ஒரு நதியைத் தாண்டி இருந்தது. ஆகவே ஒநாய் ஆசை காட்டி, நதியை அதன் முதுகில் ஏறிக் கடந்து கரும்பை ருசிக்கலாம் என்று தெரிவித்தது. அதன்படியே நடந்தது. அவை இரண்டும் கரும்புத் தோட்டத்தில் கரும்புகளை ருசித்துச் சாப்பிட்டன. ஒநாய் கணத்தில் கரும்பைச் சாப்பிட்டதில் திருப்தியடைந்து, சில்மிஷம் செய்யத் தீர்மானித்தது. ஒட்டகம் கரும்புகளை ரசித்துத் தின்று கொண்டிருக்கும்போது ஒநாய் ஒலமிட்டது. ஒட்டகம் ஒநாயைக் கூக்குரலிடாமலிருக்கும்படி வேண்டியது. 'ஒலமிடுவது என் பழக்கம்,' என்று சொல்லிவிட்டு ஒநாய் தொடர்ந்து ஒலமிடத் தொடங்கியது. அது மட்டுமல்ல; அது ஓடி ஒளிந்தும் கொண்டது.

கரும்புத் தோட்டத்துச் சொந்தக்காரர் பெருந்தடியுடன் வந்து சேர்ந்தபோது பருத்த உடல் கொண்ட ஒட்டகத்தினால் ஓடித் தப்பிக்க முடியவில்லை. ஆகவே அந்த முரட்டு மனிதனிடம் செம்மையாக உதை வாங்கிக் கொண்டது. நல்ல அடிபட்ட ஒட்டகம் வெளிப்பட்டபோது ஒநாயும்



அதனுடன் வந்து சேர்ந்து கொண்டது. ஒட்டகம் தனக்குள்ள கோபத்தை வெளிப்படுத்தவில்லை. அது புத்திசாலித்தனமாகத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டது.

ஒட்டகத்தின் முதுகில் ஒநாய் ஏறிக் கொண்டது. அவை நதியைக் கடக்கத் தொடங்கின. நதியின் மத்தியை அடைந்தபோது ஒட்டகம் நின்று நதி நீரில் உருளத் தொடங்கியது. ஒநாய் அப்படிச் செய்யாமலிருக்கக் கெஞ்சியது. அந்தத் தருணத்தில் ஒட்டகம் இப்படி நீரில் உருளுவது தன் பழக்கம் என்று சொல்லி ஒநாயை நதிநீரில் உருட்டிவிட்டது. ஆழத்தில் ஒநாய் மூழ்கிவிட்டது. தந்திரசாலி ஒநாயும் அதன் சில்மிஷத்துக்கான தண்டனையைப் பெற்றுவிட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

முதல் பரிசு நூல்

■ மத்திய சர்க்கார் 1955ஆம் ஆண்டு முதல் முதலாக நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசுபெற்ற தமிழ் நூல் ஓர் அறிவியல் நூலாகும். நா.கி. நாகராஜன் எழுதிய 'ராமுவும் நானும்' என்ற நூல்தான் முதல் பரிசு பெற்ற நூல் என்ற பெருமையைப் பெறுகிறது.

■ இருபதாம் நூற்றாண்டில் குழந்தைப் பாடல்கள் எழுதும் பணியைத் தொடங்கி வைத்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. கவிமணி 1901 ஆம் ஆண்டே குழந்தைப் பாடல்களை எழுதத் தொடங்கிவிட்டார். கவிமணியின் 'மலரும் மாலையும்' குழந்தைச் செல்வங்களுக்கு அரிய பொக்கிஷம்.

■ 201 குழந்தை எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் பற்றிய 'குழந்தை எழுத்தாளர் - யார், எவர்?' என்ற நூலை, குழந்தை எழுத்தாளர் சங்கமே 1961இல் வெளியிட்டது. அதுவே முதல் முதலாகத் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி வெளிவந்த தொகுப்பு நூல். அதனைத் தொகுத்தவர், குழந்தைகளுக்கான நூல்கள் பலவற்றைப் படைத்த ரத்னம்.

■ பொருளற்ற பாடல்களை (non sense rhymes) ஆங்கிலத்தில் எழுதி உலகப் புகழ் பெற்றவர் எட்வர்ட் லியர்.

■ முந்நூறுக்கும் மேற்பட்ட ஈசாப் குட்டிக் கதைகளில் பெரும்பாலானவற்றில் மிருகங்களும், பறவைகளுமே பேசுகின்றன. ஆறறிவு மனிதர்களைக் கொண்டு அறிவுரை வழங்குவதை விட ஐந்தறிவுள்ள மிருகங்கள், பறவைகளின் உரையாடல்கள் மூலம் உண்மையை உணர்த்துவது நலம் என்று ஈசாப் கருதியிருக்கலாம்.

ஒரு மாணவ மணியின் மகத்தான சாதனை!



ராணா

குறி தப்பாது எய்யும் வல்லமை படைத்தவன் அர்ஜுனன். அதனால்தான் விளையாட்டுத் துறையில் வல்லவர்களுக்கு அர்ஜுனா விருது வழங்கப்படுகிறது.

அர்ஜுனா விருது வழங்கப்பட்ட மான்ஷீர் சிங், விருது வழங்கப்படும் தருணத்தில் கனடாவில் காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காகப் பயிற்சியில் மூழ்கியிருந்தார். அவர் பயிற்சிகள் வீண் போகவில்லை. விக்டோரியாவில் மான்ஷீர் சிங் தங்கப்பதக்கம் சூடி இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தார். இவரது பாட்டி ஜாஸ்பீர் சோதிக்குப் பேரன் நேரில் அர்ஜுனா விருது பெறவில்லையே என்ற ஆதங்கம். பாட்டி ஜாஸ்பீர் சோதிக்குத் தம் குடும்பத்தில் நால்வர் அர்ஜுனா விருது பெற்றதில் அளவற்ற பெருமை. குதிரையோட்டங்களில் எச்.எஸ். சோதி, போலோ ஆட்டத்தில் ஆர்.எஸ். சோதி, துப்பாக்கி சுடும் போட்டியில் பேரன் மான்ஷீர் சிங், குதிரையோட்டங்களில் பேரன் ஆதிராஜ் சிங் என்று நால்வரும் குடும்பத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மான்ஷீர் சிங்குக்கு 27 வயதாகிறது. அவர் பிர்லா இன்ஜினியரிங் நிர்வாக கம்பெனியில் அதிகாரி.

புது டில்லியில் வந்திறங்கிய காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் ஹீரோக்களில் புனித ஸ்டீபன் கல்லூரி மாணவன் ராணாவுக்கே அதிக வரவேற்பு. ராணா வசிக்கும் புஷ்ப விஹார் பேட்டை வாசிகள் விமான நிலையத்துக்கே வந்து தாரை, தப்பட்டைகளுடன் வரவேற்றனர். பதினெட்டு வயது ஜாஸ்பால் ராணா விக்டோரியா காமன்வெல்த் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றது தனிச் சிறப்பு. இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஜாஸ்பால் ராணா மிலானில் நடைபெற்ற உலக அளவிலான துப்பாக்கி சுடும் போட்டிகளில் ஜூனியர் சாம்பியனாகத் தங்கப் பதக்கம் பெற்றார். ஒரு துரதிர்ஷ்டம், இந்த மிலான் போட்டிக்குச் செல்லும் முன்புதான் ராணாவின் மோட்டார் சைக்கிள் திருடு போய்விட்டது. காமன்வெல்த் போட்டி வெற்றியாளராக டில்லி திரும்பியபோது அவருக்கு 'ஸ்பான்சர்' ஜேஸிடி நிறுவனம் மாருதி ஜிப்சியையே பரிசாக வழங்கிவிட்டது.


ராணாவுக்கு விக்டோரியாவுக்கு 'கோச்'சாகச் சென்றவர் சன்னி தாமஸ். இவர் துப்பாக்கி சுடும் போட்டியில் முன்னாள் தேசிய சாம்பியன். இளம் மாணவமணி ராணாவுக்கு உற்சாகமூட்டி, சிரிக்கவைத்து, விக்டோரியாவில் 'டென்ஷன்' எழாமல் பார்த்துக் கொண்டார் 'கோச்' தாமஸ். விக்டோரியா விளையாட்டு கிராமத்தில் பயிற்சி நேரம் தவிர மற்ற நேரத்தில் சீட்டு விளையாடிப் பொழுது போக்கினாராம்.

ராணாவின் தந்தை, என்.எஸ். ராணா தேசியப் பாதுகாப்புப் படையில் 'கமாண்டோ'வாகப் பணிபுரிந்தவர். அவர் தம் புதல்வனுக்குப் பயிற்சி அளித்தவரும்கூட.

மாணவ மணி ராணாவுக்கு ஜேஸிடி நிறுவனம் மான்யத் தொகையை மாதம் ரூபாய் பத்தாயிரமாக உயர்த்தியிருப்பது சர்வ தேசப் பெருமைக்கு வழங்கும் மதிப்பீடு.

ஹிரோஷிமா ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடந்துக் கொண்டிருப்பதால் ராணா அதி தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டு, அங்கும் இந்தியாவின் பெருமையை உயர்த்துவார் என்று எதிர்பார்ப்போம். ●

சில யோசனைகள்



■ சிறுவர் சிறுமிகளை, அம்மா வெங்காயத்தை உரிக்கச் சொன்னால், அப்படி உரிக்கும் போது அவர்களுக்குக் கண் எரிச்சலுடன் நீரும் கொட்டும். அப்படி நேராமலிருக்க, வெங்காயத்தை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு வைத்து, ஒருநாள் இரவு முழுதும் அந்தப் பிளாஸ்டிக் பை அடங்கிய வெங்காயத்தைக் குளிர்பதனப் பெட்டியில் வைத்திருந்தால், வெங்காயத்தை எளிதாக உரிக்க முடியும்; கண்களிலிருந்து நீர் கொட்டுவதும் இருக்காது.

■ மெழுகுவர்த்திகள் நீண்ட காலம் உழைக்க, அதனை ஏற்றுவதற்கு முன்னால், உப்பைத் தடவி வைத்து விட்டுப் பிறகு ஏற்றினால் போதும்.

■ கம்பளி ஆடைகள் சுருங்கிப் பழைய தோற்றம் அளித்தால் கவலைப்படவேண்டாம். அந்த ஆடையை ஒரு கண்ணாடிக் குப்பியைச் சுற்றி வைத்து, அந்தக் குப்பியில் வெந்நீர் அடைத்துச் சிறிது நேரம் வைத்திருங்கள். உங்கள் கம்பளி உடை சுருக்கங்கள் மறைந்து விடும். ●


கிராமத்து வீடு ஒன்றில் சித்தி —
எங்கே போனா அந்தச் சிறுக்கி?
இங்கே தான் விளையாடிட்டு இருப்பா.
ஏன். குழந்தை அழுது. அதைப் பார்க்காம அப்படி என்ன விளையாட்டு வேண்டிக்கிடக்குது?
பொய்
செண்பகத்தைக் கூவி அழைத்துக் கொண்டே வெளியே வந்த சித்தி —
எங்கே எல்லாரும் ஓடுறாங்க?
அங்கே ஷூட்டிங் எடுக்கிறாங்களாம்!
ஒரு பெண்ணிடம்
ஷூட்டிங் எடுக்கிற இடத்திலே செண்பகமும் இருந்தா வரச்சொல்றியா?
அவ வர மாட்டா! அவ நடிக்கப் போறா!
நடிக்கவா?
சித்தி கொடுமையை மையமா வச்சி எடுக்கிற படமாம் அது!
சித்தி ஷூட்டிங் நடக்கும் இடத்துக்கு விரைந்தாள் —
என் மானம் மரியாதை எல்லாம் போச்சு! என் கொடுமைகளையெல்லாம் சொல்லிப் புலம்பி வைப்பாளே!
ஐயோ போச்சு!...
கதை:- நரேந்திரன்
படம்:-


சித்தி அங்கே டைரக்டர் செண்பகத்துடன் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தாள்~
முதல்லே நடிக்கிறேன்னு ஒத்துக்கிட்டே. இப்போ மாட்டேங்கறே?
சித்தி கொடுமை பற்றிய படம்னு இப்போ தானே சொல்றீங்க. ஊர் உலகம் சொல்றதுமாதிரி என் சித்தி கொடுமைக் காரங்க கிடையாது. இறந்த என் அம்மாவுக்கும் மேலே என்னை பாது காத்து வர்றவங்க என் சித்திதான். அதனால நான் நடிக்கலை.
அப்போ ஊரார் சொன்னதெல்லாம்..?
..பொய்! சித்தி தேடுவாங்க. நான் வரேன். என் தம்பி பாவம், நான் அவனோட இல்லைன்னா அழுவான்.
சித்தி செண்பகத்தை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தாள்~
என்னதான் நான் உன்னைக் கொடுமை..
..பண்ணினாலும், நீ படத்திலே நடிக்கக்கூட மாட்டேன்னுட்டியே! அது போதும் மகளே! இனிமேல் நீயும் என் செல்லக் குழந்தைதான்! நாலுபேர் மத்தியிலே என் மானத்தைக் காப்பாத்திட்டே, என் தங்கம்!
- முற்றும் -

வருமுன் காப்பது விவேகம்

எஸ். இராஜரத்தினம்

'வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்.' 'நாளை நடப்பதே யாரே அறிவார்? உயர்வும் தாழ்வும் சகடக்கால் போல் மாறி மாறி வரும், பிறந்த அன்றே இறப்பது உறுதி, இவையெல்லாம் நாம் அடிக்கடி கூறிக்கொள்ளும் உண்மைகள். வாழ்வு அநித்தியம் என்பதால் ஆயுள் பாதுகாப்பு அவசியம் என்பது இப்போது எல்லாரும் ஓரளவு உணர்ந்த உண்மை. உணராத உண்மை என்னவென்றால் இறப்பு என்பதைத் தவிர வாழ்வில் பலவிதப்பட்ட இடர்ப்பாடுகள். தொந்தரவுகள், நோய், விபத்து, களவு கொடுத்தல் ஆகிய பல எதிர்பாராத விளைவுகளும் கூட எதிர்பார்க்க வேண்டியவையே. இவற்றை முன்கூட்டியே நாம் உணர்ந்தால் அவற்றில் சிலவற்றைக் கட்டுப்படுத்த முடியலாம். முடியாத வரையில் அதற்கேற்ற முறையில் பாதுகாப்பைத் தேடலாம்.

தேவை ஒரு திட்டம்

நோய் வரலாம். தடுப்பு ஊசி போட்டுக்கொள்கிறோம். சுற்றுப்புற சுகாதாரத்தை அனுசரித்து நோய் வரும் வாய்ப்பைக் குறைக்கிறோம். வெளியில் உண்ணுவதில் எச்சரிக்கையாகச் செயல்படுகிறோம். அத்துடன் உடல் நலப் பாதுகாப்பு (Health Insurance) திட்டத்தில் போதிய அளவு சக்திக்கேற்ப சேருகிறோம். இதில் வரக்கூடிய அபாயத்தை உணர்கிறோம். இரண்டாவதாக அதைக் கட்டுப்படுத்தும் செயலில் இறங்குகிறோம். மூன்றாவதாக நோய் வந்தால் அதற்கு எந்த அளவு செலவு நம்மால் நாமே செய்ய முடியும் என்று உணர்ந்து நமது குடும்ப பட்ஜெட்டில் வேண்டிய தொகையை ஒதுக்குவோம். நான்காவதாக நம்மை மீறிய தொகை தேவைப்படலாம் என்பதால் காப்புத் திட்டத்தின் கீழ் பாதுகாப்புத் தேடுகிறோம். இதை சுருங்கக் கூறின்:- (I) உணர்தல் (II) அளவெடுத்தல் (III) சுயக்கட்டுப்பாடு (IV) காப்புத்திட்டம் (V) மறுபரிசீலனை என்ற பிரிவுகளில் திட்டமிடலாம்.



நாணயம்

நேர்மை, நாணயம், உழைப்பு செழிக்கவும் உங்கள் பொருளாதாரம் கொழிக்கவும் வழிகாட்டும் புதிய பகுதி.

வருவதை முன்கூட்டி உணர்வது உயர்வு

நகை வாங்குகிறீர்கள். பல விலையுயர்ந்த பொருள்களையும் வீட்டில் வைத்திருக்கிறீர்கள். அவை களவு போகலாம். பொருள்கள் பழுதாகலாம். நோய் வரலாம் அதனால் செலவுகள் வரலாம். வருமானம் பாதிக்கப்படலாம். நெருப்பு முதலியவற்றினால் அபாயம் ஏற்படலாம். இருக்கும் வீட்டைக் காலி செய்யவேண்டி நிர்ப்பந்தம் ஏற்படலாம். அப்போது அதிக வாடகை கொடுக்க வேண்டி வரலாம். வீட்டில் திருமண நிகழ்ச்சி நேரலாம். குழந்தைகள் பிறக்கலாம். வேறுசில சுப நிகழ்ச்சிகள் நடக்கலாம். செலவை இழுத்து வைக்கும் அசுப நிகழ்ச்சிகளும் வரலாம். குழந்தைகளின் கல்விக்காகப் பெரிய தொகை எடுக்க வேண்டி வரலாம். சாலை விபத்துகள் நிகழலாம். புது வாகனம் வாங்க வேண்டி வரலாம். இருக்கும் முதலீடுகளில் விலைக் குறைவினால் நஷ்டம் ஏற்படலாம். அதிக முதல் தேவைப் படலாம். இவை எல்லாமே உணர்தல் முதல் படி. இந்த உணர்வே இல்லாது அன்றாடங் காய்ச்சிகளாக வாழ்வது நம் அநேகரது பழக்கம். எதிர்பாரா நிகழ்ச்சிகள் என்று நாம் கூ வது கூறிக்கொள்வதில் அ மாக எல்லாமே எதிர்பார் வேண்டியவையே.

அளவெடுத்தல்

வரக்கூடிய பின் விளைவுக உணர்வது முதல்படி என்ற அது எவ்வளவு தூரம் நம்மை பாதிக்கும், அதன் விலை என் என்ற ஆய்வு இரண்டாம் கட்ட நாம் நமது சட்டைப்பையில் ப இருபது ரூபாய்க்கு மேல் வை தில்லை என்றால் அது கத்தி கப்பட்டுக் களவாடப்பட்டாலே காணாமல் போனாலோ கவலை படப் போவதில்லை. ஆனால் எ பாராத விருந்தாளிகள் போ பல விளைவுகள் கணிசமா செலவில் முடியலாம். வரக்கூ விளைவுகளை அளவு தெரிந்து அதற்கேற்ற அளவில் நாம் பா காப்புத்தேட முடியும். உதார மாக ஜலதோஷம் வந்தால் ஒ பெரிய பாதுகாப்புத் தேவையில்லை சாதாரணமான காய்ச்சலு நாம் மாதாந்திர பட்ஜெட் வைத்தியத்திற்காக ஒதுக் தொகை போதும். ஆனால் இ நோயோ புற்றுநோயோ தாக்க தால் மாதாந்திர பட்ஜெட் தொ யில் சமாளிக்க முடியுமா? இது நேரலாம். அது வந்தால் அத பரிமாணம் நமது சக்தி மீறியதாகையால் வெளிப்பா காப்பு தேவை என்பதை உ கிறோம். அல்லவா?

நாமே ஓரளவு கட்டுப்படுத்தலாம்

பல எதிர்பாராத விளைவுக கக் கருதப்படும் எதிர்பார்ப்புக நம் சொந்த முயற்சிகளால் கட் படுத்த முடியும். நகைக வங்கிப் பெட்டகத்தில் பே லாம். வீட்டில் ஓர் இரும்

பெட்டி வாங்கி பொருள்களைப் பத்திரப் படுத்தலாம். நம் கதவு, ஜன்னல்கள், பலமாக்கப்படலாம். கூடிய வரை நாம் அணியும் நகைகள் மிகக் குறைந்த அளவில் இருக்கலாம். இவை களவைத் தவிக்க அனுசரிக்கும் சுயக்கட்டுப்பாடுகள்.

சில நோய்கள் வர வாய்ப்பு இருக்கும்போது தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாம். வெளியில் நீரோ உணவோ உட்கொள்வதைத் தடுத்துக் கொள்ளலாம். வீட்டில் நாம் அருந்தும் நீரும் உணவும் ஆரோக்கியமாக இருக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளலாம். இவை எல்லாம் நாமே சில பல விபத்துகள் வராமல் இருக்க நாம் எடுக்கும் சுயக் கட்டுப்பாட்டு முயற்சிகள்.

ஏன் குடும்ப நலத்திட்டமே நாம் அதிகப்படியான குழந்தைகளைப் பெற நேர்ந்தால் நமக்கு இருக்கும் குழந்தைகளுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என்பதை உணர்வதால் தானே? திருமணம் எப்போது செய்கிறோம், முதல் குழந்தை எப்போது பெறுகிறோம், வாகனம் எப்போது வாங்குகிறோம் என்ற பல முடிவுகள் தன்னிலை உணர்வு ஏற்படுவதன் மூலமே சிறந்தவையாக இருக்க முடியும். உன்னை அறிந்து கொள், உணர்ந்து கொள் என்ற தத்துவம் அறிவுப் பூர்வமான பொருளாதாரத் தத்துவம் கூட.

காப்புத் திட்டம்

நாமே எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் கட்டுப்படாத இடர்ப்பாடுகள் விபத்துகள் போன்று வருகின்றன. தவிர்க்க முடியாத இந்த விளைவுகளை நாமே நம்முடைய வருமானம் முதலீடுகளின் மூலம் சமாளிக்க முடியாமல் போகலாம். அப்போது தான் நாம் காப்புத் திட்டத்தின் (Insurance) மூலம் நம்மைப் பாதுகாத்துக் கொள்கிறோம். நோய், களவு, நெருப்பு, வாகனம், மூன்றாவது நபர் வாகன விபத்துப் பாதுகாப்புத் திட்டம், தொழில் பாதுகாப்புத் திட்டம் முதலிய பல விதமான பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் நாமே கட்டுப்படுத்த முடியாத விபத்துச் செலவுகளை நம்மைப் போன்ற பலருடன் பகிர்ந்து நாம் செலுத்தும் குறைந்த பிரிமியத்தின் மூலம் பெரிய செலவிலிருந்து பாதுகாத்துக் கொள்கிறோம். அதற்கு காப்புக் கழகங்கள் நமக்கு உறுதுணையாகச் செயல் படுகின்றன. காப்புத் திட்டங்கள் இன்றைய நடைமுறையில் தேவை தான். ஆயினும் இவற்றின் செயல் முறைகளில் குறைகள் பல இருப்பினும் இந்த முறையில் நம்மைப் பாதுகாப்பது தவிர்க்க முடியாதது.

மறுபரிசீலனை

தேவைகள் நாளுக்கு நாள் மாறுகின்றன. எதிர்பார்க்கும் செலவினங்கள், வரக்கூடிய நிகழ்ச்சிகள், விபத்துகள் மாறுகின்றன. அதனால் நம்மைப் பாதுகாத்துக் கொண்டோம். செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்து விட்டோம் என்று நினைத்து நிம்மதியாக இருக்கலாம் என்று செயல் இழந்து விட்டால் நாம் நமது திட்டங்களை மறு பரிசீலனை செய்ய மாட்டோம். அதில் தவறினால் நாம் அந்தந்தக் கால கட்டத்தில் செய்ய முடிந்தவற்றையெல்லாம் செய்யவில்லை என்பதாகும்.

வாழ்க்கையில் வரும் ஏற்றத் தாழ்வுகளை உணர்வது, எதிர் பார்த்துச் செயல்படுவது, இன்றும் என்றும் தேவை.

'அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சென்னை'யின் காரைக்கால் மாவட்டக் கிளை

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை (பதிவு எண் 530/92)யின் காரைக்கால் மாவட்டக் கிளை தொடக்க விழா, காரை – கோவில்பத்து அரசு மேனிலைப் பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது..

விழாவிற்கு கலைமாமணி விக்கிரமன் (தலைவர், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்) தலைமை வகித்தார். காரைக்கால் மாவட்டக் கிளையின் தலைவராக இரா. பகவானந்த தாசன் ஒரு மனதாகத் தேர்தெடுக்கப்பட்டு வரவேற்புரை நிகழ்த்தினார்.



புதுவை சட்டப் பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு ஏ.வி. சுப்பிரமணியன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எம்.எச். காஜிம் அவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

காரைக்கால், திருநள்ளா[ர்] பகுதிகளைச் சேர்ந்த எழு[த்]தாளர்கள் பலர் கலந்து கொண[்டனர்]. இந் நிகழ்ச்சியின் இறுதிய[ில்] திருமேனி நாகராசன் நன்றியு[ரை] கூறினார்.



நடன அரங்கேற்றம்

கனரா வங்கி மேலாளராகப் பணியாற்றும் திரு. அசோகன் அவர்களின் மகள் செல்வி பிரியாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்னை மியூசிக் அகாடமியின் கஸ்தூரி சீனிவாசன் அரங்கில் சிறப்பாக நிகழ்ந்தது.

கலைமாமணி திருமதி உஷா ஆனந்த்திடம் நடனம் பயின்ற செல்வி பிரியாவின் அரங்கேற்ற நிகழ்ச்சியில் ஸ்ரீ டி.எஸ். பார்த்த சாரதியும், திருமதி சித்ரா விஸ்வேஸ்வரனும் கலந்து கொண்டு செல்வி பிரியாவை வாழ்த்தினர்.

செல்வி பிரியா, சென்னை மீனாட்சி பெண்கள் கல்லூரியில் பி.காம். படிக்கும் 16 வயது மாணவி. 8 வயது முதல் நடனம் பயின்று வருகிறவர். ●


நட்சத்திர திருவிளக்கு பூஜை

உலகில் எங்கும் சாந்தியு[ம்] அமைதியும் நிலவவும் பரவிவ[ரு] நோய்கள் கட்டுப்படவும் சந்தா[ன] லாபம், உத்யோக லாபம், த[ன] லாபம் ஏற்படவும் மற்றும் நோ[ய்] நொடிகளிலிருந்து விடுதல[ை] பெறவும் பகவான் ஸ்ரீல[...] காயத்ரி சுவாமிகள் நிகழ்த்[திய] நட்சத்திர திருவிளக்கு பூ[ஜை] சென்னை, திருவல்லிக்கே[ணி] ஹிந்து உயர்நிலைப் பள்ளிய[ில்] சிறப்பாக நடைபெற்றது.

திருமதி ராஜலட்சுமி விக்[கி]ரமன் அவர்கள் குத்து விளக்[கு] ஏற்றி நட்சத்திர திருவிளக்கு பூஜையைத் தொடங்கி வைத்தார்.

திருமணம்

தமிழக அரசின் சார்புச் செயலாளரும், தமிழ் எழுத்தாளருமான முனைவர் சோ. சேசாசலம் அவர்களின் இல்லத் திருமணம் அண்மையில் நடந்தது. மணமகன் எஸ். கோபிநாத்தும், மணமகள் ஆர். லலிதாவும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எல்லா நலனும் பெற்றுச் சிறந்தோங்க 'அமுத சுரபி' வாழ்த்துகிறது. ●





உ.பி. முதலமைச்சர் மாண்பமை முலாயம்சிங் யாதவ், பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகளை தரிசித்து ஆசி பெற்றார். அருகில் ஸ்ரீ பரத்வாஜ சுவாமிகள்.

பாத யாத்திரை

சென்னை ஸ்ரீ ஸ்ரீநிவாச ...கேதனத்திலிருந்து திருமலை வையாவூர் ஸ்ரீ பிரஸன்ன வெங்க டேசப் பெருமாள் திருக்கோயி லுக்கு ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள் முன்னிலையில் 'கலைமாமணி விக்கிரமன் தலைமையில் இரண்டு திருக்குடைகளுடன் 19 ஆவது பாத யாத்திரை 27.9.94 அன்று புறப்பட்டது.

அக்டோபர் 1 ஆம் தேதி செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் வழியாக திருமலை வையாவூர், ஸ்ரீ பிரஸன்ன வெங்கடேசப் பெரு மாள் திருக்கோயிலை பாத யாத் திரைக் குழுவினர் வந்து சேர்ந் தனர்.

இரண்டு திருக்குடைகளையும் திருமலை வையாவூரில் நடந்த விழாவில் 'கலைமாமணி' விக்கி ரமன் தலைமையில் ஸ்ரீமத் சீதா ராம சுவாமிகள் திருக்கோயிலுக்கு ஒப்படைத்தார்கள்.

"பாத யாத்திரை புறப்பட்ட போதும் திருக்குடைகளை திரு மலை வையாவூரில் ஒப்படைத்த போதும் 'கலைமாமணி' விக்கிரமன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தது குறிப்பிடத்தக்கது. அது அவருக்கு இறையருள் அளித்த பெரும் பேறு" என்று அருளாசி கூறினார் ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள். •



பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாதராஜா மணிவிழா

அண்மையில் இராஜபாளை யத்தில் அறிஞர், நீதிபதி மு.மு. இஸ்மாயில் தலைமையில் வெகு சிறப்புடன் நடைபெற்ற பன் மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாத ராஜா மணிவிழாவில்.

'ராம்கோ' சேர்மன் பி.ஆர். ராம சுப்பிரமணிய ராஜா மணிவிழாக் குழு சார்பில், மணிவிழா நாயக ருக்கு ஒரு லட்சம் ரூபாய் பொற் கிழி வழங்கி மகிழ்ந்தார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிராக்ருதம், பாலி, சம்ஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற் றுள்ள மு.கு. ஜகந்நாத ராஜா, சாஹித்ய அகாடமியின் பரிசும் பாராட்டும் பெற்ற முதல் மொழி பெயர்ப்பாளர் என்பது குறிப்பிடத் தக்கது. இருபதுக்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்பு நூல்களையும், முப்பதுக்கும் மேற்பட்ட படைப்பு இலக்கியங்களையும் இப் பெரு மகனார் உருவாக்கி உள்ளார். வாழ்க பல்லாண்டு! —



பூவை அமுதனின் அறுபதாண்டு நிறைவு பாராட்டு விழா

1951ஆம் ஆண்டு தினத்தந்தியில் முதல் துணுக்கு எழுதிய திரு. எஸ். ஆர். கோவிந்தராமன் பிறகு பூவை அமுதனாக இதுவரை இரு நூறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி எழுத்துலகில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுள்ளவர்.

எழுத்தாளர் பூவை அமுதனின் அறுபதாண்டு நிறைவு பாராட்டு விழா, நூல் வெளியீட்டு விழா சென்னை, மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி ஹாலில் நடந்தது.

விழாவிற்கு கலைமாமணி விக்கிரமன் தலைமை தாங்கினார்.

பின்னணிப் பாடகர் சுரேந்தரின் தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிறகு கவிஞர் தேவமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.



விழாவில் 'உள்ளக்க...
உணர்வலைகள்', 'பெயர் பிற...
எப்படி?', 'தாழ்வு மனப்பா...
யைத் தவிர்ப்பது எப்...
'குடும்பத்தில் குழப்பங்க...
தவிர்ப்பது எப்படி?', 'அன்...
தேடி', 'பாரதியும் நண்பர்க...
'அழகு தேவதை', 'கொ...
வேந்தன் கதைகள்', 'நீல அன்...
'மகுடம் பறித்த மாயாவி' ...
நூல்கள் வெளியிடப்பட்டன.

நூல்களை தமிழ் வளர்...
துறை இயக்குநர் ட...
சி.செல்வராஜ் வெளியிட ...
மகாத்மா காந்தி நூல் நின...
காப்பாளர் கே. மகாலிங்கம் ...
படிகளைப் பெற்றுக் கொண்...


உவமைக் கவிஞர் ...
வாழ்த்துரை வழங்க, சிறப்...
ஆற்றினார் டாக்டர் பூவண்ண...

பூவை அமுதனின் ...
புரைக்குப் பின் சேது ...
லிங்கம் நன்றி கூறினார்.

"பூவை அமுதனின் நூல்...
வெளியிட்ட பதிப்பகத்தா...
அனைவரும் ஒன்று சேர்ந்து ...
தாளர் பூவை அமுதனின் விழ...
சிறப்பாக நடத்தியது மகி...
யைத் தருகிறது. எழுத்தா...
பதிப்பகத்தார்கள் உறவுக்கு ...
விழா ஓர் எடுத்துக்காட்டு" ...
கலைமாமணி விக்கிரமன் ...
னார்.

ஸ்ரீ இந்து பப்ளிகேஷன் அதிபர் திரு. விகரு. இராமநாதன் – திருமதி இந்திரா இராமநாதன் தம்பதியின் மணிவிழா நிகழ்ச்சி 28.9.94 அன்று சிறுகூடற்பட்டியில் சிறப்புற நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும், பதிப்பாளர்களும் திரளாக வந்திருந்து வாழ்த்திச் சிறப்பித்தனர். 'அமுதசுரபி'யும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

— ஆசிரியர்



சங்கப்பலகை

பெண்களைப் போற்றதும்

(ஆசிரியர் - சுபஸ்ரீ. வெளியீடு - பஸ்ரீப்ரியா பதிப்பகம், 1-88 ாசகோபாலபுரம், புதுக்கோட்டை 622003. பக்கங்கள் - விலை - ரூ. 25/-)

பல பிரபல பத்திரிகைகளில் வெளியான தமது சிறுகதைகளைத் தொகுத்துள்ளார் ஆசிரியர் சுபஸ்ரீ. தைகளில் பெண்களின் மனப் பாராட்டத்தையும், பிரச்னை ளையும் மிக ஆழமாக விவரித்து, தாபாத்திரங்களுடன் ஒன்றி டுகிறார் ஆசிரியர்.

— எம். சகுந்தலாதேவி

திரைப்படப் பாடல்கள் இலக்கியமாகுமா?

(ஆசிரியர் - சேயோன். பிரசுரம் முரளி பதிப்பகம், T-6, மகா லக்ஷ்மி, 80-82, நாட்டு சுப்பராய முதலித் தெரு, மயிலாப்பூர் - சென்னை - 4. விலை - 25.00).

இன்று மக்கள் மனதில் அழி ாத இடத்தைப் பெற்றிருப்பது திரைப்படம். தெருவில் போகும் ாமரன் கூடத் திரையில் வரும் இசைப்பாடலை முணுமுணுத்துச் செல்வதைக் காணலாம்.

அகில இந்திய ரேடியோவில் ணியாற்றும் சேயோன் திரைப் டப் பாடல்கள் இலக்கியமாகும் ன்பதற்கான கருத்துகளைப் ழங்கால இலக்கியங்களோடு ப்பிட்டுப் பார்த்து, தட்டிப் ார்த்து விவரித்திருப்பது மெச்சு ற்குரியது. பல திரைப்படப் ாடலாசிரியர்களின் பாடல்கள் நெஞ்சை நெருடுகின்றன. குறிப் ாகக் கவியரசர் கண்ணதாச ின் பாடல்களில் ஒன்றைத் திரைப்பட ரசிகர்களால் என்றும் றக்க முடியுமா?

"வீடுவரை உறவு வீதிவரை னைவி

காடுவரை பிள்ளை கடைசி ரை யாரோ?"

இந்த நூலுக்கு, தஞ்சை தமிழ்ப் ல்கலைக் கழகத் துணைவேந்தர் வ்வை நடராசன், 'கலைமாமணி' டாக்டர் விக்கிரமன் போன்றோர் அணிந்துரை வழங்கிச் சிறப்பித் திருப்பதிலிருந்தே நூலின் பெரு மையை உய்த்துணரலாம்.

— குண்டுமணி

கம்ப்யூட்டர் ஒரு குழந்தை விளையாட்டு

(ஆசிரியர் - திருமதி தர்மா ராஜாராமன். தமிழாக்கம் - திருமதி, சாந்தா ரங்கராஜன். வெளியீடு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட் ரியல் எஸ்டேட், சென்னை - 98. பக்கங்கள் - 86. விலை - ரூ. 25/-)

'Computer a child's play' என்ற ஆங்கில நூலே, தமிழ் மக்கள் பயன் பெறும் வகையில் 'கம்ப் யூட்டர் ஒரு குழந்தை விளையாட்டு என்ற பெயரில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. நாளைய உலகம் கணிப்பொறி உலகமாக இருக்கப் போகிறது. அதன் முக்கியத்துவம் கருதி சிறுவர்களும் ஆர்வமுடன் விளையாட்டைப் போல் கற்றுப் பயன் பெற இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டி.

— தேனி. தேன்மொழி

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் பற்றிய சுவையான செய்திகளும் வரலாறும்

(பதிப்பாசிரியர் - லேனா தமிழ் வாணன், எம்.ஏ., வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம், தணிகா சலம் சாலை, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - 92. விலை - ரூ. 14/-)

எடுத்த எடுப்பிலேயே அந்த அமெரிக்க அதிபரின் வெற்றிக்கு அடித்தளம் எது என்று ஆராய்ந்து சொல்லி தற்கால இளைஞர் களிடையே நம்பிக்கை ஊட்டுகிறது இந்நூல். வரைபடத்தில் கீழ் மட்டி விருக்கும் 'ஹோப்' என்ற சாதாரண ஊரில் பிறந்த பில் கிளிண்டன் எப்படித் தம் சுறு சுறுப்பால், முன்னேற்றமே கருதும் தம் எண்ணத்தால், விடாமுயற்சி யால் ஒரு நாட்டின் அதிபராக உயர்ந்தார் என்பதைப் பல வாழ்க்கைச் சம்பவங்களுடன் அப் பட்டமாக விவரிக்கிறது. 'ஹோப்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கே 'நம்பிக்கை' என்றுதானே பொருள்?

— கவிஞர் வேதம்

குடும்பவிளக்கு

(ஆசிரியர் - பாவேந்தர் பாரதி தாசன். வெளியீடு - சக்தி பப்ளி கேஷன்ஸ், 110 டி.எஸ்.வி. கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.)

நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்று சொல்வதற்குரிய வகையில் குடும்பவிளக்கான தலைவி எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும், அதற்குப் பிற குடும்ப உறுப்பினர்கள் எப்படியெல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதை இனிக்கும் கவிதை வரிகளில் எழி லுறப் படம் பிடித்துக் காட்டியுள்ள பாவேந்தரின் அரிய படைப்பு, மனமக்களுக்குத் திருமண அன்ப ளிப்பாக அளிக்க ஏற்ற இனிய படைப்பு.

— கு. சண்முகசுந்தரம்

பள்ளி மாணவர்களுக்குக் கிருபானந்தவாரியார்

(ஆசிரியர் - நீலவன். வெளியீடு - மணியம் பதிப்பகம், 39, இரத்தின முதலித் தெரு, குறிஞ்சிப்பாடி - 607 302. தெ.ஆ. வள்ளலார் மாவட்டம். பக் கங்கள் - 128. விலை - ரூ. 20.00).

கிருபானந்தவாரியார் சுவாமி களின் வாழ்க்கை வரலாறு. பள்ளி மாணவர்களுக்கேற்ற நடையில் தரப்பட்டுள்ள இந்நூலில் நூலாசி ரியரது அனுபவமும் ஆற்றலும், நூல் முழுதும் சரளமான மொழி நடையாகப் பரிணமித்துப் பளிச் சிடுகின்றன. ஆசிரியரும் மாணவர் களும் சுற்றுலா செல்வதுபோல் சென்று, இறுதியில் வாரியார் பிறந்த காங்கேயநல்லூர் சென்று, அங்கு சுவாமிகளின் சிலைக்கு மாலை அணிவிக்கும் அஞ்சலி யுடன் நிறைவடைகிறது நூல். மாணவரின் மனதுக்கேற்ற அறிவு வளர்ச்சி நூல்.

— "ஜய்ராம்ஜி"

டால்ஸ்டாய் சொன்ன குட்டிக் கதைகள்

(ஆசிரியர் - இராகுலதாசன். வெளியீடு - அன்னம் புத்தக மையம், 51/1. தெற்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - விலை - ரூ. 10/-.)

குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரும் விரும்பிப் படிக்கக்கூடிய கதைகளாக உள்ளன. குழந்தைகளுக்குக் கதை கூறுவதுபோல், மிக எளிமையாக அதனூடே கருத்தையும் புகுத்திக் காட்டியுள்ளது மிகச் சிறப்பாக உள்ளது.

அந்தரங்கம் அபாயமானது

(ஆசிரியர் - லட்சுமி ரமணன். வெளியீடு - பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 4. பக்கங்கள் - விலை - ரூ. 24/-.)

இரு கதைகளும் அருமை. இக் கதைகளின் மூலமாக கதா பாத்திரங்களின் மனச்சுமைகளை வெகுவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. விலாசினியின் வேட்டை என்கிற நாவல் விறுவிறுப்பாகவும், சஸ்பென்சாகவும் செல்கின்றது.

கிழிந்தவர்கள்

(ஆசிரியர் - மு. முனியாண்டி. வெளியீடு - கபிலன் பதிப்பகம், 4B-2 பெல் காலனி பகுதி II அரசு குடியிருப்பு சத்துவாச்சேரி, வேலூர்-632009. பக்கங்கள் - விலை - ரூ. 15/-)

இன்றைய சூழ்நிலையில் இளம் சமுதாயத்தினருக்கு உள்ள பிரச்னைகளையும், அதன் விளைவுகளையும் வித்யாசமான கவிதைத் தொகுப்பாக அளித்துள்ளதுடன், கவிதைகள் கருத்தாழமிக்கனவாக உள்ளதும் தனிச்சிறப்பாகும்.

காற்று வேலி

(ஆசிரியர் - இருகூரான். வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17. பக்கங்கள் - விலை - ரூ. 18/-)

கயவன் (தோழன்) ஒருவனால் சீரழிக்கப்பட்டு மனப்போராட்டத்துடன், சமுதாயத்தினரையும் எதிர்த்து, இறுதியில் தன் வாழ்வைச் சீரழித்தவனைக் கொலை செய்கிறாள் பவித்ரா. சமூகத்தில் ஒருவன் தீயவனாக இருப்பின், அவன் நிலை இறுதியில் என்னவாகும் என்பதன் படப்பிடிப்பாக அமைந்துள்ளது.

காலம் கனியும்

(ஆசிரியர் - டாக்டர் நீலவன். வெளியீடு - அலைகள் அச்சகம், 36, தெற்கு சிவன் கோயில் தெரு, சென்னை - 24. பக்கங்கள் - விலை - ரூ. 30.00)

சந்தேகம் கொண்ட புலியிடம் (கணவன்) சிக்கிய புள்ளி மானாகிய பூரணி (மனைவி)யின் படைப்பு அற்புதம். பெண்ணின் பெருமையைப் பல திருப்பங்களுடன் அழகாகப் படைத்து, பெண் குலத்திற்கு சிறப்பு சேர்த்திருக்கிறார் டாக்டர். நீலவன் அவர்கள்.

சாதனைக்கோர் பாதை!

(ஆசிரியர் - டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி. வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - விலை - ரூ. 18.00)

'சாதனைக்கோர் பாதை' பல விஷயங்களை விளக்கி, வெற்றி காண வழி வகுக்கிறது. மனதில், உறுதி இருப்பின் எதனையும் சாதிக்க முடியும், 'தடை என்பது நாம் நினைத்தோமேயானால் தடை தான். அது தடையல்ல என்று எண்ணும்போது அது நம்மைக் காக்கும் குடை' என்பதனை அனுபவித்து அறிவுபூர்வமாகக் கூறியுள்ளார். நம் வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தோமேயானால், நாம் நல்லெண்ணங்கள் கொண்ட லட்சிய மனஉறுதி பெறலாம். எதையும் சாதிக்க முடியும் என்கிற எண்ணம் நம் மனதில் துளிர் விட்டு செயல்பட ஆரம்பித்தால், எக் காரியத்தையும் திறம்படச் செயல்படுத்தி, சாதிக்க முடியும் என்பதனை ஆசிரியர் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்.

—எம். சகுந்தலாதேவி

தெனாலிராமன் கதைகள்

(ஆசிரியர் - சம்பந்தம். வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - 148. விலை - ரூ. 18/-.)

மன்னன் கிருஷ்ண ராயரின் அவைக் களத்தில் இ விகடகவி தெனாலிராமன். அ தன் அறிவுக் கூர்மையால் வேறு சூழ்நிலைகளில் நகைச்சு யாயும் அதே நேரத்தில் சி கருத்துடனும் - உரையாடி ம ரிடம் பரிசையும் பெற்றுத் திக வன். செவிவழிக் கதைகள கேட்டு வந்த தெனாலிராம கதைகளை, புத்தக வடிவி சிறுவர்கள் மட்டுமன்றி அ வரும் படித்தின்புறும் வகையி கொணர்ந்திருப்பது வரவே தக்க முயற்சி.

அக்னிச் சிதறல்

(ஆசிரியர் - எம். ராமதா உரிமை - கண்ணதாசன் பு ஆலயம், 109, செக்காலை ரே காரைக்குடி. பக்கங்கள் - விலை - ரூ. 12.00/-.)

'அக்னிச் சிதறல்' எனும் இ புதுக் கவிதை நூல் தமி னையை அலங்கரிக்கும் இ மலர்களில் ஒன்றாக விள கின்றது. சமுதாய சீர்தி எண்ணங்களைக் கவிதைக வடித்திருக்கிறார்.

ஒவ்வொரு கவிதையிலும் சமூகப் பொறுப்புள்ள கவிஞ கோபம் கொப்பளிக்கிறது.

நிலவைப்பிடித்த மக்கள்

(ஆசிரியர் - ஜே. பால் பாஸ் வெளியீடு - அமைதி அ கட்டளை, திண்டுக்கல், 624 பக்கங்கள் - 132. விலை - ரூ. 50/

மரபுக்கவிதைகளாலான கவிதைத் தொகுதி, சிறுவர் ப பிலக்கியக் களத்தில் ஓர் ஒ கீற்று. சிறார்களுக்கு ச உணர்வை அளிக்கவல்ல இயற்கை, சுற்றுச்சூழல் பாதி மானுட ஒழுக்கம், மனித உரி அன்பு, அழகியல் உண தாய்மை போற்றல் ஆகியவற் உள்ளடக்கமாகக் கொண்ட கவிஞர்களின் படைப்புகள் இ பெற்றுள்ளன. சிறுவர் ம களில் வல்லமை மின்ன பாய்ச்சும் ஆற்றல் இவற் குண்டு.

—தேனி. தேன்மொ